விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 23 ஞாயிற்றுக்கிழமை (09.11.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 325

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## தமிழ்ப் பெண்கள் மீது பாலியல் வன்கொடுமை

### புகார் வரவில்லை என்கிறது இந்தியா

(சென்னை)

இந்திய-இலங்கை ஒப்பந்தத்துக்குப் பின்னர், 1980களின் இறுதியில் அமைதி காக்கும் பணியில் இலங்கை வந்து சென்ற இந்தியப் படையினர், தமிழ்ப் பெண்களை பாலியல்வன்கொடுமைக்கு உள்ளாக்கியதாக அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) சமீபத்தில் குற்றஞ்சாட்டியிருந்தமை தொடர்பில் இலங்கை அரசாங்கத்திடமிருந்து இந்திய அரசாங்கத்திற்கு எந்தப் புகாரும் அளிக்கப்படவில்லை என்று இந்திய வெளியுறவுதுறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கருணா என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் நாடாளுமன்றத்தில் பேசுகையில், இலங்கைப் போரின்போது அமைதிப்

23ஆம் பக்கம் பார்க்க....

## கொஸ்லந்தை மண்சரிவு அனர்த்தம்; கைவிடப்படும் நிலையில் மீட்புப் பணி?

(கண்டி)

கொஸ்லந்தை மீரியாபெத்தையில் மண்சரிவு அனர்த்தம் இடம்பெற்ற பகுதியில் இருந்து இதுவரையில் பதினொரு சடலங்களே மீட்கபட்டிருப்பதாக, மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர் கூறியுள்ள அதேவேளையில் மீட்புப் பணிகளுக்கு அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பொதுமக்களிடமிருந்து போதிய அளவில் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை என தெரிவிக்கின்றனர்.

அத்துடன் அதிக ஆழத்தில் இடிபாடுகளும், காணாமல் போயிருப்பவர்களும் புதையுண்டிருப்பதுடன், சடலங்கள் உருக்குலைந்திருப்பதனால் தேடுதல் நடத்துவதில் பயனில்லை என்ற கருத்தும் மக்கள் மத்தியில் நிலவுவதாக மீட்புப் பணிகளுக்குப் பொறுப்பான மேஜர் ஜெனரல் மனோ பெரேரா தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் உதவிக்கு வந்திருந்தார்கள். அவர்களின் உதவியோடு இரண்டு சடலங்களைக் கண்டுபிடித்தோம். ஆனால் நேற்று நான்குபேர் மாத்திரமே வந்திருந்தார்கள். அதேநேரத்தில் சுமார் 100 அடி ஆழத்தில் புதையுண்டிருக்கின்ற இடிபாடுகளையும் உருக்குலைந்துள்ள சடலங்களையும் மீட்பதற்காக தேடுதல் நடத்துவதில் பயனில்லை என்றும் அவர்கள் உணர்கின்றார்கள் என்றார் மனோ

23ஆம் பக்கம் பார்க்க....

## சீன நீர்மூழ்கிகளை இந்தியா, அமெரிக்கா கண்காணிப்பு

(கொழும்பு)

இலங்கை துறைமுகத்துக்குள் சீன நீர்மூழ்கிகள் பிரவேசிக்கத் தொடங்கியுள்ளதை இந்திய மற்றும் அமெரிக்கக் கடற்படைகள் கண்காணித்து வருவதாக ரைம்ஸ் ஒவ் இந்தியா செய்தி வெளியிட்டுள்ளது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனக் கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பல்களின் பிரவேசம் அதிகரித்துள்ளதை அடுத்து, இந்திய மற்றும் அமெரிக்க கடற்படையினர் இணைந்து மேற்கொள்ளும் கூட்டுப் பயிற்சியை மேலும் விரிவுபடுத்த முடிவு

23ஆம் பக்கம் பார்க்க....

## அவமதிக்கிறார் ஐ.நா ஆணையாளர்

### இலங்கை குற்றச்சாட்டு




(கொழும்பு)

***ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் சையித் அல் ஹுசைன் பொறுமையிழந்து வார்த்தைப் பிரயோகங்களை பயன்படுத்தி இறைமையுள்ள தேசமொன்றை நிந்திக்கிறார் என இலங்கை அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.***

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைகக்குழுவால் நடத்தப்படும் விசாரணைகளின் நம்பகத்தன்மை மற்றும் நேர்மை ஆகியவற்றின்மீது இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக தாக்குதல் மேற்கொண்டு வருவதாக ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் சையித் அல் ஹுசைன் கண்டனம் தெரிவித்திருந்தார். .

இது தொடர்பில் அவர் வெளியிட்டிருந்த அறிக்கையில், ஐ.நாவின் இந்த விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு மற்றும் சாட்சியம் அளிக்க விரும்புகின்றவர்களை இலங்கை அரசாங்கம் அச்சுறுத்தி வருவதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் தொடர்பில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் சையித் அல் ஹுசைன் வெளியிட்ட அறிக்கைக்கு இலங்கை அரசாங்கம் பதிலளித்துள்ளது.

ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க இந்தப் பதில் கடி

23ஆம் பக்கம் பார்க்க....

## 7 தமிழ் அகதிகளை பொறுப்பேற்றது பிரேசில்

(கொழும்பு)

ஐக்கிய அரபு குடியரசின் ஜெபல் அலி துறைமுகத்தில் தங்கியிருந்த ஏழு இலங்கைத் தமிழ் அகதிகளை பிரேசில் பொறுப்பேற்றுள்ளது.

2012ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இந்தியாவில் இருந்து 45 பேருடன் அவுஸ்திரேலியாவுக்கு புறப்பட்ட படகு ஒன்று நடுக்கடலில் இயந்திரக் கோளாறு காரணமாக பழுதடைந்தது.

இந்தப் படகில் இருந்தவர்களைக் காப்பாற்றிய சிங்கப்பூர் கப்பல் ஒன்று அவர்களை ஐக்கிய அரபுக் குடியரசில் ஒப்படைத்திருந்தது.

இந்நிலையில், இவர்களை

24ஆம் பக்கம் பார்க்க....

## வத்திக்கான் சி.ஐ.டியினர் இலங்கை வருவர்

(கொழும்பு)

வத்திக்கான் புலனாய்வுப் பிரிவினர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

புனித பாப்பரசர் முதலாம் பிரான்சிஸ் எதிர்வரும் ஜனவரி மாதம் 13-ம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

பாப்பரசரின் இலங்கை விஜயம் தொடர்பிலான பாதுகாப்பு ஏற்பாடுகளை கண்காணிக்கும் நோக்கில்

23ஆம் பக்கம் பார்க்க....

## பொது வேட்பாளர் தெரிவு எப்படி?

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் பொதுவேட்பாளரை, பல விடயங்களையும் கருத்திற்கொண்டு தெரிவு செய்யப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் ராஜதந்திரிகளில் ஒருவரான தயான் ஜயதிலக்க இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

குறித்த பொதுவேட்பாளர், அனை

23ஆம் பக்கம் பார்க்க....

## ஐஸ்கிறீம், யூஸ் நிலையங்கள் மீண்டும் செயற்பட அனுமதி

### 29 நிலையங்கள் இன்று திறக்கப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தினால் யாழ் மாவட்டத்தில் தடை விதிக்கப்பட்ட 59 ஐஸ்கிறீம், ஜூஸ் உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்களில் 29 நிலையங்கள் இன்று முதல் மீண்டும் செயற்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று யாழ்.வர்த்தக சங்கம் அறிவித்துள்ளது.

யாழ். மானிப்பாய் வீதியிலுள்ள வர்த்தக சங்க கேட்போர் கூடத்தில் விசேட ஊடக சந்திப்பொன்று நேறறு சனிக்கிழமை காலை நடைபெற்றது. இதில் வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் மற்றும் ஐஸ் உற்பத்தி விற்பனை செய்யும் வர்த்தகர்களும் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது கருத்து தெரிவிக்கும்போதே யாழ்.வர்த்

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி மகிந்த; கருவுக்கு வாழ்த்து

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஐக்கிய தேசியக்கட்சின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரியவை தொலைபேசியூடாக நேற்று சனிக்கிழமை தொடர்பு கொண்டு தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் கரு ஜயசூரியவை பொது வேட்பாளராக களமிறக்குவதற்கு பொது எதிரணி தீர்மானித்துள்ளதாக வெளியான செய்திகளை அடுத்தே ஜனாதிபதி, அவ

23ஆம் பக்கம் பார்க்க....

## 3ஆவது தடவையும் மகிந்த தேர்தலில் போட்டியிட முடியாது

### ஐ.தே.கட்சி சபையில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட முடியாது என்பதில் நிலையான நிலைப்பாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி இருக்கின்றது. எனவே, இவ்விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினதும் அரசாங்கத்தினதும் நிலைப்பாடு ஒன்றுதான் என்ற ரீதியில் பாராளு மன்றத்தில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் வியாக்கியானம் செய்ய முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சி நேற்று சபையில் தெரிவித்தது.

பாராளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற சபை முதல்வராக இருக்கும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா பாராளுமன்றத்தில் தமக்கிருக்கும் பொறுப்புக்களை

23ஆம் பக்கம் பார்க்க....



SISIL WORLD
இலங்கையில் முதன் முறையாக மூன்று வருட
உத்தரவாதத்துடன் கூடிய
DELL,SINGER,HP,SAMSUNG, LENOVO, ASUS
கணினிகள் இப்பொழுது எம்மிடமிருந்து!




❖ வட்டி இன்றிய கொடுப்பனவு முறை
❖ மூன்று வருட நீடித்த உத்தரவாதம்
❖ டொங்கிள் மற்றும் வைரஸ் கார்ட் இலவசம்
❖ விசேட விலைக்கழிவு

இல-106,கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம் 021-2219291
இல-125,கே.கே.எஸ் வீதி,சுன்னாகம் 021-2242335
இல-17/3,கண்டி வீதி,கிளிநொச்சி 021-2283755
(சி-9008)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மகிந்தவை பதவி கவிழ்க்குமாறு

## மோடியிடம் கோருகிறார் இளங்கோவன்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பதவி கவிழ்க்குமாறு இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் காங்கிரஸ் கட்சியின் தமிழக மாநிலத் தலைவர் எஸ்.இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

மகிந்தவை ஜனாதிபதி பதவியிலிருந்து நீக்கி அதற்கு பொருத்தமான மற்றுமொருவரை பதவியில் அமர்த்துமாறு கோரியுள்ளார்.

தமிழ் மக்களின் நலன்களை உறுதி செய்யக் கூடிய ஒருவரையே பதவியில் அமர்த்த வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை எவ்வாறு பதவி விலக்க வேண்டும் என்பது நரேந்திர மோடிக்கு தெரியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களுக்கு விரோதமாக செயற்படும் அரசாங்கத்தை நீக்க வேண்டியது பிராந்தியத்தின் பலம்பொருந்திய நாடான இந்தியாவின் கடமையாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

மீனவர்களுக்கு தண்டனை விதிக்கப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் ஜனாதிபதி மகிந்த செயற்பட்டுள்ளதாகவும் நாட்டில் ஜனநாயகம் கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்தவை எவ்வாறு பதவி கவிழ்ப்பது என்பது தமக்கு தெரியாது என்ற போதிலும், அதனை எவ்வாறு செய்ய வேண்டும் என்பது இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு நிச்சயமாக தெரியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# தர்ம பரிபாலனசபை நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய தர்மபரிபாலசபைக் கூட்டம் நடந்த சனிக்கிழமை ஆலய சூழலில் அமைந்துள்ள கண்ணன் இல்லத்தில் தலைவர் ச.தேவதாசன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அறங்காவலர் சபை மற்றும் தர்ம பரிபாலன சபை நிர்வாகிகள் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். அறங்காவலர் சபைத் தலைவராக மீண்டும் இ.அன்னலிங்கம் (துன்னாலை), செயலாளராக க.இரத்தின சபாபதி (துன்னாலை) ஏனைய அங்கத்தவர்ளாக வி.அற்புதானந்தன் (துன்னாலை), ச.யாதவானந்தன் (கற்கோவளம்), வ.கருணாமூர்த்தி (வல்லிபுரம்), மா.சிவசண்முகம் (புலோலி), நா.கிருஷ்ணகுமார் (புலோலி) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தர்ம பரிபாலனசபை தலைவராக மீண்டும் ச.தேவதாசன்(கற்கோவளம்), க.விபுலானந்தம்(துன்னாலை)ஆகியோரும்தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக அங்கத்தவர்களாக சு.சிவானந்த சோதி (பொலிகண்டி), வ.சிவானந்த விக்னேஸ்வரன் (துன்னாலை), ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் (மருதங்கேணி), இ.முகுந்தன் (கற்கோவளம்), எஸ்.சிறீதரன் (நெல்லியடி) ஆகியோரும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இக்கூட்டத்தில் 2011,2012, 2013 ஆம் ஆண்டுகளிற்கான கணக்கு அறிக்கைகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. (செ-4)

# பேராசிரியர் சிவசாமி காலமானார்



பேராசிரியர் வி.சிவசாமி நேற்று இரவு காலமானார். அவருக்கு வயது 81. பல்துறை அறிஞரான பேராசிரீயர் சிவசாமி (விநாயக மூர்த்தி சிவசாமி (தோற்றம்- 16.03.1933) புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், பலாலி வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் லண்டன் பல்கலைக்கழகத்தின் சமஸ்கிருத சிறப்புக் கலைமாணி, இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதுமாணி, யாழ் பல்கலைக்கழகத்தின் கௌரவ இலக்கிய கலாநிதி ஆகிய பட்டங்களைப் பெற்றவர்.

சமஸ்கிருதம், தென்னாசிய வரலாறு, இந்து நாகரிகம், தமிழ், நுண்கலை முதலியவற்றில பல்துறை விற்பன்னராக விளங்கும் இவர் வரலாறு, சமஸ்கிருதம், இலக்கிய விமர்சனம், சாஸ்திரிய நடனம், சமஸ்கிருத மரபு முதலிய துறைகளில் நூல்களும், ஆய்வுக் கட்டுரைகளும் எழுதியுள்ளார். பேராசிரியர் சிவசாமி அவர்கள் "பூர்வகலா", "ஸ்ரீ லங்கா தென்னாசிய ஆய்வேடு" ஆகியவற்றின் ஆசிரியராகவும், இந்துக் கலைக் களஞ்சிய ஆலோசனைக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

இவர் யாழ்ப்பாணக் கல்லூரியின் "கலைககொத்து" மாணவர் மன்றத்தின் போசகராகவும், யாழ்ப்பாண தொல்லியல் கழகத்தின் ஆரம்ப செயலாளராகவும், யாழ் பல்கலைக் கழகத்தின் ஆசிரியர் சங்கத்தின் ஆரம்ப செயலாளராகவும் பணியாற்றிய சிறப்பு இவருக்குண்டு. யாழ் பல்கலைக்கழக மூதவை உறுப்பினராக இருபத்தைந்து வருடங்கள் இவர் பணியாற்றியுள்ளார். ஸ்ரீ பரமேஸ்வரன ஆலய முகாமைத்துவ சபை தலைவராக பன்னிரண்டு ஆண்டுகள் இவர் பணியாற்றியுள்ளார்.

தமிழிலும், ஆங்கிலத்திலும் கட்டுரைகள், நூல்கள் எழுதியுள்ளார். இவற்றுள்ளே திராவிடர் ஆதி வரலாறும் பண்பாடும் (1973) எனும் நூல் இவரின் தொடக்க கால நூல்களில் ஒன்றாகும்.

ஆரியர் ஆதி வரலாறும் பண்பாடும் (1976) Some aspects of South Asian Epigraphy (1985), பரதக்கலை (1988), சமஸ்கிருத இலக்கியச் சிந்தனைகள் (1987), தென்னாசிய கலை மரபில் நாட்டிய சாஸ்திர மரபு (1992), இந்துப் பண்பாடு அன்றும் இன்றும் (2005) ஆகியன இவர் எழுதிய நூல்களில சிலவாகும்.

இவருடைய ஆய்வுகளுக்கும் ஆக்க இலக்கியங்களுக்கும் விருதுகளும் பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன. "சமஸ்கிருத இலக்கியமும் விமர்சனமும்" என்ற இவருடைய கட்டுரைத் தொகுப்பு (1989) சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது.

தென்னாசிய செந்நெறி நடனங்கள் ஒரு வரலாற்று நோக்கு (1998) வடகிழக்கு மாகாணப் பரிசு பெற்றது. மேலும் இவரின் திறமையையும், கல்விசார் செயற்பாட்டையும், ஆளுமையையும் பாராட்டி 2002-ம் ஆண்டு வடமாகாண சபை, உயர் விருதான ஆளுநர் விருது வழங்கிக் கௌரவித்ததுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

கடிதங்கள் · அன்பளிப்பு பொருட்கள் · உடுபுடவைகள்

CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392

WESTERN UNION MONEY TRANSFER (ஜி-8989)

பதவி வெற்றிடங்கள்

இன்று அழையுங்கள் நாளை ஆரம்பியுங்கள்

உலகளாவிய ரீதியில் உள்ள Optimo Global Group கம்பனிக்கு 21 இளைஞர், யுவதிகள் தேவைப்படுகின்றனர். புதிய கிளைகளை வடக்கில் ஆரம்பிக்க நீங்கள் திறமையானவரா?

✦ மேற்பார்வையாளர் ✦ முகாமைத்துவ உதவியாளர்

உங்களால் வேலை செய்ய முடியும் எனின் உடனே அழையுங்கள்.

தொடர்புகளுக்கு : 0777981471, 0773551334 (ஜி-9011)

கணினிப்பொறியியாளர்(USA) கற்கைநெறிக்கு 400 டொலர் புலமைப்பரிசில்.

தொழில் வாய்ப்பு அதிகம் உள்ள MCSE பரீட்சைக் கட்டணங்களிற்கான 80 டொலர் பெறுமதி மிக்க வவுச்சர்கள் 5 இனை மைக்ரோசொப்ற் நிறுவனம் இலவசமாக வழங்குகின்றது. கற்கை நெறிக்கான செலவுகளை ICTA வழங்குகின்றது. உடனடிப் பதிவிற்கு தங்களின் முழுப்பெயர் பிறந்த திகதி என்பவற்றை 772 395 895 ற்கு உடன் sms செய்யவும். மேலதிக விபரங்கள் யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகில் உள்ள MCS நிறுவனத்தில். (C-9006)

PC Care
Total IT Solution (8259)

சகல விதமான Laptops களுக்கு Display, Key Board மாற்றுதல் போன்ற அனைத்துவிதமான பழுதுகளுக்கும் உங்கள் வீடுகளுக்கே வந்து திருத்திக்கொடுக்கப்படும்

Address : Manipay Road, Jaffna.
Mobile : 077 4767 123
Tel : 021 23 34 004
E.mail : pccarecontact@gmail.com

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

வீடு தேவை

யாழ். நகரை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்கு தேவை. (8263)

தொடர்புகளுக்கு : 0779522141

Success Language Centre

மொழிக்கற்கைகளுக்கு யாழ்.நகரில் முன்னணி நிறுவனம்

- English-Spoken/Basic/Advanced IELTS/O/L Classes/Pastpaper Classes
- Sinhala - Spoken/Written
- French
- Doetsch

03 Month, 06 month
Certificate Courses (8264)

மொழிகள் அறிய வழிகள் செய்வோம்
11, கஸ்தூரியார் லேன், யாழ்ப்பாணம்.
T.P: 0776408622

நிரந்தர வேலைவாய்ப்பு

உங்கள் வயதுக்கேற்றவாறு நிரந்தர தொழில் மற்றும் தொழிலுக்கேற்ற சம்பளம் 18,000/=, 32,000/= + 18-50 வயது ஆண்/பெண். கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் பால்மா/டொபி/கோடியல்/பிஸ்கட்/டிபிடிபி/கிளவுஸ்/ஜேம்... போன்ற பல தொழிற்சாலைகளில் உற்பத்தி/உதவியாளர்/லேபல்/பொதியிடல்/Loading/unloading போன்ற பிரிவுகளுக்கு உடனடியாக ஆட்கள் தேவை. (நண்பர்கள்/குழுக்கள்/தம்பதியர் ஒரே தொழிற்சாலைகளில்) வருகை அன்றே வேலைக்குச் செல்லலாம். (C-9005)

தொடர்பு: 0776838231/0771116770

DHL விரைவு! பாதுகாப்பு!! நம்பகத்தன்மை!!! THIRUMURUGEN COM NET (Pvt) Ltd.

DHL இன் நேரடி அங்கீகாரம் பெற்ற ஒரே முகவராக விளங்கும்

திருமுருகன் கொம்நெற் (Pvt) Ltd.

தற்பொழுது உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவையினை மூன்று வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

Delivery 3 working days

இல. 271A, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
(ஆல்சிலோன் புத்தகக்கடைக்கு முன்பாக)
T.P: 0212227835 / 0777554528
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது.) (C-9010)


## UNIVERSITY OF JAFFNA - SRI LANKA

### ANNOUNCEMENT

I hereby informed that the University Council at its special meeting held on 08.11.2014 decided to with-hold the results of **Mr.Kanagaratnam Dinushan (Reg. No: 2009/A/31)** and to cancel the eligibility to participate at the 30th Convocation held on 10th, 11th November, 2014.

As such statement dated 13.10.2014 issued to him is hereby cancelled.

Registrar (C-9004) 08.11.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீரா பிரச்சினையை தேசியமாகக் கொண்டவர்களுக்கு தமிழ்பேசும் மக்கள் வாக்களித்து ஏமாந்து வருகின்றனர்

## அமைச்சர் டக்ளஸ் ஆதங்கம்

பிரச்சினைகளை தீராப்பிரச்சினையாக வைத்திருப்பவர்களுக்கே தேசியம் என்று நம்பி வாக்களித்து மக்கள் ஏமாந்துவருகின்றனர் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற பொதுமக்கள் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது மக்களின் அரசியல் உரிமை உள்ளிட்ட அடிப்படைப் பிரச்சினைகளுக்கு உரிய வகையில் தீர்வு காணப்பட வேண்டும். அதனடிப்படையில் தான் நாம் அரசுடன் நல்லுறவைப் பேணி வரும் அதே வேளை, இணக்க அரசியலையும் முன்னெடுத்து வருகின்றோம்.

இவ்வாறான எமது செயற்பாடுகளின் ஊடாக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் செயற்றிட்டங்களை திறம்பட முன்னெடுத்துள்ளோம் என்பதே வரலாறு. இதனைவிடுத்து எதிர்ப்பரசியலின் ஊடாக எதனையும் ஒருபோதும் சாதிக்க முடியாது.

இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஜப்பான் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் மீது அமெரிக்கா குண்டுகளை வீசி தாக்குதல்களை நடத்தி நிர்மூலமாக்கியிருந்தது. ஆனாலும், அழிவுகளை சந்தித்த இரண்டு நாடுகளின் பின்வந்த அரசுகள் அமெரிக்காவுடன் நல்லுறவை பேணியதன் ஊடாகவே சர்வதேச அரங்கில் ஜப்பானும், ஜேர்மனியும் அபிவிருத்தியில் தற்போது முன்னேற்றம் கண்டு வளர்ச்சியடைந்துள்ளதையும் சுட்டிக்காட்டினார்.

இதே போன்றுதான் நாமும் மத்திய அரசுடன் ஒரு இணக்கப்பாட்டையும் நல்லுறவையும் பேணுவதன் ஊடாகவே சுனாமியாலும், யுத்தத்தாலும் பாதிக்கப்பட்ட எமது பகுதிகளை அபிவிருத்தியால் கட்டியெழுப்ப முடியும்.

அந்தவகையில் மக்கள் நலன் சார்ந்து உழைப்பவர்களுக்கு எதிர்காலத்தில் மக்கள் தமது ஆதரவு வழங்கும் போது இவ்வாறான செயற்றிட்டங்களை பன்மடங்காக அதிகரிக்க முடியுமென்றும் சுட்டிக்காட்டினார். (இ-5)

# தலதாமாளிகை குண்டுத் தாக்குதல் மேன்முறையீட்டு மனு ஒத்திவைப்பு

கண்டிதலதா மாளிகை மீது குண்டுத் தாக்குதல் நடத்திய சம்பவம் தொடாபில் தண்டனை விதிக்கப்பட்ட நான்காவது சந்தேக நபர், தீர்ப்பிற்கு எதிராக செய்த மேன்முறையீட்டு மனு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

குண்டுத் தாக்குதல் நடத்திய குற்றத்திற்காக மரண தண்டனையும், 667ஆண்டு சிறைத்டனையும், ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. இந்த தண்டனைகளுக்கு எதிராக குறித்த சந்தேக நபர் மேன்முறையீடு செய்துள்ளார்.

1998 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25ஆம் திகதி இந்த தாக்குதல் நடத் தப்பட்டது. தாக்குதல் சம்பவத்தில் 15 பேர் கொல்லப்பட்டதுடன், மேலும் பத்து பேருக்கு காயங்கள் ஏற்பட்டிருந்தது. முத்துசாமி தர்மலிங்கம் என்ற தண் டனை விதிக்கப்பட்ட நபர் பேராத னையை வதிவிடமாகக் கொண்டவர்.

தலதா மாளிகையில் வெடிக்கப்பட்ட வெடிபொருட்கள் நிரம்பிய லொறியை கண்டிக்கு கொண்டு வந்ததாக தர்மலிங்கம் மீது குற்றப் சுமத்தப்பட்டுள்ளது. முதலாம் சந்தேக நபர் வெடி பொருட்கள் நிறைந்த லொறியை ஓட்டிச் சென்று வெடிக்கச் செய்திருந்தார். கண்டி உயர்நீதிமன்றின் அப்போதைய நீதவான் நம்புவசம் என்பவரினால் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. முதலாம் சந்தேக நபர் நீதிமன்றில் முன்னிலையாகியிருக்கவில்லை.

வழக்கு விசாரணை செய்யப்படும் காலத்திலேயே இரண்டாம் மூன்றாம் சந்தேக நபர்கள் உயிரிழந்துவிட்டனர். நான்காம் சந்தேக நபரான தர்மலிங்கத்திற்கு நீதவான் 667 வருட கடூழிய சிறைத் தண்டனை, மரண தண்டனை மற்றும் ஆயுள் தண்டனை ஆகிய வற்றை விதித்தார். இந்த தண்ட னைகளை இரத்து செய்யுமாறு தர்மலிங்கம் சட்டத்தரணியின் ஊடாக மேன்முறையீடு செய்துள்ளார். (இ-5)


## வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்

காலை 9.00 - பி.ப 1.00

**கைகொடுக்கும் நண்பர்கள்**

104,4 ஆம் குறுக்குத் தெரு,

யாழ்ப்பாணம்.

021 222 8117

(8221)


# பெண்ணின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபருக்கு 17 வரை விளக்கமறியல்

யாழ். வடமராட்சி கிழக்கு நாகர் கோவிலடியை சேர்ந்தகுடும்பப்பெண்ணொருவர் கடந்த 24ஆம் திகதி முள்ளிப்பகுதியில் சடலமாக மீட்கப்பட்டமை தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள தாகவும் கைதான நபரை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறும் நீதவான் உத்தர விட்டுள்ளதாக பருத்தித்துறை பொரிஸார் தெரிவித்துள்ளனர். கடந்த மாதம் 20 ஆம் திகதி வடமராட்சி நாகர் கோவில் பகுதியைச் சேர்ந்த கலியுக மூர்த்திசுகந்தி (வயது-36) என்ற குடும்பப் பெண்ணொருவர் பருத்தித்துறையில் உள்ள தனது நண்பியின் வீட்டுக்கு செல்வதாக கூறிச்சென்றார். ஆனால் இரவாகியும் அவர் வீடு திரும்பவில்லை. இதனால் அச்சமடைந்த அவரது கணவர் மறுநாள் 21 ஆம் திகதி பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு ஒன்றினை பதிவு செய்துள்ளார். இந்நிலையிலே 24 ஆம் திகதி வடமராட்சி முள்ளிப்பகுதியில் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் சடலம் ஒன்றினை பருத்தித்துறைப் பொலிஸார் மீட்டனர். இதன்போது காணாமற் போன குடும்பப் பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என உறவினர்களால் அடையாளம் காட்டப்பட்டது. இதற்கமைய சடலம் பிரேத பரி சோத னைக்குட்படுத்தப்பட்ட போது கழுத்து வெட்டி கொலை செய்ய ப்பட்டுள் ளது மருத்துவ அறிக்கை மூலம் வெளியிடப்பட்டது. இதனையடுத்து பொலிஸார் கொலை தொடர்பான புலன் விசாரணைகளை மேற்கொண் டனர்.

இதன்படி குறித்த பெண் இறுதியாக சென்ற இடம், அவருடன் தொலைபேசியில் இறுதியாக உரையாடிய நபர் பற்றிய விசாரணைகளை பொலிஸார் தீவிரமாக மேற் கொண்டு வந்தனர். இந்நிலையிலே புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 27 வயதுடைய மேற்படி சந்தேக நபர் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அச்சந்தேக நபரினை பருத்தித் துறை நீதவான் ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படுத்தினர்.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட நீதவான் அந்நபரினை எதிர்வரும்17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (இ-7-60)


## வேலை வாய்ப்பு

உங்களுக்கு தனியார் துறைமுகம் விமான நிலையத்தில் வேலை செய்ய விருப்பமாயின் கப்பல் புனர்நிர்மாண பிரிவில் சாதாரண ஊழியர் வெல்டர், விமான நிலையத்தில் சுத்திகரிப்பாளர், கேட்டரிங், லொன்றி, காகோ (18-40 வயது) சம்பளம் 18000=, 35000/=, 40000/= உணவு தங்குமிடம் குறைந்த விலைகளில்.

தொடர்புகளுக்கு-0771116770/ 0776838231

(சி-8971)



"இருள்கள் அகன்று உங்கள் வாழ்க்கை ஒளி ஒளிர"

நிரந்தர தொழில் கொழும்பை அண்மித்த பல பிரதேசங்களிலுள்ள நவீன ஏற்றுமதி தொழிற்சாலைகள் ஜேம்/கோடியல்/டொபி/PVC/ பிளாஸ்ரிக்/காமென்ட்/கிளவுஸ்/மின் உபகரணம்/பால்மா/யோகட் மற்றும் பல தயாரிப்புக்களுக்கு ✷லேபல் ✷பொதியிடல்✷ தரம்பிரித்தல்✷களஞ்சிய பிரிவு ✷உற்பத்திபிரிவுக்கு 17-50 அண்-பெண் தேவை உணவு+ தங்குமிடம் குறைந்த விலைகளில் வசதி செய்து தரப்படும். சம்பளம் 20000/=, 25000/=, 35000/= மேல் நண்பர்கள், குழுக்கள், தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில் மேலதிக விபரங்களுக்கு தொடர்பு:- 077 788 9185/ 077 812 8194


(சி-8999)


## 31 வது நாள் ஆராதனை

### சிரேஷ்ட பேராசிரியர் மனோ சபாரத்தினம் அவர்கள்

(முன்னாள் விஞ்ஞான பீடாதிபதி, கிழக்குப் பல்கலைக்கழகம்)

அன்பின் வடிவே.. அறிவின் வரமே..



**கண்ணியது உன் புகழ், கற்பது உன் நாமம், கசிந்து பக்தி**
**பண்ணியது உன் இரு பாதாம்புயத்தில், பகல் இரவா**
**நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து – நான்முன்செய்த**
**புண்ணியம் ஏது என் அம்மே! புவி ஏழையும் பூத்தவளே.**

-அபிராமி அந்தாதி

கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லத்தில் இன்று 2014.11.09 ஞாயிறு காலை 11 மணியளவில் இடம்பெறும் இவ்வாராதனையில் கலந்திட அன்புடன் அழைக்கின்றோம்.

பேராசிரியர் என்.சண்முகலிங்கன்

நின்னைச் சரணடைந்தோம்

(8254)

# இராசி பலன்

9.11.2014

(ஐப்பசி 23, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை- 6.00 மணிக்கு

திருதியை பின்னிரவு 3.21 மணிவரை

ரோகினி பிற்பகல் 4.39 மணிவரை

இராகுகாலம் 4.35-6.05 மணிவரை

சுபநேரம் 9.05-10.35 மணிவரை

வளவன்

**மீனம்** – சுப செய்திகள் வந்து சேரலாம், உடன் பிறப்புக்களின் ஆதரவு பெருகும், பணப்புழக்கம் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**மேடம்** – வாக்கு மேன்மையுண்டு, வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வாய்ப்புண்டு, துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**இடபம்** – வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், பல நாட்களாக பார்க்காமலிருந்த உறவினர் ஒருவரை சந்திக்கும் வாய்ப்புண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**மிதுனம்** – பக்குவமாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும் நாள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும், சயன சுகக் குறைவான நாள்.

**கும்பம்** – உறவினர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள்.

**கடகம்** – அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் தேடிவரலாம், பயணங்களால் பலனுண்டு, விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**மகரம்** – செய்தொழில் வளர்ச்சி கருதி முயற்சி எடுப்பீர்கள், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பிள்ளைகளால் பெருமையான செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்** – வீட்டை அழகாக வைத்திருப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு** – இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், தேகநலன் சிராகும், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக செயற்படுவர், முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**விருச்சிகம்** – உறவினர்களின் வருகையால் உற்சாகம் பெறுவீர்கள், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**துலாம்** – பொதுவாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, புதிய முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம், பயணங்களால் மனச் சோர்வு ஏற்படும்.

**கன்னி** – புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் குறையும், பயணங்களால் பலனுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் மொழிக் கற்கைக்கான நேர்முகத் தேர்வு யாழ்ப்பாணத்தில்


தேசிய கல்வி நிறுவகம் 2014/2015 ஆம் ஆண்டிற்கு நடத்த இருக்கும் பயிற்சி நெறிக்குரிய நேர்முகத் தேர்வு இம்மாதம் 20, 23 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்.

இதற்கான தனிப்பட்ட கடிதங்கள் அவர்களது நிரந்தர முகவரிக்கு தேசிய கல்வி நிறுவகத்தால் அனுப்பி வைக்கப்படுகிறது. விண்ணப்பித்தவர்கள் உரிய திகதிகளில் நேர்முகத் தேர்விற்கு சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

இதுவரையில் விண்ணப்பிக்கத்தவறியவர்கள் (மட்டம் I, மட்டம்II ) மேற்குறிதத் திகதிகளில் நேரடியாக விண்ணப்பத்தையும் இலங்கை வங்கியில் கட்டணமாக ரூபா 500 யை செலுத்தி பற்றுச் சிட்டையினையும் சமர்ப்பிக்குமிடத்து நேர்முகத் தேர்விற்கு தோற்ற அனுமதிக்கப்படுவர்.

குறிப்பாக மட்டம் -II கற்கை நெறிக்கு ஏற்கனவே (ALIC) அலிக் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் அனைவரும் விண்ணப்பித்து தோற்ற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

உரிய விண்ணப்பப் படிவத்தினை நாச்சிமார் கோவிலடியிலுள்ள ஞானம் புத்தகசாலையில் பெற்றுக் கொள்ளலாம் .மேலதிக விபரங்களுக்கு 0777703776, 0775 340 144 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் என யாழ். மத்திய நிலைய மொழி இணைப்பாளர் கலாநிதி நாகமுத்து தணிகாசலம்பிள்ளை அறிவித்துள்ளார். (இ




நன்றி:-மிரர்

# கனவுகள் நனவாகுவதற்கு மக்கள் முன்வர வேண்டும்

## வடமாகாண சபை உறுப்பினர் சயந்தன் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**தமிழ்த் தேசிய அரசியலில் செல்வாக்கு மிக்கவர்களை இனங்கண்டு அவர்களைப் பலப்படுத்தி எமது கனவுகள் நனவாகுவதற்கு மக்கள் முன்வரவேண்டுமென வடமாகாண சபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான கேசவன் சயந்தன் தெரிவித்துள்ளார்.**



அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகரும் மாபெரும் மேதையுமான ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 113 ஆவது பிறந்த தினநிகழ்வு நேற்று சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் குருநகரில் உள்ள அவரது சிலையருகே இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எங்களுடைய தமிழ்த் தேசிய அரசியல் போராட்டத்தில் செல்வாக்கு மிக்க ஆளுகைகள் காலம் காலமாக இருந்து கொண்டே வந்துள்ளன.

அந்த வகையில் சேர் பொன் இராமநாதன் முதற்கொண்டு மாபெரும் சட்ட மேதை ஜீ.ஜீ. பொன்னம்பலம் வரை ஆளுமை மிக்க செல்வாக்கு மிக்கவர்களாகவே இருந்து வந்துள்ளனர்.

இத்தகைய செல்வாக்கு மிக்கவர்களால் தான் தமிழ்த் தேசிய அரசியல் போராட்டத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி தமிழ் மக்களது அபிலாசைகளை பெற்றுக் கொடுக்க முடியும்.

இத்தகைய செல்வாக்கு கொண்ட ஆளுமைகள் தற்போதும் தமிழ்த் தேசிய அரசியலில் உள்ளனர். அவர்களை நாம் பலப்படுத்த வேண்டும்.

தற்போதைய தமிழ்த் தேசிய அரசியலில் தம்மை செல்வாக்கு மிக்கவர்களாகக் காட்டிக் கொள்பவர்களும் உள்ளனர்.

இவ்வாறு பொய்வேடமணிந்து உள்ளவர்களிடமிருந்து ஆளுமை மிக்கவர்களை வேறுபடுத்தி தமிழ்த் தேசிய அரசியலை கொண்டு நடத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கவேண்டும். இவ்வாறு செல்வாக்கு மிக்க ஆளுமை கொண்டவர்களால் தான் சர்வதேசத்திடம் எமது பிரச்சினையை



கொண்டு சென்று சர்வதேசத்தினை எமக்கு சார்பாக செயற்பட வைத்து எமது மக்களின் கனவுகளை நனவாக்க முடியுமென அவர்மேலும் தெரிவித்தார். இந்நிகழ்வில்யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி உள்ளிட்ட பலர் பங்கு கொண்டிருந்தனர். (இ-4)

# சிவாஜிலிங்கம் வைத்தியசாலையில்

(வல்வெட்டித்துறை)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் வடமாகாண சபை உறுப்பினருமான என்.கே.சிவாஜிலிங்கம் திடீர் மாரடைப்பு காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 6 ஆம் திகதி மாலை வேளையில் ஏற்பட்ட திடீர் மாரடைப்பால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-7-63)

# கடற்கரைப் பகுதியில் வெடிபொருட்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி தனங்கிளப்பு கடற்கரைப் பகுதியில் வெடிக்காத நிலையில் கிடந்த வெடிபொருட்கள் வெடிக்கவைத்து அழிக்கப்பட்டன. தனங்கிளப்புப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் கடற்றொழிலுக்குச் சென்றவர்கள் கரையோரமாக பற்றைக்குள் குண்டுகள் கிடப்பதைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்தனர்.

அங்கு விரைந்த பொலிஸார் அப்பகுதியிலிருந்து 81 எம்.எம். மோட்டார் குண்டுகள்- 4, கைக்குண்டுகள்- 4 என்பவற்றை மீட்டனர். தொடர்ந்து அவர்கள் இராணுவத்தினருக்கு அறிவிக்க அங்கு வந்த குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் அவற்றை மாலை 6.30 மணியளவில் வெடிக்க செய்து அழித்தனர். (இ




# மரநடுகை செயற்றிட்டம் தனங்கிளப்பில் நாளை

(சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் மரநடுகை செயற்றிட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு சம்மேளத்தின் தலைவர் ச. மதியுகன் தலைமையில் தனங்கிளப்பு கீரை வாய்க்கால் வீதியில் இடம் பெறவுள்ளது.

இதன் போது பயன்தரு மரக்கன்றுகளும் பனை மரவித்துக்களும் நாட்டப்படவுள்ளன.

இதில்பிரதமவிருந்தினராக தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஐ. தபேந்திரனும் சிறப்பு விருந்தினராக தேசிய இளைஞர் சேவை அதிகாரி எஸ். சண்முக வடிவேலும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7-37)

# முன்னோடி கலந்துரையாடல்

(பருத்தித்துறை)

யாழ். கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் உள்ள மண்டான் கிராமத்தின் கல்வி மேம்பாட்டுக்குழுவானது மண்டான் கிராமமக்களுடனான கலந்துரையாடல் ஒன்றினை இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு மண்டான் சனசமூக நிலையத்தில் நடத்தவுள்ளது.

இக்கலந்துரையாடலானது இவ்வாண்டு தரம் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த இக்கிராமத்தைச் சேர்ந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வின் முன்னோடியாக நடைபெறவுள்ளது என மண்டான் கல்வி மேம்பாட்டுக் குழுவானது தெரிவித்துள்ளது . (இ-7-10)

# இணுவில் இந்துக் கல்லூரியில் இன்று நூல் வெளியீட்டு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை கலை இலக்கியக் களமும் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கம் பண்டித மாணவரும் இணைந்து நடத்தும் நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் இந்துக்கல்லூரியில் கலை இலக்கியக் களத் தலைவர் இலக்கிய வித்தகர் திருமதி கோகிலா மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கடம்பேசுவரனின் இலக்கண மரபு [illegible] நூல் தமிழ் இலக்கியத் திறனாய்வும் கோட்பாடும் எனும் இருநூல்கள் வெளியிடப்படவுள்ளன.

இதன்போது வரவேற்புரையினை பண்டிதர் கழக மாணவர் த.மனோஜ்குமார் வழங்குவதுடன் வாழ்த்துரைகளை யாழ் பல்கலைக் கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கி. விசாகரூபன் மற்றும் நயினை கி.கிருபா (யாழ் இலக்கிய வட்டம் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து இலக்கண மரபு நூல் வெளியீட்டுரையினை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் முருகேசு கௌரிகாந்தன் வழங்கவுள்ளதுடன் நூல் ஆய்வுரையினை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ம.பா. மகாலிங்கம் வழங்கவுள்ளார்.

தமிழ் இலக்கியத் திறனாய்வும் கோட்பாடும் நூல் வெளியீட்டுரையினை யாழ். பல்கலைக்கழக மொழிபெயர்ப்பு கற்கை இணைப்பாளரும் சிரேஷ்ட ஆங்கில மொழிக் கற்கை விரிவுரையாளருமான கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன் வழங்கவுள்ளதுடன் நூல் ஆய்வுரையினை யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஈஸ்வரநாத பிள்ளை குமரன் வழங்கவுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 62 செவ் 8 இல்<br>உயரம்: 6’3"<br>கணக்காளர<br>தொ.இ: B/3797 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 3<br>கி.பா: 17 3/4<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்: MBBS<br>வைத்தியர்<br>தொ.இ: G/3050 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 86<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்: A/L (ஜேமன்PR)<br>தொ.இ: B/3798 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 1<br>கி.பா: 28<br>உயரம்: 5’<br>தகைமை/தொழில்: B.A/ அரச தொழில்<br>தொ.இ: G/3051 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 12 3/4<br>உயரம்: 6’<br>தகைமை/தொழில்:பொறியியலாளர்<br>தொ.இ: B/3800 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 52 1/4 செவ் 4 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்: BSC, SLAS/ அரச தொழில்<br>தொ.இ: G/3052 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா: 20<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்: A/L (டுவாய்)<br>தொ.இ: B/2011 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 3<br>கி.பா: 32 உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்: BA/அரச தொழில<br>எதிர்பார்ப்பு: பெண்விவாகரத்தானவர்<br>தொ.இ: G/3054 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



## யாழ்ப்பாணத்தில் 10-01-2015ல் நடைபெறும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்

"IELTS Registration Centre for British Council"

IELTS
The world speaks IELTS

- Strategies and techniques are taught to gain a higher score
- All 4 skills are paid equal attention
- Special attention to weak students
- 60 hours of learning in 8 weeks
- Affordable charges

கடந்த 28 மே 2014ல் Colombo Cinnamon Lakeside Hotel ல் நடைபெற்ற சிறந்த IELTS நிலையங்களுக்கான விருது வழங்கும் நிகழ்வில் நாட்டின் சிறந்த நிலையம் என எமது கல்லூரி தெரிவு செய்யப்பட்டு எமக்கு விருதினையும் வழங்கிக் கௌரவப்படுத்தியுள்ளனர்.



★ கடந்த காலங்களில் எமது கல்லூரியில் கல்வி கற்றவர்கள் Band 8.5 வரை பெற்றிருக்கிறார்கள்

★ இலங்கையில் IELTS பயிற்சி நிலையங்களில் தலைசிறந்த நிலையங்களில் ஒன்றென British council ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிலையம் ஆகும்.

**Courses Conducted by University Lecturers**

**வகுப்புக்கள் 15–11–2014 இல் ஆரம்பமாகும்**

Course Schedule

| | Saturday&Sunday | Mon,Tues,Wed,Thur |
|---|---|---|
| Duaration | 10Week | 10Week |
| Time | 8.00 -11.00 | 7.30-10.00, 5.00 - 7.00 |

கடந்த 10 வருடங்களாக No.143-Adiyapatham Road Thirunrlveli. யில் பணியாற்றி இப்போது No.#192 Navalar road இல் பணியாற்றுகின்றோம்.

## BRITISH COLLEGE OF ENGLISH

No. 192, Navalar Road, Jaffna. (பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)
Tel : 021 222 0384 , 077 880 3887


# மரண அறிவித்தல்



## விசுவாசம்- மனோகரன்

வதிரி றோட் நாவலடிதிடல் உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விசுவாசம்- மனோகரன் 07.11.2014 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவாசம் கிறிஸ்தம்மா தம்பதிகளின் அன்பு மகனும் ஞானறோகினியின் அன்புக் கணவரும் செபரட்ணம்- எமல்டாவின் அன்பு மருமகனும் சியாமன்றூஸ், டிவானியா ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

மேரிவதனா, உதயபாஸ்கரன் (லண்டன்), இஸ்ரலீனா, மேரிசுலோசனா, சுதாஸ்கரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பத்திநாதர், அன்ரன் தவராசா, அன்ரன் டொமினிக் ஜேசைலா(லண்டன்), மேரிகலைச்செல்வி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

வசந்தன்றூஸ், மேரிகொஸ்ரா, அன்ரனிஸ்லாஸ், றொசாந்தன், கறோலினா, பிரசாந், கிருபரூபன், நிவேதா, நிறோஜன், றோகித், அனிஸ்ரன் ஆகியோரின் அன்பு மாமனும் குளோறினா, பிரவீன் (லண்டன்) ஆகியோரின் சித்தப்பாவும், ஏஞ்சலின், ஹார்லின் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று உடுப்பிட்டி உலகஇரட்சகர் தேவாலயத்தில் முற்பகல் 11 மணியளவில் ஆராதனை இடம்பெற்று பூதவுடல் வல்லைவெளி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாவலடிதிடல், உடுப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர். T.P:-0766838968

(சி-8997)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்பு சேவை ஆரம்பிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்புச் சேவை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை ஆதார வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி மு.உமாசங்கர் மற்றும் பதில் வைத்திய அத்தியட்சகர் முகுந்தன் ஆகியோர் இணைந்து நாடாவெட்டி ஆரம்பித்து வைத்தனர்.



மேற்படி நிகழ்வில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்க செயலாளரும், வலி வடக்கு பிரதேச சபை உறுப்பினருமாகிய லயன் சி.ஹரிகரன், நோயாளர் நலன் புரிச்சங்க உறுப்பினரும் வலிவடக்கு பிரதேச சபை தவிசாளருமாகிய லயன் சோ.சுகிர்தன் மற்றும் நலன்புரிச் சங்க உறுப்பினர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் பராமரிப்புச் சேவைக்குத் தெரிவு செய்யப்பட்ட தொண்டர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் நோயாளர் நலன் புரிச் சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள மேற்படி நோயாளர் பராமரிப்புச் சேவை வடமாகாணத்திலேயே தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் தான் முதற்தரமாக வைத்தியசாலையோடு இணைந்த அமைப்பால் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-23)

# மலர்ந்தது தமிழீழ பூ

தமிழ்நாடு, சிதம்பரம் புறவழிச் சாலையில் தமிழீழத்தின் தேசிய மலரான கார்த்திகை மலர் பூத்துள்ளது.

தமிழீழத்தின் தேசிய மலராக (செங்காந்தள்) கார்த்திகைப்பூ விடுதலைப் புலிகளால் அறிவிக்கப்பட்டது. இந்த கார்த்திகைப்பூ கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகே சி.முட்லூர் புறவழிச்சாலையில் மலர்ந்துள்ளது.

இந்த பூவை அப்பகுதி மக்கள் அதிசயத்துடன் பார்த்து செல்கின்றனர்.

தமிழீழ தேசிய மலர் பூத்துள்ளதை தமிழக வாழ்வுரிமைக் கட்சி மாணவர் பாசறை நிர்வாகிகள் தமிழீழப்பூ மலர்ந்தது போல், விரைவில் தமிழீழம் மலரும் என துண்டு பிரசுரம் அச்சடித்து மக்களுக்கு வழங்கி மகிழ்ச்சியுடன் கொண்டாடினர். (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 110 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 120 |
| தக்காளி | 80 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 |
| கோவா | 120 | 120 | 100 |
| கரட் | 160 | 140 | 200 |
| பூசணி | 40 | 40 | 60 |
| புடோல் | 60 | 70 | 80 |
| வாழைக்காய் | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 90 | 110 | 100 |
| பாகற்காய் | 200 | 170 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 60 |
| பயற்றங்காய் | 160 | 150 | 160 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 100 | 80 | 120 |
| கறிமிளகாய் | 200 | 150 | 160 |
| முருங்கைக்காய் | 100 | 80 | 160 |
| போஞ்சி | 200 | 150 | 200 |
| கத்தரிதம்புள்ள | 40 | 40 | 80 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 120 | 150 | 240 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 35-40 |
| இராசவள்ளி | 250 | – | – |

# ஒசாமா பின்லேடனை கொன்றது யார் அமெரிக்க சீல் குழுவினர் முரண்பாடு

உலக அதிர்ச்சிக்குள்ளாக்கிய தீவிரவாதி பின்லேடனை யார் கொன்றது என்பது குறித்து அமெரிக்க சீல் குழுவில் முரண்பாடான தகவல்கள் சமீபகாலமாக வெளி வருகின்றன.

இதனால் உண்மையிலேயே பின் லேடனை யார் கொன்றார்கள் என்பது மர்மமாகவே உள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டு அல் கொய்தா தீவிரவாதி ஒசாமா பின்லேடன் பாகிஸ்தானில் அமெரிக்காவின் சிறப்புப் படையான சீல குழுவால் கொல்லப்பட்டான். அன்றிலிருந்து இன்று வரை பின்லேடனைச் சுட்டது யார் என்ற கேள்விக் குப் பல் வேறு குழப்பமான பதில்கள் தான் கிடைத்துக் கொண்டிருக்கின்றன.


அந்த வரிசையில், அண்மையில் தி வாஷிங்டன் போஸ்ட் நாளிதழில் சீல் குழுவின் முன்னாள் உறுப்பினரும், பின்லேடன் தேடுதல்வேட்டையில்ஈடுபட்டவருமான ராப்ஓநீல் என்பவர் பேட்டி அளித்துள்ளார்.

அதில், பின்லேடனை தான் சுட்டுக் கொன்றதாகக் கூறியுள்ளார். ஆனால் அதே குழுவில் இருந்த இன்னொருவர் தன்னுடைய அடையாளத்தை மறைத்துக் கொண்டு ராப் ஓ நீல் சுடுவதற்கு முன்பே பின்லேடன் அறையில் வேறு இரண்டு சீல் நபர்கள் நுழைந்து அந்தத் தீவிர வாதியைச் சுட்டார்கள் என்று கூறியுள்ளார். (இ-5)


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 187

Search for people, places and things · Nagendram · Home

றீசந் சகாயராஜா




மயூரன் வாறன்





கஜன் வினோ




சார் உங்க லவ்வர் இன்னொருத்தன் கூட ஓடி போனத பற்றி என்ன நினைக்கிறீங்க?


சச்சி சங்கீத்




அபினேஷ் தவேந்திரராஜா



பிரதீஸ் ரதீஸ்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் [illegible] facebook [illegible] பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





அரசியல், சினிமா
பொழுதுபோக்கு கேள்விகளை
சுருக்கமாக பெயர், முகவரி
குறிப்பிட்டு அனுப்பி
வையுங்கள்.




வியாசர் பதில்கள்
இல. 3, 2 ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

குறுந்தகவல் (SMS)
021 567 1532

• Email
vijasarpathil@gmail.com



## கத்தியா, பூஜையா நல்லது?

**Hi வியாசரே!**

**கமரூன், கொடிகாமம்**

**எங்கட சனம் எப்ப திருந்தும்?**

எங்கள் வீட்டு குப்பையை அள்ளிக்கொண்டு வந்து வீட்டுக்கு வெளியே உள்ள பொதுவீதியில் கொட்டிவிடுகிறோம்.

வீதியில் கொட்டிய கோம்பையில் உருவான நுளம்பு என் பிள்ளையின் இரத்தம் உறிஞ்சும் என்பதை உணராத தந்தை உள்ளவரை உருப்படாது

**வியா மாமா !**

**புவனேஸ், அச்சுவேலி**

**எதிர்கால சிறுவர்களின் எதிர்காலம் எப்படியிருக்கும்?**

சமீபத்தில் ஒரு நெற் கபேக்குச் சென்றபோது இரு சிறுவர்கள் கணனியில் கேம் விளையாடிக் கொண்டிருந்தனர். வீதியில் செல்பவர்களை மறித்து அவர்களை அடித்து பணம்பறிக்கும் விளையாட்டு அது. எனக்குப் புரியவில்லை. தம்பி என்ன விளையாட்டடா? ஏனக்கேட்டேன். **"அடிச்சு காசு பறிக்கிற விளையாட்டு"** என்றான. பொலிசையும் அடிக்கலாம் என்றான். நான் திகைச்சுப் போனேன். பொலிச அடிச்சா துவக்கு எடுக்கலாம். அதால போறவாற ஆக்கள சுட்டுப் பணம் பறிக்கலாம்... என்றான் அதை செய்து காட்டியவாறு.

எம் இளைய சமூகத்தைப் வழிப்படுத்த யாருமே இல்லையா...? இது எனக்குள் எழுந்த கேள்வி.

**Hai வியாசர்!**

**ந.மரியநாயகம், கொழும்புத்துறை**

**மரண ஊர்வலத்தில் பட்டாசு வெடிகள், பாண்ட் வாத்தியம், பதாகை, வீதியெங்கும் சிந்திக் கிடக்கும் கண்ணீர் அஞ்சலி. இது தேவையா?**

என்ன பேசுறீங்க நீங்க. அப்பா முதியோர் இல்லத்தில கிடந்து செத்துப் போனார். வெளிநாட்டில இருக்கிற மகன் வாறான் வெடி கொளுத்துறான் தந்தையின் மனதறிஞ்சு அவருக்கு ஒருவாய் சோறு ஊட்டாமல் அதுக்காக பாண்ட் அடிக்கிறான். ஆசையா வளர்த்த அப்பாவுக்காக ஒரு சொட்டுக்கண்ணீர் விடவில்லை. கண்ணீர் அஞ்சலி அடிச்சு வீதியில் வீசுகிறான். இதைவிட ஒரு மகனால் என்ன செய்துவிடமுடியும்.

**Hai வியாசர்!**

**அகிந்தன், கரணவாய்**

**கத்தியா, பூஜையா நல்லது?**

தற்போது வருகின்ற திரைப்படங்கள் அநேகமாக நல்ல கதைக்களங்களை மையமாக வைத்து எடுக்கப்பட்டாலும் அதில் வன்முறை சார்ந்த விடயங்களை புகுத்துவது நம் இளைய சமூகத்தை வழிமாறிச் செல்லத் தூண்டுகிறது. தற்போது இளையோரிடம் இருக்கும் குண இயல்புகளுக்கு சினிமாப் படங்களின் தாக்கம் அதிகம் என்று நம் கருத்து.

**Hai சேர் Bro!**

**அ.அச்சுதன்**

**சொர்க்கலோகம், நரகலோகம் என உண்மையிலேயே உள்ளதா?**

க.மு.சொர்க்கம், க.பி. நரகம் (க.மு-கல்யாணத்துக்கு முன், க.பி- கல்யாணக்துக்குப் பின்)

## காதலிப்பதை தவறு எனச் சொல்லும் பலர் காதல் வலையில் விழுகின்றார்களே ஏன் மாமா?

**வியாசர் அவர்களே!**

**வே.வே.அகிலேஸ்வரன், மருதங்கேணி**

**இன்றைய காதல் இனிப்பா? கசப்பா**

அடியிலிருந்து கடித்தால் முதலில் இனிக்கும். பிறகு கசக்கும். முன்பிலிருந்து கடித்தால் முதலில் கசக்கும். பிறகு இனிக்கும்.

தம்பி அகிலேஸ்வரா நான் கரும்பைச் சொன்னேனடா.

**வியா மாமா**

**மதன், அல்வாய்**

**காதலிப்பதை தவறு எனச் சொல்லும் பலர் காதல் வலையில் விழுகின்றார்களே ஏன் மாமா?**

ஊருக்கு உபதேசம் சொல்லும் பல்லி கூழ் பானையில் விழுந்ததாம் எனும் பழமொழி யாருக்குப் பொருந்துதோ இல்லையோ இவர்களுக்கு ரம்பவே பொருந்தும்.


**அன்பின் மாமா**

**துஷாந்தினி, உடுப்பிட்டி**

**இப்ப வரவர Boys ரம்பமோசம். பின்னாலேயே சுத்துறாங்க. அவங்களுக்கு நீங்க சொல்ற Good News என்ன?**

இளநீர் குடித்தவன் ஓடிவிட கோம்பை சூப்பியவன் கோட்டுக்குப் போனானாம். புரிஞ்சுதா செல்லங்களா...?

# வா தலைவா வா!



**தேரை இழுத்து தெருவில் விடுவது போல் ரஜினியை தங்கள் பக்கம் வளைத்துப்போட ரீ கடையில் அரங்கேறுகிறது . "இங்கேதான் சொன்ன டைமுக்கு கரெக்டா வந்திருக்கீங்க' என அனைவரும் கோரஸாக வரவேற்க, சேரை சுழற்றிவிட்டு "ஹாஹா' என ஸ்ரைலாக அமர்கிறார் ரஜினி.**

**கருணாநிதி:**

தம்பியின் பெயரோ ரஜினி காந்த். பெயரிலேயே இருக்கிறதே காந்தம். கருணாநிதி என றாலும் உதடுகள் ஒட்டாது. ரஜினி காந்த் என்றாலும் உதடுகள் ஒட்டாது. என்ன ஒற்றுமை பார்த்தீர்களா' என இழுக்க... "நான் நேராக விஷ யத்துக்கே வருகிறேன்.

தங்கள் மேனியும் கறுப்பு. நம் திராவிட இயக்கத்தின் நிறமும் கறுப்பு. எம் கட்சியில் இருக்கிறது உமகது பொறுப்பு. நீங்கள் இணைய வேண்டும் என்பதே அனைவரின் விருப்பு. இனி மேலும் கூறலாகாது மறுப்பு.

**தா.பாண்டியன்:**

ஒருவன் ஒருவன் முதலாளி... உலகில் மற்றவன் தொழிலாளி, உழைப்பாளி இல்லாத நாடு தான் எங்கும் இல்லை' என பாடிப் புகழ் சேர்த்த தோழர் இந்தத் தோழர்களின் கட்சியில் சேர்ந்து தோள்கொடுத்து உதவாது போனால், எள்ளி நகையாடாதா



எம் உழைக்கும் வர்க்கம்' என நான்ஸ் டாப்பாக வெடித்துவிட்டு, கொஞ்ச நேரம மூச்சுவாங்கும் தா.பாண்டியனையே வியப்பாகப் பார்க்கிறார் ரஜினி.

**ஞானதேசிகன்:**

தோழரின் பேச்சைக் கண்டு சிரிப்புதான் வருகிறது. ரஜினி இவ்வளவு நாள் மௌனம் காக்கிறார் என்றால், என்ன அர்த்தம். மௌனம் என்றாலே மன்மோகன் சிங் என்றுதான் அர்த்தம். மன்மோகன என்றால், காங்கிரஸ் என அர்த்தம், ஸோ, மறைமுகமாக எங்களுக்குத் தான் ஆதரவளிக்கிறார் என்பதில் இனிமேலும் என்ன சந்தேகம்? என தா.பாவின் வாயை அடைக்க, வாயடைத்து நிற்கிறார் ரஜினி.

**ஓ.பன்னீர்ச் செல்வம்**
**(தமிழக முதல்வர்)**

அம்மா என்றழைக்காத உயிரில்லையேனு பிள்ளையார் சுழி போட்டதே நீங்கதான். அன்னைக்கி அம்மாவைக் கைகளில் தாங்கிப் பாடின நீங்க அம்மாவோட கட்சியையும் கையில தாங்கணும். அதுவும் குறிப்பா நீங்க தாமாகவே முன்வந்து கட்சியில சேர்றீங் கனு பேட்டியும் கொடுக்கணும். வரணும், நீங்க பழைய ரஜினி காந்தா வரணும் என மென்சோகக் குரலில் கரகரக்க, நீங்க பழைய பன்னீர்செல்வமாவே வந்துட்டீங்க போல என ரஜினி கூறி சிரிக்கிறார் .

**ரஜினி:**


இப்போ நான் ஒரு குட்டிக்கதை சொல்றேன்.

நாடே செல்ஃபியில் போயிக்கிட்டு இருக்கும் போது நான் மட்டும் ஏன் செல்ஃபியாவே கட்சி ஆரம்பிக்கக் கூடாது என கமா போட்டு கதையை ஆரம்பிக்க, கடுப்பான கூட்டம், சரி சீக்கிரம் சொல்லுங்க. எப்போதான் ஆரம்பிக்கப்போறீங்க' என கோரஸாக கேட்க எல்லாம் அந்த ஆண்டவன் கையிலதான் இருக்கு என டெம்ப்ளேட் டயலாக்கையே ரஜினி சொல்கிறார். என்னது மறுப்படியும் முதல்ல இருந்தேவா?' என் ரியாக்ஷன் காட்டி மூர்ச்சையாகி மேசையில் விழுகிறார்கள் அனைத்து தலை வர்களும்.

**ஜூனியர் விகடன**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த மூன்று பேர்



**02.11.2014 ஞாயிறு வலம்புரியில் வெளிவந்த “அந்த மூன்று பேர்” என்ற கதையைத் தொடர்ந்து அக்கதை தொடர்பாகவும், இன்றைய இளைஞர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றியும் இளைஞர் சேவை மன்றத்தின் உதவி இயக்குனர் திரு ஐ.தபேந்திரன் அவர்களிடம் நேர்காணலை நடத்தியிருந்தோம். அதனை இங்கு தருகின்றோம்.**

## இளைஞர்களுக்கு நல்ல இலக்கை அமைத்துக் கொடுக்கின்றோமா?

1. குறித்த கதையில் வருகின்ற மூன்றுபேர் பற்றி உங்கள் கருத்து என்ன என்று கூறமுடியுமா?

ஆம், “அந்த மூன்று பேர்” என்ற கதையில் வருகின்ற மூன்று பேரைப் போல எத்தனையோ இளைஞர்கள் தங்களுடைய இலக்குகளையும், தங்களுக்குள் ஒழிந்திருக்கின்ற திறமைகளையும் அடையாளம் காணமுடியாமல், தமக்குத் தாமே தவறான பாதைகளை வகுத்து திசைமாறிச் சென்று கொண்டிருக்கின்றனர். வாழ்க்கையில் பல்வேறு துறைகளில் சாதித்து உலகம் போற்ற வாழ்கின்ற பல இளைஞர்கள் இலக்கின்றி இவர்களைப் போல திரிந்து தாமாக தமது துறைகளுக்குள் கால் பதித்தவர்களாகவும் இருக்கின்றனர். இக்கதையில் வருகின்ற இளைஞர்களும் பல திறமைகளைத் தமக்குள் வைத்திருந்தாலும், அவற்றை அடையாளங் காணாமல், இலக்கின்றிச் சுற்றித் திரிகின்றனர். அத்துடன் அவர்களின் கட்டிளமைப்பருவ வயது மாற்றங்கள் காரணமாக, சிறுசிறு சேட்டைச் செயல்களில் ஈடுபடுகின்றர். குறித்த வயது இளைஞர்களிடம் இயல்பாகவே இவ்வியல்புகளை நாம் காணலாம்.

ஆனால், எவ்வளவு தான குறும்புத்தனமான செயற்பாடுகளில் ஈடுபட்டாலும் தங்களுக்கென்று தங்கள் குடும்பத்தில், கிராமத்தில், சமுதாயத்தில் காணப்படுகின்ற பொறுப்புக்களையும் கடமைகளையும் இளைஞர்கள் மறந்துவிடக்கூடாது. அநேகமான இளைஞர்கள் அவற்றை மறந்து விடுவதுண்டு. அவ்கள் மனம் செயல் வேறுதிசைகளில் சென்று கொண்டிருக்கின்ற போது அவர்களின் திசையை சரியான முறையில் மாற்றுவதற்கு ஒரு “கலங்கரை விளக்கம்” தேவைப்படுகின்றது. அந்தப் பொறுப்பை சில குடும்பங்களில் தந்தையோ அல்லது உறவினர்களில் மிகவும் பிடித்த ஒருவரோ, பாடசாலைகளில் பிடித்த ஆசிரியரோ, மதக் குருமாரோ யாரோ ஒருவர் எடுத்துக் கொள்கின்றனர். இவ்விளைஞர்கள் விடயத்தில் அந்தப் பொறுப்பை சமூக அக்கறையுள்ள, இளைஞர் முன்னேற்றத்தில் ஆர்வமுள்ள ஒரு சமூகப் பணியாளர் கையிலெடுத்திருக்கின்றார்.

அந்த மூன்று பேருக்கும அவர்களிடம் காணப்படுகின்ற திறமைகளை புரிய வைத்தல, தன்னம்பிக்கையையும் அவர்களின் கிராமத்தில் மூன்று பேரின் முக்கியத்துவத்தையும் உணரவைத்தல், குடும்ப சமூக ஆதரவைத் திரட்டிக் கொடுத்தல், அடையாளங் காணப்பட்ட திறமைகளுக்குரிய வாய்ப்புக்களுக்குரிய வழிகாட்டல் இணைப்புகளை ஏற்படுத்திவிடுதல், ஊக்கப்படுத்தலுடன் இணைந்த ஆலோசனை வழங்கல், தொடர்ச்சியான கண்காணிப்பு என்று பலமுறைகளைச் சமூகப்பணியாளர் கையண்டிருக்கிறார். இப்பணி மிகவும் சவாலானது. ஆனாலும் குறித்த இளைஞர்களின் ஆதரவும் இவ்வாறான செயற்பாடுகளுக்கு மிகவும் முக்கியமானது. அவர்களில் ஏற்பட்ட படிப்படியான மாற்றங்கள் தான் அவர்களை தங்கள் தங்கள் துறைகளில் பிரகாசிக்க வைத்தது. இங்கு “இலக்கமைத்துக் கொடுத்தல்” மிக முக்கிய செயற்பாடாக இருக்கும். இவற்றை விட அவர்களிடம் ஏற்பட்ட மாற்றங்களை சமூகம் ஏற்றுக் கொள்ளும் வரைக்கும் குறித்த பிரதேசத்து மக்களோடும் சிலகலந்துரையாடல்கள் மேற்கொள்ளவேண்டும். உடனடியான மாற்றம் ஏற்படுவதென்பது கடினம் ஆனால் 3 மாதங்களாக தொடர்ச்சியாக சமூகப்பணியாளர் மேற்கொ ணட தலையீட்டின் வெற்றியே அந்த 3 பேரின் இந்நிலை மாற்றம்.

**1. எங்களுடைய பிரதேசங்களில் தற்போது அதிகரித்து வருகின்ற சமூகப் பிரச்சினைகள் பலவற்றுடன் இளைஞர்கள் தொடர்புகொண்டிருப்பதும், ஆரம்ப காலங்களிலிருந்த இளைஞர்களின மனபோக்குப் போலல்லாது இப்போது ஏற்பட்ட மாற்றங்களுக்குமான காரணங்கள பற்றி சற்றுக் கூறமுடியுமா?**

ஆரம்பகாலங்களில் வாழ்ந்த இளைஞர்களின் மனம், சிந்தனையாற்றல், சூழ்நிலை என்பவை தற்கால இளைஞர்களோடு ஒப்பிடும்போது அதுவும வடக்கு இளைஞர்கள் சற்று வேறுபட்ட ஓர் நிலையிலேயே இருக்கின்றனர். அதற்கு பல காரணங்களை நாம் கூறமுடியும.

❖ **பெற்றோரின் சில செயற்பாடுகளும் வாழ்க்கை முறையும்:**

இப்போதெல்லாம் அதிகளவு குடும்பங்களில் மகனோ, மகளோ வெளிநாட்டில் வசிப்பது சாதாரணமாகிவிட்டது. அவர்களுக்கு கீழுள்ள இளம் பிள்ளைகள் வெளிநாட்டில் சகோதரர்கள் படுகின்ற கஷ்டங்களை அறியாது அங்கிருந்து வருகின்ற பணத்தை கொண்டு தாறுமாறான பழக்கவழக்கங்களை உருவாக்கிக் கொள்கின்றனர். அதுமட்டுமன்றி, அவை ஏனைய இளைஞர்களுக்கும் தவறான வழிகாட்டல்களை ஏற்படுத்திவிடுகின்றன. யுத்தகாலத்தில் இருந்த வாழ்க்கைமுறையும், கட்டுப்பாடும், கண்டிப்புக்களும் தற்போது அதிக குடும்ப ங்களில் காணமுடிவதில்லை. அந்த நாட்களில் சண்டையிலிருந்து எப்படி நாங்கள் பாதுகாப்பாக தப்பிப்பது? ஷெல்லடியிலிருந்து எப்படித் தப்புவது? என்று முயற்சித்த நம் சமூகம், இப்போது பாதிப்புக்களுக்கு பின்னர் கிடைத்த அளவுக்கதிகமான சுதந்திரத்தை பயன்படுத்தி தம் சமூகத்தை சீரழிக்கப்பார்க்கின்றது.

❖ **வேலை வாய்ப்புக்களின்மையும், வாய்ப்புக்களை ஊதாசீனம் செய்தலும்:** தேசிய இளைஞர்சேவை அமைப்பினால் நாங்கள் ஒரு வருட காலப்பயிற்சி நெறியும் அதனைத் தொடர்ந்ததான வேலைவாய்ப்பு முறை ஒன்றையும் ஆரம்பித்தோம். *“வெளிமாவட்டத்திலிருந்து தங்கிப்படிக்க வேண்டும்”, “இது இனி எப்படி வேலை கிடைக்கப்போகுது”, அத விட்டுப்போட்டு அவுஸ்திரேலியா போக முயற்சித்தாலும் கொஞ்சம் நல்லாயிருக்கும்”, “அவ்வளவு நாளும் தங்கியிருந்து படிக்கிறதா?”* என்ற பல அவநம்பிக்கை கலந்த கேள்விகளுடன் எங்கள் இளைஞர்கள் அப்பயிற்சி நெறியிலிருந்து இடை விலகுகின்றனர் தற்போது மேசன் வேலைக்குக் கூட சான்றிதழ் கேட்கின்றனர். ஆனால் நம் இளைஞர்களுக்கு அந்த மனப்பக்குவம் வரசற்றுக் கடினப்படவேண்டியுள்ளது. தெற்கு இளைஞர்கள் அவ்வாறான பயிற்சிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவதுடன் எங்கள் பிரதேசங்களில் வீடு கட்டுவதற்கு கூட அவர்கள தான் வரவேண்டிய நிலை ஏற்படுகின்றது. நாங்கள் நமது இளைஞர்களின் எதிர்காலம் பற்றி அறிவை ஊட்டினாலும் அவர்கள் வெளிநாட்டு மோகம், மதுப்பாவனை, அதிகரித்த வன்முறை செயற்பாடுகள் என்று தங்களை தாங்களே மாய்த்துக் கொண்டிருக்கின்றனர். **“நாளாந்தம் கூலிவேலை செய்கின்ற இளைஞர் சைக்கிளில் செல்வதும், எந்தவொரு வேலைக்கும் செல்லாத இளைஞர் பல்சரில் செல்வதும் பார்ப்பதற்கு புரியவைக்கும் நம் நிலையை”**

❖ **புதிய குழுக்களை உருவாக்கலும், தவறான செயற்பாடுகளில் ஈடுபடுதலும்:** அதிகரித்த மதுப்பாவனையும், கைகளில் புரளுகின்ற வெளிநாட்டு பணமும் இவ்களை ஆவாக்குழு என்றும் அடிபாட்டுக்குழு வென்றும் உருவாக்கிவிடுகின்றது. இவற்றிலீடுபடுகின்ற இளைஞர்கள் அடிபபடையில் நல்லவர்களாக இருந்தாலும் சில காரணிகள் அவர்களை மீண்டும் மீண்டும் குற்றச்செயல்புரியத் தூண்டிவிடுகின்றன. சட்டங்களும், பொலிஸாரும் தங்கள் கடமைகளைச் செய்தாலும், வெளிநாடுகளில் உள்ள “சிறையில் மறுவாழ்வு” என்ற ஓர் செயற்பாடு இருப்பதை நாம் அவதானித்து சிறைப் பிடிக்கப்படுகின்ற இளைஞனுக்கு ஓர் வழிகாட்டல் உளவளத்துணையோ, ஆதரவோ வழங்க முயற்சிக்கின்றோம். உளவளத்துணை வழங்கத்தயாராக இருக்கின்ற நிறுவனங்களுக்கும், ஏனைய நிறுவனங்கள் அதற்கான ஆதரவை வழங்க வேண்டும். வன்முறையில் ஈடுபட்ட ஓர் இளைஞனை நாமும் வன்முறையுடன் கையாளுவோமாயின் மீண்டும் மீண்டும் ஏற்படுகின்ற பிரச்சினைகளை தடுக்க முடியாது.

**2.தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் செயற்பாடுகள் இளைஞர்களை எவ்வாறு ஊக்குவிக்கின்றது?**

இளைஞர்களின் நலனை பிரதான நோக்காக கொண்ட திட்டங்கள் பல அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் இளைஞர் பாராளுமன்றம் பல இளைஞர்களை பாராளுமன்றத்துக்கு அழைத்துச்செல்லும் ஆரம்ப வாயிலாகவும் அதன் மூலமான தொடர்ச்சியான வளர்ச்சி ஏனைய துறைகளான சட்டத்துறை, ஊடகத்துறை, கலைத்துறை என அனைத்து துறைகளுக்குள்ளும் அவர்களை அழைத்துச் செல்கின்றது. இவ்விளைஞர் பாராளுமன்றத்தில் 225பேர் இதுவரை இணைந்துள்ளனர். தமிழ், சிங்கள, முஸ்லிம் இளைஞர்கள் என்று சேர்ந்திருப்பதால் ஓர் சமூக நல்லிணக்கமும் கட்டியெழுப்பப்படுகின்றது. குறிப்பாக கல்வியில் இடைவிலகி வேலைவாய்ப்புக்களின்றி ஆனாலும் நல்ல ஆற்றல் மிக்கவர்களாக இருக்கின்ற இளைஞர்கள் இத்துறையில் பிரகாசிக்கின்றனர். தற்போது 10ஆவது அமர்வு வரை சென்றுவிட்டது.

அத்துடன், யாழ்ப்பாணத்தில் அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் உட்பட்ட இளைஞர் கழகங்களை புதுப்பித்து அவற்றுக்கு வேண்டிய உதவிகளை வழங்கி வருவதுடன் அவர்களின் திறமைகளை அடையாளங்கண்டு தெரிவு செய்து பொருத்த மான வேலைவாய்ப்புக்கள், தலைமைத்துவங்கள் பயிற்சிநெறிகள் எனபவற்றை வழங்கி வருகின்றது.

சுயவேலைவாய்ப்பினை வழங்கும் நோக்கில் குழுப் பயிற்சி நெறிகள் மற்றும் கடன்திட்டங்களை அறிமுகம் செய்து அவர்களை வலுப்படுத்தி வருகின்றது. ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள கிராமஅலுவலர் பிரிவில் உள்ள 13-29 வயதுக் குட்பட்ட இளைஞர்கள் இவ்வமைப்புடன் இணைந்து தாங்களும் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் தங்கள் சொந்தக் காலில் நிற்கமுடியும். இவ்வாறு தெரிவு செய்யப்ப டுகின்ற இளைஞர்களை ஏனைய நிறுவனங்களோடு இணைத்து விடும்போது, அவர்களுடைய வாழ்க்கைமுறை, பழக்கவழக்கம், நடத்தை என்பவற்றில் மாற்றங்கள் ஏறபடுகின்றன. வாழ்க்கையை இவ்வாறு வெற்றி கண்ட இளைஞர்கள் பலர் இன்றும் நம்மோடு இருக்கின்றனர். இளைஞர் சேவை மன்றத்துடன் இணைய விரும்பும் இளை ஞர்களை நாம் வரவே ற்கின்றோம்.

**தேசிய இளைஞர் சேவை மன்றம்: தொடர்பு இல:**
021 - 2222526

**“தங்கியிருக்கும் காலத்தில் இளைஞர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்**

**நம்மைச்சார்ந்து நமக்காக ஓர் உலகம் தங்கியிருக்க காத்திருக்கின்றது”**

**கட்டிளமைப்பருவ இன்னல்கள்:**

❖ **பிள்ளைப் பருவத்திலிருந்து கட்டிளமைப்பருவத்திற்கு மாறும்போது பல மாற்றங்கள் ஏற்படுகின்றன.**

❖ **அடையாளம் காணுதல், அடையாளக் குழப்பம், தம்மை வெளிப்படுத்துவதற்கு அவர்கள் திடீர் உணர்ச்சிகளுக்கு ஆட்படுதல், வலுச்சண்டைக்கு முனைதல், பரிசோதித்துப் பார்த்தல், சமவயதுக் குழுக்களின் அழுத்தங்களுக்குட்படுத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.**

**வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தரமானவை பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.**

**சாந்திகம்**
**8, 8/1, கற்பக விநாயகர் ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**E.mail:psych@sltnet.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
# வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவுசெய்தல்-2015

கீழே குறிப்பிட்டுள்ள வழங்கல்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு யாழ். பல்கலைக்கழகத்துடன் தம்மை பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள்/உற்பத்தியாளர்கள்/ஒப்பந்தகாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் 2014 டிசெம்பர் 15 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**1.பாவனை பொருட்கள்,காகிதாதிகள்**

1.1 எழுதுபொருட்கள், காகிதாதிகள்.
1.2 வெட்டும் கருவிகளும் மட்பாண்டங்கள் உட்பட சமையலறைப் பாத்திரங்கள்.
1.3 சுகாதாரசேவை வழங்கல் தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பங்கள், ஹார்ப்பிக், விம் முதலியன.
1.4 மழைக்கோட்டுக்கள், சேற்றுசப்பாத்துக்கள்,குடைகள்,சப்பாத்துக்கள் முதலியன.

**2.புத்தகம், புத்தகம் கட்டுதல், அச்சிடுதல்.**

2.1 அச்சிடுதல், புளொக் செய்தல், இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள்.
2.2 புத்தகங்கள், பருவவெள்ளியீடுகள், ஏனைய வெளியீடுகள்.
2.3 புத்தகங்களையும் பருவவெளியீடுகளையும் கோர்த்தல்.

**3.தளபாடங்கள், அலுவலக இயந்திரங்கள**

3.1 அலுவலக தளபாடம் - மரம் உருக்கு- கணனி மேசை, கதிரைகள்.
3.2 அலுவலக உபகரணங்கள் (குட்டச்சு இயந்திரங்கள்,கல்குலேட்டர்கள், பிரதிபண்ணும் இயந்திரங்கள், நிழற் பிரதி இயந்திரங்கள், தொலைநகல் கருவிகள் முதலியன).
3.3 தீயணைப்பு சாதனங்களும், பாதுகாப்பு சாதனங்களும்.
3.4 கணனி மற்றும் கணனி உபகரணங்கள் உட்பட மின்னியல் பொருட்கள்.
3.5 தகவல் தொழில்நுட்ப வன்பொருள், மென்பொருட்களுக்கான வழங்கலும் சேவைகளும் பராமரிப்புகளும்.
3.6 தொடர்பாடல் சாதனங்களுக்கான உபகரணங்கள் வழங்கலும் சேவைகளும் பராமரிப்புகளும்.
3.7 தொலைபேசி உபகரணங்களும் கையடக்க தொலைபேசிகளும் வழங்கல்.
3.8 கணனி வலைப்பின்னல் ஸ்தாபித்தலும் அதற்கான உபகரணங்களும்.

**4.பொறியியல் பொருட்கள்**

4.1 சகல வகையான கட்டட நிர்மாண பொருட்கள்.
a. பெயின்டுகள் வாணிஸ் தொடர்பான பொருட்கள்.
b. கட்டடப் பொருட்கள் (மணல், செங்கல், உலோகம், சுண்ணாம்பு, கூரைசார்ந்த பொருட்கள் முதலியன).
c. இயந்திர கருவிகளும் உதிரிப்பாகங்களும்.
d. பைப்புகள், பைப் இணைப்புகள்.
e. மரங்கள் - தீராந்தி, பனைமரம் , சலாகைகள்.
f. பிளாஸ்ரிக், பைபர் கிளாஸ் உற்பத்திகள்.
g. அலுமினியம் பொருத்துகள், மட்பாண்டப் பொருட்கள் , கண்ணாடிப் பொருட்கள், கண்ணாடிகள்.
h. குளியலறை பொருத்துகள், சுவர், தரைமாபிள்கள்.

**5.மின்னியல் பொருட்கள்**

மின்சார சாதனம் உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்களும்.

**6.ஆய்வுகூட பொருட்கள்/சாதனங்கள்.**

6.1 ஆய்வுகூடச் சாதனங்கள்
6.2 ஆய்வுகூட இரசாயன பொருட்களும் கண்ணாடிச் சாதனங்களும்.

**7.வாகன பராமரிப்பு**

7.1 டயர் ரியூப்புகள், பற்றரிகள்.
7.2 மோட்டார் உதிரிப்பாகங்கள், துணை உறுப்புகள்.
7.3 மோட்டார் வாகனம் திருத்துதல்
7.4 மோட்டார் வாகன உள்ளக வேலைகள்.
7.5 மோட்டார் வாகனங்கள் வாடகைக்கு வழங்குதல் (Passenger van-with A/C & without A/C, passenger bus, lorry, tractors with trailer, etc)
7.6 இயந்திரங்கள்வாடகைக்கு வழங்குதல் (JCB, excavator, compressor, pay loader, etc.)

**8.பொதுசேவைகள் வழங்கல்கள்**

8.1 ஆயுர்வேத மருந்துகள் உட்பட மருந்துகளும், மருத்துவ வழங்கல்களும்
8.2 விளையாட்டு மற்றும் நலன்புரி பொருட்கள்.
8.3 புடைவைகள், ஜவுளிகள், ஜன்னல் திரைச்சீலைகள், சீருடைத்துணிகள்.
8.4 தோட்ட வேலைகளுக்கான பசளைகள், இரசாயனங்கள் கருவிகள்.
8.5 அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் - தட்டச்சு இயந்திரங்கள், புகைப்பட பிரதி பண்ணும் இயந்திரங்கள், தொலைநகல், கணனி, தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள், மின் தட்டச்சு இயந்திரங்கள் போன்றவற்றின் திருத்த வேலைகள்.
8.6 உருக்கு, மரத் தளபாட திருத்த வேலைகளும் மெருகூட்டல் வேலைகளும்.
8.7 கதிரைகள் பின்னுதல்.
8.8 உடைகள், கதவு, ஜன்னல் திரைச்சீலைகள் தைத்தல்.
8.9 உடைகளைச் சலவை செய்தல்.
8.10 சுத்திகரிப்பு சேவை வழங்கல்.
8.11 பாதுகாப்பு சேவை வழங்கல்.

**9.எந்திரவியல் சேவைகள்.**

9.1 பெயர்ப்பலகைகள் வரைதலும் பிளாஸ்ரிக் பெயர்ப் பலகைகள் செய்தலும்.
9.2 மின்மோட்டார், நீரிறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள் திருத்துதல் மற்றும் மீளமுறுக்குதல் (Rewind) உட்பட
9.3 ஜெனரேட்டர்கள் திருத்துதல்.
9.4 குளிரூட்டி, வாகன குளிரூட்டி திருத்துதல்.
9.5 இயந்திரங்கள்,தொடர்பாடல் உபகரணங்கள், Lift திருத்துதல்.
9.6 குடிசார் எந்திரவியல் வேலைகள், கட்டடங்கள் நிர்மாணித்தலும், திருத்த வேலைகளும்.
9.7 மின்சார இணைப்பு வேலைகள்.
9.8 நீர் விநியோக வடிகாலமைப்பு வேலைகள் மற்றும் திருத்த வேலைகள்.
9.9 இரும்பு,அலுமினியம்என்பவற்றினான கட்டடம்சார்ந்தபொருத்துக்கள் செய்தலும் பொருத்தலும்.
9.10 கட்டடங்கள்/கட்டடசேவைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய (இயந்திரசாதனங்களுக்கான) உசாத்துணை சேவைகள்.
9.11 மின்சார உசாத்துணை சேவைகள்.
9.12 நிலையாக பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்கல் /பொருத்துதல் /தச்சுவேலை.
9.13 எந்திரவியல்சார் வரைதலும் நீலப் பிரதிசெய்தலும்.
9.14 கறையான் /பீடைகள் ஒழிப்பு வேலைகள்.
9.15 தொழிலாளர் வழங்கல் (திறன்சார், திறன் சாரா மற்றும் காவலாளிகள்)
9.16 கணிய அளவுச் சிட்டை (B.O.Q) தயாரித்தலும் பராமரித்தலும்.

**பதிவு தொடர்பான நிபந்தனைகள்**

1.வழங்குநர்களாக பதிவு செய்பவர்கள் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் படிவத்தை பூர்த்திசெய்தல் வேண்டும். ஒவ்வொரு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வழங்கல்கள் சேவைகளுக்கான பதிவுசெய்தல் 2015" எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

❖ பதிவுகளுக்கான விண்ணப்பங்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என முகவரியிடல் வேண்டும்.

2.ஒவ்வொரு வழங்கல் /சேவைகளுக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படவேணடும். ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்துடன் பதிவுக்கட்டணமாக ரூபா 2,000/= பெறுமதியான காசுக் கட்டளை நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம எனும் பெயருக்கு பெறப்பட்டு யாழ். தபாற்கந்தோரில் மாற்றக் கூடியதாக இணைத்து அனுப்புதல் வேணடும்.

3.விலைமனுக்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே கோரப்படும். ஆயினும் வேறிடங்களிலிருந்து விலைமனுக்கள் கோர பல்கலைக்கழகத்திற்கு உரிமை உண்டு.

4.கோரப்படும் போது விலை மனுக்களை சமர்ப்பிக்க தவறும் அல்லது உரியநேரத்திற்கு பொருட்கள்/சேவைகளை வழங்க தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள்/ சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தலின்றி பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

5.விண்ணப்பதாரர் யாழ். பல்கலைக்கழக வவுனியாவளாகத்தில் வேலைகளை செய்ய அம் மாவட்டத்திலுள்ள தமது கிளை/பிரதான காரியாலய விலாசம், அம் மாவட்டத்திற்குரிய வியாபார பதிவு அத்தாட்சியுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

6.விண்ணப்பதாரரின் ஸ்தாபனத்தில் நிரந்தரமாக வேலை செய்யும் சகல எந்திரவியலாளர், கட்டடக்கலைஞர் ஆகியோரின் பெயர் அனுபவங்களை (எந்திரவியல் சேவைகள் இலக்கம் 9.7 இற்குமட்டும்) தருக.

7.சேவைகளை/வழங்கல்களுக்கான கொடுப்பனவுகள் விண்ணப்பத்தில் பதிவு செய்யும் பெயரிலேயே வழங்கப்படும். அத்துடன் வழங்குநர்கள் தங்கள் வியாபார பெயரிலேயே வங்கி கணக்கினை வைத்திருக்க வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு சிரேஷ்ட உதவி நிதியாளர் (வழங்கல்) உடன் தொடர்பு கொள்ளவும்.
தொ. பே. இல. 0212226519.
பதிவாளர்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
## வழங்குநர்கள் மற்றும் சேவையாளர்களை பதிவுசெய்தல் - 2015

*01. தனிப்பட்ட தகவல்கள்*
1.1 முழுப்பெயர்:..............................................
1.2 தே.அ.அ. இல :..............................................
(தேசிய அடையாள அட்டையில் உள்ளபடி)
1.3 விலாசம்:..............................................
1.4 நிரந்தர தொலைபேசி இல:..............................................
கைத் தொலைபேசி இல:..............................................
தொலைநகல்:..............................................

*02. வியாபார தகவல்கள்*
2.1. முயற்சியாண்மை நிறுவனத்தின் பெயர்:..............................................
2.2. பதிவு இல:..............................................
2.3. பெறுமதிசேர் வரி (VAT) இல:..............................................
2.4. விலாசம்:..............................................
2,5. நிரந்தர தொலைபேசி இல:........................
கைத்தொலைபேசி இல:............. தொலைநகல்......................
2.6. மின்னஞ்சல் முகவரி:..............................................
2.7. மாவட்டம்:..............................................
2.8. பிரதேச செயலர் பிரிவு:..............................................

*குறிப்பு: வியாபார பதிவு சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும். இணைக்கப்படாத விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.*

03. *மேலதிக விபரங்கள்*
3.1. வங்கியாளரின் பெயர் :..............................................
3.2.கிடைக்கக் கூடிய கடன் வசதிகள் :..............................................
3.3.ICTAD பதிவு இல :..............................................
(எந்திரவியல் சேவை 9.3 இற்கு மட்டும்.) ICTAD பதிவு இல்லாதுவிடின் ரூபா 200,000.00 (இருநூறு ஆயிரம் மட்டும்) இற்கு உட்பட்ட வேலைகளுக்கு கூறுவிலை சமர்ப்பிக்க மட்டுமே தகுதியுடையவராவார்.

*04. வழங்கல் சேவைகளுக்கான விபரங்கள்.*

| தொடர் இல | சேவைகள் / வழங்கல்கள் |
|---|---|
| | |
| | |
| | |

*05.வழ்ங்கப்படும் பொருட்கள் பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்க வேண்டும*

நான்/நாங்கள் மேற்படி பதிவு நிபந்தனைகளுக்கு இணங்குகின்றேன்/இணங்குகின்றோம்.

கையொப்பம் :.................
பெயர் :...................... (சி-9000) திகதி:...............

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தொடரும் ஜனாதிபதித் தேர்தல் மர்மங்கள்

ஜனாதிபதித் தேர்தல் ஜனவரி மாதத்தில் இடம்பெறும் என அரசாங்க பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல அறிவித்துள்ளார். தேர்தலுக்கான திகதி தனக்குத் தெரிந்த போதிலும் அதனை தான் வெளிப்படுத்தப் போவதில்லை என்று அவர் கூறியிருந்தார்.

இவ்விடயத்தில் சரியான விதிமுறைகளை அவர் பின்பற்றுவதாலேயே தேர்தல் திகதியை அவர் வெளியிடவில்லை. முடிந்தவரை வெகுவிரைவிலேயே தேர்தல்களை நடத்துவது பற்றிய அரசாங்கத்தின் சிந்தனை மற்றும் தீர்மானங்களையிட்டு அமைச்சர் என்னதான் மௌனம் காத்தபோதிலும் சட்டப்படி தேர்தலுக்கான திகதியை தேர்ந்தெடுக்கும் பொறுப்பு சுதந்திரமாக செயற்பட எதிர்பார்க்கப்படும் தேர்தல் ஆணையாளருடையதே ஆகும்.

பதவியிலிருக்கும் ஜனாதிபதி தேர்தலை நடத்தலாம் என்ற அறிவித்தலை வழங்கி 52 மற்றும் 61 நாட்களுக்கிடையில் தேர்தல்களுக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டதாகவே இது பற்றிய முன்னைய அனுபவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இதன்படி வரவிருக்கும் தேர்தல் ஜனவரியில் இடம்பெற வேண்டும். ஜனாதிபதி ராஜபக்ஷவால் அதற்கான அறிவித்தல் இன்னும் விடுக்கப்படவில்லை.

தேர்தல்கள் மிகமிக அண்மித்திருப்பதாகவே தளநிலவரங்கள் வலுவான அறிகுறிகளை காட்டுகின்றன. வழமைபோல் மார்கழியில்லாமல் இந்த வருடம் நேரத்திற்கு முந்திய ஏற்பாடாக ஒக்டோபரிலேயே வாக்காளர் பதிவுகளை தேர்தல் ஆணையாளர் பூர்த்திசெய்திருந்தார்.

தேசிய வரவு செலவுத்திட்டம் வழமைபோல் நவம்பர் மாதத்திற்குப் பதிலாக முந்திக் கொண்டு ஒக்டோபர் மாதத்திலேயே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது.

வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது. வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட நாளுக்கு முந்திய நாட்களின் போது, அரசாங்கம் முன்னுரிமை அளிக்கும் விடயங்கள் பற்றியும் பிரகாசமான ஒரு எதிர்காலத்தை நாடு எதிர்கொண்டிருப்பதுமான பாரிய பிரசார நடவடிக்கைகள் தேசிய ஊடகங்கள் மூலம் விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. அதுமட்டுமின்றி, தேர்தல்களுக்கான ஆயத்தமாக பிரசுர வெளியீடுகள் மற்றும் தேர்தல் கூட்டங்களே நடத்துவதற்கான தேர்தல் மேடைகள் போன்ற ஏற்பாடுகள் பலவற்றிற்கும் அரச மூலவளங்கள் பயன்படுத்தப்படும் சம்பவங்கள் பற்றிய செய்திகள் பலவும் ஊடகங்கள் மூலம் வெளிவந்திருந்தன. எப்படியும், வேளைக்கு முந்திய தேர்தல்களுக்கான இவ்வித ஆதாரங்களுக்கு மத்தியிலுங் கூட உண்மையில்ஜனவரிமாதம்தேர்தல் இடம் பெறுமா என்பது தொடர்ந்தும் சந்தேகத்திற்கிடமானதாகவேயிருந்தது.

ஜனவரி நடுப்பகுதியில் இடம்பெற ஏற்பாடாகியிருக்கும் பாப்பரசரது இலங்கை விஜயத்துடன் இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலும் தற்செயலாகவேனும்சம்பந்தப்படும்விதத்தில் இணையாக நிகழ்ந்து விடாதபடி அமைவதை உறுதிப்படுத்துவதற்கு அரசு தாமதிப்பது கத்தோலிக்க திருச்சபையை குறிப்பான விதத்தில் பாதிக்கும் என ஊடக அறிக்கைகள் எடுத்துக் கூறுகின்றன.

இதுபற்றியவத்திக்கானின்அழுத்தங் காரணமாக, ஜனாதிபதி தேர்தலுக்கான திகதியை திருச் சபைக்கு அறியத் தரும்படி கோரி இலங்கைக்கான வண. கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

ஆனாலும், இது பற்றிய அதிகாரபூர்வ பதில் எதுவும் இதுவரையில் இல்லை. தேர்தல்கள் உட்பட உள்ளூர் கட்சி அரசியல் விடயங்களில் சம்பந்தப்படாமல் தெளிவான முறையில் விலகியிருப்பதே வத்திக்கானின் கடமை என்பதால் இதுமட்டில் தேவைப்படும் ஆலோசனை களை வழங்க முடியாத நிலையில் உள்ளூர் கத்தோலிக்க சபைத் தலைமை இருதலைக்கொள்ளி எறும்பு என்ற விதமானதவிக்கும்நிலையிலுள்ளதாக தெரிகிறது. தேர்தல் ஒன்று இடம்பெறுவதற்கான ஒரு மாதகால எல்லைக்குள் பாப்பரசரது இந்தவிதமான விஜயங்கள் இடம் பெறாது என்பதே திருச்சபையின் வழமையான விதிமுறையாகும்.



ஜனாதிபதித் தேர்தல் மர்மம் எனும் தலைப்பில் கலா நிதி ஜெகன் பெரேரா சண்டே லீடர் பத்திரிகையில் எழு திய ஆய்வு கட்டுரையின் தமிழாக்கம் இங்கே பிரசுரிக்கப்படுகிறது.

### பாப்பரசரது விஜயம்

பேராயரது இல்லப் பேச்சாளரான வண.சிறில்காமினியினது கூற்றுப்படி, ஜனாதிபதி தேர்தலுக்கான அதிகாரபூர்வ அறிவிப்பு தேர்தல் ஆணையாளரால் வழங்கப்பட்ட பின்னரே பாப்பரசரது விஜயம் பற்றி உறுதிப்படுத்தப்படும். இது பற்றிய தீர்மானம் எதுவும் இது வரையில் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் தேர் தல் ஒன்று 2015 ஜனவரியில் இடம் பெறுவதாக இருக்குமானால் பாப்பரசரது இலங்கை விஜயம் மீளாய்வு செய்யப்படும் என்பதே அவரது கூற் றாகும். இலங்கைக்கு விஜயம் செய்வதென பாப்பரசர் அதிகார பூர்வமாக இணங்கி அதற்கான திகதிகளை அறிவித்த பின்னருங்கூட அவருக்குதனிப்பட்ட ரீதியில் அழைப்பு விடுப்பதற்காக தனது பெரியதொரு பரிவாரத்துடன் அவரைச் சந்திப்பதற்கு வத்திக்கானுக்கு விசேட விஜயமொன்றை மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்டிருந்தமை ஆச்சரியத்திற்குரியதாகும்.

ஆனாலும் ஜனாதிபதியின் பக்கத்திலிருந்து வெளிப்படும் ஒரு அரசியல் சூழ்ச்சி நடவடிக்கையாகவே இது இருக்கும். அதாவது, பாப்பரசரின் இலங்கை வருகையை விரும்பி எதிர் பார்க்கும் தனது நேர்மைத் தனத்தை இலங்கையிலுள்ளகத்தோலிக்க மக்களுக்கு உறுதியாக காண் பிப்பது மட்டுமல்லாமல் ஏனைய சம்பிரதாய அக்கறைகளெதனையும் கருத்திற் கொள்ளாத விதத்தில் வருகை தரும்படி அவரை சம்மதிக்க வைக்கும் தந்திரோபாய செயற்பாடுமாகும்.

பாப்பரசர் பிரான்சிசும்கூட வழமையான அவர்களது சட்டசம்பிரதாய வரையறை கடந்த விதமான அவரது அணுகுமுறைகளுக்காக பெரிதும் அறியப்பட்டவராக இருப்பதால் வழமையான சம்பிரதாய விதிமுறைகளை விட்டுக்கொடுத்து செயற்படுவது அவர் மட்டில் முடியாத காரியமாகயிருக்காது.

தற்பெருமையற்ற எளிமையான அவரது மனிதநேய இயல்புடன் தேவையற்ற பாரம்பரியங்களை உடைத்தெறிந்து. செயற்படுவதற்கு அவருக்கிருக்கும் விருப்புக் காரணமாகவும் மக்களின் பாப்பரசர் என்ற பெயரொன்றையுங் கூட அவர் ஏற்கனவே சம்பாதித்துக் கொண்டவராயிருந்தார்.

முக்கியமான பல விடயங்களுடனும் ஒப்பிடுகையில், முன்னர் அவ்விதம் இல்லை என்பது போல அனைத்திலும் அவரே முதலிடம் பிடிப்பவராக இருக்கிறார். அதாவது, அபிவிருத்திகண்டுவரும் உலகத்தின் 1ஆவது பாப்பரசர், லத்தீன் அமெரிக்காவின் முதலாவது பாப் பரசர் என்பதுடன் அநேகமாக 1300 வருடங்களில் ஐரோப்பாவை சேராதவர் என்ற வகையிலும் திருச் சபையின் இயேசு சபையை சேர்ந்தவர் மற்றும் முன்னைய பாப்பரசர்கள் தெரிந்து கொள்ளும் பாரம்பரிய பெயர்கள் வரிசையில் இல்லாத விதத்தில் 1 ஆவது பிரான்சிஸ் போன்ற அனைத்திலும் 1ஆவது இடம் விகிப்பவராகவே அவர் இருக்கிறார். இவர் மட்டில் தெரியவரும்மற்றுமொரு புதினமான விடயமென்னவென்றால் மேற்கின் அதீத நாகரீகம் காரணமாக கைவிடப்ப ட்டு வெறுமையாக காணப்படும் திருச் சபைக் கன்னியர் மடங்கள்.

ஆச்சிரமங்கள் போன்ற சேவைக்குரிய நிலையங்களை புகலிடம் தேடி குடியமர்வோர் மற்றும் அகதிகள் போன்றோருக்கான வதிவிடங்களாக மாற்றும்படி சபையின் பல்வேறு பிரிவுகளுக்கும் பரிந்துரை செய்திருந்தார். வத்திக்கான் நடைமுறைகளில் அவர் கொண்டு வந்திருந்த புதுமையான சிந்தனைகள் பலவற்றில் இதுவும் ஒன்றாகும்.

எனவே வெளிநாடுகளுக்கு பாப்பரசர் மேற்கொள்ளும் விஜயங் கள் மட்டிலும் பழைய நடைமுறை களைக் கருத்திற் கொள்ளாதுவிட அவரால் முடியும். மறுபக்கத்தில், தனது விஜயத்தினை பாப்பரசர் இரத்து செய்வதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுமானால் தேர்தலை தாமதிப்பதற்கான ஒரு நியாயமாக அதனை அரசாங்கம் கண்டுகொள்ளும். தேர்தல்கள் மட்டிலான தேசிய வாக்காளர் எண்ணிக்கையில் 6வீதபங்கினைகொண்டிருக்கும் இலங்கைக் கத்தோலிக்கர்கள் பாப்பரசரின் வருகைக்காக எதிர்பார்ப்புடன் ஆவலாகசத்திருக்கிறார்கள்.

நெருக்கமான போட்டியாக அமையக் கூடிய எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தனியான ஒவ்வொரு வாக்குமே பெறுமதியாக இருக்குமென்பதால் ஒட்டுமொத்தமாகக் கத்தோலிக்கர்களின் வாக்குகளில் ஒன்றையேனும் இழப்பதற்கு அரசாங்கம் விரும்பாது.

எனவே கத்தோலிக்கர்களின் வாக்குகளை தனிமைப்படுத்திவிடக் கூடிய செயற்பாடுகளெதனையும் அரசு செய்யமாட்டாது எனலாம். பாப்பரசர் பிரான்சிசை சந்திப்பதற்காக வத்திக்கானுக்கு ஜனாதிபதி விஜயம் மேற்கொண்டதன் பின்னர் அவரது விஜயத்திற்கான ஏற்பாடுகள் ஒழுங் கமைக்கப்பட்டதை உறுதி செய்து கொள்வதற்காக விசேட குழுவொன்று வெகுவிரைவில், அதாவது இந்த மாத முற்பகுதியில் இலங்கை வரும் என எதிர்பார்க்கப்பட்டது.

பாப்பரசர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதை தடை செய்து விடக் கூடிய எந்தவிதமான தீர் மானமும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பதற்கான ஒரு அறிகுறியே இதுவாகும்.

### மார்ச் மாத தேர்தல்

எப்படியும் ஜனாதிபதித் தேர்தலை நேரத்திற்கு முந்தியவிதமாக நடத்துவது அரசுக்கு அனுகூலமாக அமையாது என்பதற்கு மற்றுமொரு காரணி உண்டு. கூட்டணி அரசின் பங்காளிக் கட்சியான ஹெல உறுமயவினால் அரசுக்கு விடுக்கப்பட்ட காலக் கெடுவே அதுவாகும்.

அரசியல் அமைப்பு சீர்திருத்தங்களை மேற்கொள்ளாமல் அதற்கு முன்னரே ஜனாதிபதி தேர்தலை நடத்தக்கூடாது என்ற பேரம் ஒன்று உள்ளது. உண்மையில், பொதுமக்கள் மத்தியில் இதற்கு பெருமள வில் பரந்துபட்ட ஆதரவுண்டு. உச்ச நீதிமன்ற நீதியரசர்களுடன் முறை யீட்டு நீதிமன்ற நீதியரசர்களையும் நியமிப்பதற்கான நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரம் அகற்றப் படவேண்டும் என தனது தேசிய ஒன்று கூடலின் போது அறை கூவல் விடுத்திருந்த ஜாதிக ஹெல உறுமய ஜனாதிபதியால் நிர்வகிக்கப்படக் கூடிய அமைச்சுக்கள் அரசமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டுமென்பதுடன் ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூறவேண்டும் என்பதும் அதில் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் கண்டிப்பாக வலியுறுத்தியிருந்தது.

ஜனாதிபதியுடனான சந்திப்பொன்றின்போது இவைகளனைத்தும் மீண்டும் மீண்டும் அவரிடம் அழுத்தந் திருத்தமாக எடுத்துக் கூறப்பட் டிருந்தது. ஆனாலும் இந்தத் திருத்தங்கள் அனைத்தையும் தேர்தலுக்குமுன்னர் மேற்கொள்வதற்கு போதிய நேரம் இல்லை என ஜனாதிபதி பதிலளித்ததாக அறிவிக்கப்படுகிறது.

தனது எதிராளிகளால் விடுக்கப்படும் சவால்களுக்கு துணிச்சலுடன் முகம்கொடுத்த ஜனாதிபதியின் பொதுவான நிலைப்பாட்டின் மத்தியிலும், இறுதியாக நடந்த ஊவா மாகாண சபை தேர்தலின்போது வெளிப்படையாகவே தெரிந்த வாக்காளர்மட்ட ஆதரவுச்சரிவு மற்றும் பாப்பரசர் வருகை இரத்தாகக் கூடிய நிலையில் ஏற்படக் கூடிய பின்னடைவுகளுடன் சிஹல உறுமயவின் கண்டிப்பான நிலைப்பாடும் சேர்ந்து அவரது ஆழமான அக்கறைக்குரியபிரச்சினையாகியிருந்தது.

குறிப்பாக, அரசினை தொடர்ச்சியானதேர்தல்வெற்றிகளுக்குஉந்து சக்தியாகஇருந்துசெயற்படுத்தியஇனத்துவ ரீதியிலான அவரது அந்த தேசிய கூட்டணியில் ஒரு நல்லாட்சி மட்டிலான ஹெல உறுமயவின் முனைப்புடன் கூடிய கடுமையான நிலைப்பாடு அவர்களது உறவில் முறிவொன்றினை ஏற்படுத்துவதற்கு காலாகவும் அமைந்து விடக் கூடும். தேர்தல்களில் பெரும் எண்ணிக்கையில் வாக்குகளை வென்றெடுப்பதற்கு ஹெல உறுமயவுக்கு இயலாது இருந்த போதிலுங்கூட இனத்துவ ரீதியில் சிங்களப் பெரும்பான்மையினரின் அரசியல் சிந்தனையை வடிவமைப்பதில் அதற்கு பெருமளவில் செல்வாக்கிருந்தது.

ஹெலஉறுமய பெரும்பான்மைச்சிங்களவர்களை உயர்வான ஸ்தானத்தில் நிலைப்படுத்துவதற்கான ஹெல உறுமயவின் நிலைப்பாட்டினை அவர்கள் அறிந்தவர்களாகவே இருக்கின்றனர். ஒன்றுக்கு இரு தடவை சிந்திக்கும் எவரதும் பகுத்தறிவுக் கண்ணோட்டம் பின்வருமாறே அமையும் எனலாம். கத்தோலிக்க திருச்சபையின் ஆதர வினை வென்றெடுப்பதற்காக பாப்பரசரின் வெற்றிகரமான வருகையை நிச்சயப்படுத்திக் கொள்வதுடன் ஹெல உறுமய முன்வைத்த அரசிய லமைப்பு ரீதியிலான திருத்தங்களை மேற்கொள்வதற்குமான கால நேரத்தை சம்பாதித்துக்கொள்வதற்குமாக தேர்தலை பிற்போடுவதற்கு ஜனாதிபதி இணங்குவாரென்பதே சாத்தியம். இந்த விதமாக பார்த்தால், ஜனாதிபதி தேர்தலை வருகிற மார்ச் மாதத்திற்கு பிற்போடுவதே அரசாங்கத்திற்கு சாத்தியமானதாக இருக்கும். அப்போது கூட, மற்றுமொரு சிக்கலான முக்கிய காரணி குறுக்கிடுவதாகவே உள்ளது. அது தான் ஜெனீவாவில் கூடவிருக்கும் அடுத்த வருடத்திற்கான ஐ.நா.ம.உ. சபைக் கூட்டமாகும். இலங்கையில் நிகழ்ந்த இறுதிக்கட்ட போரின் போது போர்க்குற்றங்கள் இடம் பெற்றனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள் வதற்கான சர்வதேச ஆணை பெற்ற ஐ.நா. விசாரணைக் குழுவின் அறிக்கை சபையின் மார்ச்மாத அமர்வின் போது ஐ.நா. ம.உ.ச க்கு (UNHRC) ஆரம்ப நிகழ்வாக சமர்ப்பிக்கப்பட விருக்கிறது.

இதனை எதிர்கொள்ள வேண்டிய நிலைமையானது வரவிருக்கும் தேர்தல் மட்டில் அரசுக்கு வாக்காளரின் ஆதரவைத்திரட்டிக் கொள்வதற்கான வாய்ப்பொன்றையும் ஏற்படுத்துவதாயிருக்கும். ஏனென்றால் விடுதலைப்புலிகளை தோற்கடித்த தன் மூலம் நாட்டில் ஒருமைப்பாட்டையும் ஸ்திரத்தன்மையையும் ஏற்படுத்திக் கொண்ட எம் நாட்டின் தலைவர்களை தண்டிப்பதற்கான சர்வதேச சதி முயற்சியே குற்ற விசாரணைகளுக்கான இந்த ஜெனீவா அமர்வுகள் என நீண்ட காலமாகவே மக்களுக்கு இது மட் டில் அரசு விளக்கமளித்துவந்தது. வாக்காளப் பெருமக்களில் பெரும் பான்மையினர் என்று கூறாவிடி னும் பலரும் அவரது அக்கூற்றையும் சிந்தனைப் போக்கினையும் நம்பு பவர்களாகவேதான் இருக்கின்றனர். எனவே, ஜெனீவாவில் அரசின் தலைமீது கோடரி இறங்குவதற்கு சற்று முன்னர் சரியான நேரத்தில் இடம்பெறும் இந்த விதமான தேர்தல் பிரசாரமொன்று நாட்டு மக்களின் தேசியவாத உணர்வினை தட்டி எழுப்புவதன் மூலம் நாட்டிலுள்ள அரசுக்கு சாதகமான ஆதரவை திரட்டிக்கொள்வதற்கும் உதவும்.

தமிழில்: யோகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் நீதிமன்றின் தீர்ப்பினை அரசு ஏற்றுக் கொள்ளுமாம்

## அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

**மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போட்டியிடலாம் என்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டிற்கு சாதகமான வகையிலேயே உயர்நீதிமன்றத்தின் முடிவுகள் அமையும் என நம்புகின்றோம். எனினும் நீதிமன்றத்தின் பொறிமுறைகளில் தலையிடும் அதிகாரம் எவருக்கும் இல்லை. நாட்டின் சட்டத்திற்கும், நீதிக்கும் முன்னுரிமை வழங்குவதனால் நீதிமன்றின் தீர்வு எவ்வாறு அமைந்தாலும் அதனை ஏற்றுக்கொள்ளுவோம் என சிரேஷ்ட அமைச்சரும் சபை முதல்வருமான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியுமா என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உயர் நீதிமன்றில் ஆலோசனை கோரியிருக்கின்றார். இதற்கான பதில் எமக்கு நாளை திங்கட்கிழமை கிடைக்கும். எனினும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே மூன்றாவது தடவையாகவும் போட்டியிட வேண்டும் என்பது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு. அதற்கு ஏற்றாற்போல் எமக்கு சாதகமான வகையிலேயே உயர்நீதிமன்றில் முடிவுகள் அமையும் என எதிர்பார்க்கின்றோம்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது எதிர்க் கட்சிகளுக்கே அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. ஜனாதிபதியின் செயற்பாடுகளை தடுக்கும் வகையில் பலர் தமது எதிர்ப்பினை தெரிவித்து வருகின்றனர். எனினும் மக்களின் ஆதரவும், சுதந்திரக் கட்சியின் ஆதரவும் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. இவை இரண்டுமே ஜனாதிபதியையும், அரசாங்கத்தையும் பலப்படுத்தும்.

அதேபோல் உயர் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனு தொடர்பில் அரசியல் தலையீடுகளோ தனிப்பட்ட அழுத்தங்களோ இருக்கக்கூடாது. நாட்டின் நீதிப்பொறிமுறையில் தலையீடு இருக்கக்கூடாது. எனவே நீதி பரிபாலனத்துக்கு முன்னுரிமை கொடுத்து உயர்நீதிமன்றத்தின் தீர்வுக்கு மதிப்பளிப்போம். இவ்விடயம் தொடர்பில் எவ்வாறான தீர்வு அமையப்பெற்றாலும் அதனை ஏற்றுக் கொள்ளவும் நாம் தயாராகவே உள்ளோம்.

அதேபோல் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பாராளுமன்ற உரையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது நான்கு ஆண்டுகளின் நிறைவில் தேர்தலில் போட்டியிட முடியும். ஆனால் அதனை நியாயப்படுத்துவதும், தடுப்பதும் தேர்தல்கள் ஆணையாளரிடமே உள்ளது எனக் குறிப்பிட்டிருந்தார். இக் கருத்தின்படி ஐக்கிய தேசியக் கட்சியினதும் அரசாங்கத்தின் முடிவுகள் இரண்டுமே ஒரே மாதிரியானவை என்பது வெளிப்படுகின்றது. எது எவ்வாறு இருப்பினும் பெரும்பான்மை மக்களின் ஆதரவு ஜனாதிபதிக்கு இருக்கின்றமையினால் அவரின் விருப்பம் தடையின்றி நிறைவேறும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)





ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவரான அமரர் டீ.ஏ. ராஜபக்ஷ 47 ஆவது நினைதினம் நேற்று முன்தினம் காலை தங்கல்லையில் அனுஷ்டிக்கப்பட்டது. தங்கல்லை நகர மத்தியில் அமைந்துள்ள அன்னாரது உருவச்சிலைக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மலர் அஞ்சலி செலுத்தினார். அதனையடுத்து ஜனாதிபதியின் பாரியா ரான திருமதி ஷிராந்தி ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான கோத்தபாய ராஜபக்ஷ, பாராளும ன்ற உறுப்பினரான நாமல் ராஜ பக்ஷ ,தென் மாகாண முதலமைச் சர் , மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்க நாயக்க மற்றும் அமைச்சர்கள் கட்சிப்பிரமுகர்கள் அனைவரும்மலரஞ்சலிசெலுத்தினர்

# சீனாவின் தலைநகரமாக இலங்கை மாறிவருகிறது

## ஐ.தே. கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

சீனாவின் தலைநகரமாக இலங்கை மாறி வருவதோடு கொழும்புத் துறைமுகம் சீனாவுக்கு தாரைவார்க்கப்பட்டு அரசாங்கம் இந்தியாவுடன் இராஜதந்திர நட்புறவில் விரிசலை ஏற்படுத்திக்கொண்டுள்ளது என நேற்றுமுன்தினம் சபையில் குற்றம் சாட்டிய ஐ.தே. கட்சி எம்.பி. ரவி கருணாநாயக்க, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய ஆட்சியில் இந்தியாவுடன் துறைமுகங்கள் தொடர்பாக புதிய உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டம் மீதான நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், கப்பற்துறை அபிவிருத்தி மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சுக்கள் தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே ரவி கருணாநாயக்க எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.,

இலங்கையின் துறைமுகங்கள் அனைத்தையும் அரசு சீனாவுக்கு வழங்கிவிட்டது.கொழும்பு துறைமுகம் சவுத்போர்ட் திட்டத்தின் கீழ் சீனாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இன்று இத்துறைமுகத்திற்கு சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல் வந்து போகிறது.இதனால் இந்தியா எமது நாட்டை சந்தேகமாக நோக்குவதற்கான நிலை ஏற்பட்டுள்ளது.

அன்று ரணிலின் ஆட்சியில் இந்தியாவுடன் நெருங்கி இங்கு துறைமுகங்களை அபிவிருத்தி செய்தோம்.இரு நாட்டு துறைமுகங்களூடாக வர்த்தக நடவடிக்கைகள் இடம்பெற்றன.

ஆனால், இன்று இலங்கை சீனாவின் தலைநகரமாக மாறி வருகின்றது. கொழும்பு துறைமுகம் உட்பட நாட்டின் துறைமுகங்கள் அனைத்தும் சீனாவுக்கு தாரை வார்க்கப்பட்டுள்ளது.

வெகு விரைவில் ரணில் தலைமையில் ஆட்சி மலரும். அதன்போது இந்தியாவுடன் துறைமுகங்கள் தொடர்பாக உடன்படிக்கைகளை செய்து கொண்டு நட்புறவை பேணுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# வாரம் ஒரு தகவல்

## அதிகாலை ஆலோசனை

"என்னம்மா இது.... அதிகாலை நேரத்தில் ஆஸ்பத்திரியைத் தேடி வந்திருக்கிறாய்?..."“ஒரு முக்கியமான சந்தேகத்தை உங்களிடம் கேட்க வேண்டும் என்று வந்திருக்கிறேன் டாக்டர்"“என்ன சந்தே கம்!"“தூக்கத்தில் சில பேர் உளறுகிறார்களே அது ஏன் டாக்டர்?"

"இதற்காகவா இவ்வளவு அவசரமாக வந்தாய்?..."“ஆமாம் டாக்டர்!"“ஆழ் மனதில் அடக்கி வைக்கப்பட்டிருக்கும் ஆசைகள்... அனுபவங்கள்....எண்ணங்கள்.... ஆவேச உணர்ச்சிகள்...இவற்றின் வெளிப்பாடுதான் தூக்கத்தில் உளறுவது!"

"கனவு காண்பதற்கும் உளறுவதற்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டா டாக்டர்!"“பெரும்பாலும் தூக்கத்தில் காணும் கனவுக்கும் அப்பொழுது அவர்கள் உளறுவதற்கும் தொடர்பு உண்டு! கனவில் தோன்றும் உணர்வுகளுக்கு ஏற்றாற் போல் அசைவு கொடுப்பது... சில வார்த்தைகள் பேசுவது..." போன்றவை கூட அந்தச் சமயத்தில் நடக்கலாம்!உதாரணமாக ஒருவர் குதிரையில் சவாரி செய்வது போல் கனவு காண்கிறார் என்றால் தூக்கத்திலும் அவரின் உடம்பு அதற்கு தகுந் தாற் போல் அசையலாம் அது சம்பந்தமான வார்த்தைகள் வரலாம்!அது சரி...நீ ஏன் இதையெல்லாம் விபரமாக கேட்கிறாய்?"

"என் வீட்டுக்காரர் தூக்கத்தில் உளறுகிறார். ஏதேதோ பெயர்கள் எல்லாம் சொல்கிறார்...."“அவரை அழைத்துக் கொண்டு வாம்மா... அதையெல்லாம் நிறுத்தி விடலாம்."“நிறுத்த வேண்டாம் டாக்டர்...நீங்கள் எனக்கொரு உதவி செய்ய வேண்டும்..."“என்ன செய்ய வேண்டும் சொல்!"“அவர் உளறுகிற பெயரெல்லாம் என்ன என்று எனக்குத் தெளிவாகக் கேட்கிறது மாதிரி செய்தால் போதும் மற்றதையெ ல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்.! "

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















❖1793 - கிறிஸ்தவ மதகுரு வில்லியம் கேரி கல்கத்தா வந்து சேர்ந்தார்.

❖1799 - பிரெஞ்சுப் புரட்சி முடிவுக்கு வந்தது. நெப்போலியன் பொனபார்ட் பிரான்ஸைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தான்.

❖1887 - ஐக்கிய அமெரிக்கா ஹவாயின் பேர்ள் துறைமுகத்தின் உரிமையைப் பெற்றது.

❖1913 - மகாத்மா காந்தி கைது செய்யப்பட்டு 9 மாதச் சிறைத் தண்டனையடைந்தார்.

❖1921 - அல்பேர்ட் ஐன்ஸ்டீன் ஒளிமின் விளைவை விளக்கியமைக்காக இயற்பியலுக்கான நோபல் பரிசைப் பெற்றார்.

❖1937 - ஜப்பானியப் படைகள் சீனாவின் ஷங்காய் நகரைக் கைப்பற்றினர்.

❖1953 - கம்போடியா, பிரான்சிடமிருந்து விடுதலை பெற்றது.

❖1967 - நாசா நிறுவனம் கேப் கென்னடி தளத்திலிருந்து ஆளில்லா அப்பல்லோ 4 விண்கலத்தை விண்ணுக்கு அனுப்பியது.

❖1990 - நேபாளத்தில் புதிய மக்களாட்சி அரசியலமைபபு அறிமுகப்படுத்தப்பட்டது.

❖1994 - டார்ம்ஸ்டாட்டியம் (Darmstadtium) என்ற தனிமம் கண்டுபிடிக்கப்பட்டது.

❖2000 - உத்தராஞ்சல் மாநிலம், இந்தியாவின் உத்தரபபிரதேச மாநிலத்திலிருந்து பிரிக்கப்பட்டது.

❖2005 - வீனஸ் எக்ஸ்பிரஸ் என்ற ஐரோப்பாவின் விணகலம் கசகஸ்தானிலிருந்து ஏவப்பட்டது.

### பிறப்புகள

❖1877 - முகமது இக்பால், பாகிஸ்தானிய மெய்யியலாளர், கவிஞர், அரசியல்வாதி (இ. 1938)

❖1934-கார்ல் சேகன், அமெரிக்க வானியலாளர், எழுத்தாளர் (இ. 1996)

❖1952 - ஜாக் சோஸ்டாக், உயிரியலாளர், நோபல் பரிசு பெற்றவர்

❖1959 - ஈ. காயத்ரி, வீணைக் கலைஞர்

### இறப்புகள்

❖1918 - கியோம் அப்போலினேர், பிரெஞ்சுக் கவிஞர் (பி. 1880)

❖1953 - அப்துல்லாஹ் பின் அப்துல் அசீஸ், சவூதி அரேபிய மன்னர் (பி. 1880)

❖1962 - தோண்டோ கேசவ் கார்வே, இந்திய செயற்திறனாளர் (பி. 1858)

❖1970 - சார்லஸ் டி கோல், பிரெஞ்சுத் தளபதி, அரசியல்வாதி (பி. 1890)

❖1992 - தா. சிவசிதம்பரம், இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (பி. 1926)

❖2004 - ஸ்டீக் லார்சன், சுவீடிய ஊடகவியலாளர், எழுததாளர் (பி. 1954)

❖2005 - கே. ஆர். நாராயணன், இந்தியக் குடியரசுத் தலைவர், (பி. 1921)

❖2006 - வல்லிக்கண்ணன், தமிழ் எழுத்தாளர் (பி. 1920)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்



119

...எங்கள் குடும்ப நண்பர். கிரிக்கெட் விளையாட்டில் தீவிர கவனம் செலுத்து, வேறு எதிலும் கவனத்தைச் சிதற விடாதே. விளம்பரம் தொடர்பான அனைத்து விடயங்களையும் நான் பார்த்துக்கொள்கிறேன் என்று என்னை ஊக்குவித்தவரே அவர்தான் என்று அவரைப் பற்றி கூறும்போது சச்சின் கண் கலங்குகிறார்.

தொண்ணூறுகளின் தொடக்கத்தில் அறிமுகமான புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் தாராளமயமாக்கல் காரணமாக பல பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் நுழைந்தன. இந்த வாய்ப்பை மாஸ்கரன் ஹெஸன் நன்கு பயன்படுத்திக் கொண்டார். இந்தியா முழுவதும் ஹோட்டல்களைத் தொடங்கி அதற்குச் சச்சின் டெண்டுல்கர் பெயரை வைக்க வேண்டும் என்றுகூட அவர் விரும்பியதாகக் கூறப்படுகிறது. சச்சின் பெயரை வைத்து இந்தியாவில் எந்தப் பொருளையும் விற்கலாம் என்பதில் உறுதியாக இருந்தார் அவர். அவர் நம்பியதைப் போலவே சச்சின் தோன்றிய விளம்பரப் பொருட்கள் அனைத்துமே சந்தையில் சக்கை போடுபோட்டன.

மாஸ்கரன்ஹெஸன் இறக்கும்போது அவருக்கு வயது 45. இன்னும் சில காலம் வாழ்ந்திருந்து பல சாதனைகளைச் செய்ய வேண்டிய அவரை காலன் விரைவில் அழைத்துக் கொண்டான். அவர் கடந்துவந்த பாதை கரடு முரடானது. எப்பேர்ப்பட்ட ஆளையும் வளைத்துப் பிடித்து ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட வைத்துவிடும் திறமைதான் அவரது சொத்து. மைக்கேல் ஜோர்டான், வில்லியம்ஸ் சகோதரிகள் ஆகியோரை ஒப்பந்தம் செய்திருந்த மற்றொரு புகழ்பெற்ற பன்னாட்டு நிறுவனமான ஐ.எம்.ஜியும் சச்சினுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள கோடிக் கணக்கில் கொட்டிக் கொடுக்கத் தயாராக இருந்தது. ஆனால், கடுமையான போட்டிக்கு இடையே சச்சினுடனான ஒப்பந்தத்தை மாஸ்கரன் ஹெஸன் புதுப்பித்தார். இதற்கு முக்கிய காரணம் அவரது திறமை மீது சச்சின் வைத்திருந்த அசாத்திய நம்பிக்கைதான்.

- பிறந்தது:- 24.04.1973
- இடம்:- மும்பை
- உயரம்:- 5.4"
- அப்பா பெயர்:- ரமேஷ் டெண்டுல்கர்
- அம்மா பெயர்:- ரஜினி டெண்டுல்கர்
- சகோதரர்கள்:- நிதின் மற்றும் அஜீத் டெண்டுல்கர்
- மனைவி:- அஞ்சலி
- மகன்:- அர்ஜுன்
- மகள்:- சாரா
- விளையாடும் அணிகள்:- மும்பை அணி, இந்திய அணி, இங்கிலாந்து யார்க்ஷையர் அணி

## இந்தியாவின் பணக்கார விளையாட்டு வீரர்!



ஃபியட் பாலியோ, டி.வி.எஸ்., எம்.ஆர்.எஃப் பூஸ்ட், ஏர்டெல், விசா, பிரிடானியா, பெப்சி, ஹோம் டிரேட், அடிடாஸ் என விளம்பர மாடலாக சச்சின் தோன்றும் நிறுவனங்களின் எண்ணிக்கை கணக்கில் அடக்காது. அடிடாஸ் விளம்பரத்தில் சச்சின் தோன்றிய பிறகு எங்கள் வர்த்தகம் 200% அதிகரித்தது என்று வெளிப்படையாகவே ஒப்புக்கொண்டார் அதன் மேலாண் இயக்குநர் தருண் குன்ஜ்ரு. ஆனால், சிகரெட் மற்றும் மதுபானம் ஆகியவை மட்டும் இதற்கு விதிவிலக்கு. பல சிகரெட் மற்றும் மதுபான நிறுவனங்கள் சச்சினை பண மழையில் நனைக்கத் தயாராக இருந்தன. இவை இரண்டும் மனித ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிப்பவை. கோடிக்கணக்கில் கொட்டிக்கொடுத்தாலும் தவறான செயல்களுக்கு நான் துணைபோக மாட்டேன் என அவற்றின் விளம்பரங்களில் நடிக்க சச்சின் மறுத்துவிட்டார். பணம் கிடைத்தால் போதும், எதற்கும் தயார் என்று வாழும் மனிதர்களுக்கு இடையே சமூக அக்கறையோடு இருக்கும் சச்சின் நிச்சயம் வித்தியசமானவர்தான்.

பெப்சி விளம்பரப்படத்தில் நடித்தபோது சில பிரச்சினைகளையும் சச்சின் எதிர்நோக்க வேண்டியிருந்தது. மற்றொரு குளிர்பான நிறுவனமான கோக்க கோலா தனது போட்டியாளரான பெப்சியை கிண்டல் செய்வது போன்று ஒரு விளம்பரத்தைத் தயாரித்தது. அத்துடன் கோக் திருப்திப்படாமல் பெப்சியில் நடித்ததற்காக சச்சினையும் ஜாடை மாடையாகக் கிண்டலடித்தது. இதைப் பார்த்ததும் ரசிகர்கள் கொதித்துப்போய்விட்டனர். விளம்பரச் சண்டைகளை உங்களுடன் நிறுத்திக்கொள்ளுங்கள்.

கே. ரமேஷ் (தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## கவலைகள் இன்றி வாழ்தல்!

நமது முழு வாழ்க்கையுமே மற்றவர்களிடம் நற்சான்றிதழைச் சேகரிப்பதைத் தவிர வேறில்லை என்றாகி விட்டது. மற்றவர்கள்- நல்ல கணவன், நல்ல ஊழியர், நல்ல அண்டை வீட்டுக்காரர்- என்ற நற்சான்றிதழ்களைத் தராதபோது, நமது வாழ்க்கையே வீணாகிவிட்டது என்று கவலையடைகிறோம்.

நாம் நமது புற இயல்பையே மற்றவர்களின் நற்சான்றிதழ்களிலிருந்துதான் அமைத்துக்கொள்கிறோம். நாம் நம் மீது நம்பிக்கையிழந்துவிட்டோம். அதுதான் பிரச்சினையே.

குழந்தையாக இருந்தபொழுது நாம் அனைவரும் நமது இருப்புத் தன்மையில் உறுதியாகவே மையம் கொண்டிருந்தோம். நீங்கள் எப்பொழுதாவது ஒரு குழந்தை தன்னைப்பற்றி மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்று கவலைப்பட்டுப் பார்த்திருக்கிறீர்களா? முடியாது! குழந்தை கவனிப்பதற்கு ஒரு நல்ல உதாரணம். ஏனெனில், அவனுக்குக் கவலைகள் கிடையாது. மற்றவர்கள் அவனைப் பற்றி என்ன சொல்வார்கள் என்ற கவலையில்லாததால், அவன் செய்யும் எந்தச் செயலிலும் முழுமையாக ஈடுபடுகிறான்.



நாம் வளர வளர, சமூகம் நம் மீது இந்தக் கருத்தை திணிக்கிறது. சமூகம் மற்றவர்களின் பெற்றோர், ஆசிரியர்கள், நண்பர்கள் மற்றும் அறிமுகமற்றர்களையும் விட்டு வைக்காமல், அவர்களது- கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் கொண்டு நம்மை மதிப்பிட்டுக் கொள்ளக் கற்றுத் தருகிறது. சமூகம் நமது செயல்களுக்கும் வார்த்தைகளுக்கு வெளியிலிருந்து ஆதரவையும் மற்றவர்களின் சான்றிதழ்களையும் சார்ந்திருக்குமாறு செய்து விடுகிறது. அதனால்தான் நாம் எப்பொழுதும் மற்றவர்கள் நம்மைப் பற்றி என்ன சொல்வார்களோ என்று கவலைப்படுகிறோம்.

மேலும், நாம் எதைப் பற்றியேனும் கவலைப்படும்பொழுது, வெளியே ஒன்றை ஆதாரமாக வைத்துக் கொண்டு அதற்கெதிராக நம்மை மதிப்பிட்டுக்கொண்டும், நமது செயற்பாடுகளை அமைத்துக்கொண்டும் இருக்கிறோம். அதனால் கவலைப்படுதல் நமக்கு வாழ்க்கையில் ஒரு

### ஆன்மீகம் 69

வழிகாட்டியாகவும் இருக்கிறது. கவலையில்லாவிடில், நமது இருப்புத் தன்மை நகர்வதற்கு ஒரு அச்சு இல்லாதது போல் உணர்கிறோம். அதனால்தான் நாம் உண்மையிலேயே இரகசியமாக நமது கவலைகளின் மீது காதலோடு இருக்கிறோம்!

ஒரு சின்னக் கதை....

ஒரு ஆளரவமற்ற தீவில் கைவிடப்பட்ட மூன்று பேர் அமர்ந்திருந்தனர். அவர்கள் எத்தனை வருடங்களாக அங்கே இருக்கிறார்கள் என்று அவர்களுக்கே தெரியாது. திடீரென்று அவர்கள் ஒரு பாட்டிலைக் கண்டெடுத்தனர். (தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவு செலவுத் திட்டம்-2015

...மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு ஊடகத் துறையினருக்கு வழங்கப்பட்டிருந்த சலுகைக் கடன் திட்டத்தினை விரிவாக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**கலைஞர்களுக்கான விடுமுறை விடுதிகள்**

கலைஞர்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட 5 விடுமுறை வடுதிகளை நிர்மாணிப்பதற்கு எனது கடந்த வருட வரவு செலவுத்திட்ட உரையில் நான் முன்மொழிந்திருந்தேன்.

இந்த விடுதிகளை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை நிர்மாணிப்பதுடன் அடுத்த வருடத்தில் பூர்த்தி செய்யப்படும்.

சினிமாக் கைத்தொழிலினை சர்வதேச ரீதியில் சிறந்து விளங்கும் வகையில் சர்வதேச திரைப்பட விழாக்களில் விருது பெறும் திரைப்படங்களையும் நாடகங்களையும் தயாரிக்கின்ற திரைப்பட தயாரிப்பாளர்களுக்கு நிதி உதவி வழங்குவதற்காக 5 வருடத்திற்கு அரைவாசி வரி விடுமுறையினை நான் முன்மொழிகின்றேன்.

**திவிநெகும**

கௌரவ சபாநாயகர் அவர்களே, திவிநெகும நிகழ்ச்சித் திட்டமானது 2.5 மில்லியனுக்கு அதிகமான குடும்பங்களை கவர்ந்துள்ளதுடன் இலங்கையிலுள்ள அனைத்து கிராமங்களிலும் தற்பொழுது செயற்படுத்தப்பட்டு வருகிறது.

பச்சை வீடுகள், கோழி வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு பண்ணைகள், கைத்தறி அல்லது சிறிய முயற்சிகளை உருவாக்குவதற்கு முழு குடும்பத்தின் பங்குபற்றுதலுடன் உருவாக்கப்பட்ட ஒவ்வொரு கிராம சேவை பிரிவுகளிலுமுள்ள 5 சிறந்த வீட்டுத் தோட்டங்களுக்கு எவ்வித பிணைப் பொறுப்புமின்றி 3 சதவீத வட்டி விகிதத்தில் ரூபா 50,000 வரை கடன் வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

வர்த்தக ரீதியான தொழில் முயற்சியனை உருவாக்குவதற்கு ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் 5 குடிசைக் கைத்தொழில்களுக்கு 3 சதவீத வட்டி விகிதத்தில் ஐந்து வருட கடன் வசதியினை செயற்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

ஓய்வூதியம் பெறுநர் சங்கங்கள், சிரேஷ்ட பிரஜைகளின் அமைப்புக்கள், மரணாதார சங்கங்களுக்கு ரூபா 100,000 வரை கடன் வழங்குவதற்கான சுழற்சி நிதியம் ஒன்றினை உருவாக்குவதற்கு ரூபா 1,000 மில்லியனை ஒதுக்கீடு செய்கின்றேன்.

திவிநெகும மற்றும் சமுர்த்தி பயனாளிகளை பொருளாதார ரீதியில் வலுவூட்டுவதற்கு வங்கிகளில் 50 சதவீத சேமிப்பினை மேற்கொண்டு அதன்மூலம் குழுப்பிணை பொறுப்பின் அடிப்படையில் குறைந்த வட்டி விகிதத்தில் ரூபா 5,000 இலிருந்து ரூபா 250,000 வரைக்குமான சிறிய கடன்களை வழங்குவதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

4 அல்லது அதிக உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு 3,000 ரூபாவும் 3 உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு 2,500 ரூபாவும் ஏனைய குடும்பங்களுக்கு 1,000 ரூபாவும் என்ற வகையில் மாதாந்த திவி நெகுமகொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**சிறுவர் போஷாக்கு**

கௌரவ சபாநாயகர் அவர்களே, சிறுவர்களுக்கான போஷாக்குணவு, தாய் மற்றும் குழந்தைகளின் போஷாக்கு மட்டத்தினை மேம்படுத்துவதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் போஷாக்கு நிபுணர்களை ஈடுபடுத்தி திரிபோஷா மற்றும் சமபோஷா போஷாக்குணவுகளை பாலூட்டும் மற்றும் கர்ப்பிணி தாய்மார்களுக்கும் முன்பள்ளி பாடசாலை மாணவர்களுக்கான சத்துணவு வழங்கல், சமுதாய மட்டத்தில் நடமாடும் சிகிச்சைகளை மேற்கொள்ளல் என்பவற்றிற்காக ரூபா 500 மில்லியனை ஒதுக்கீடு செய்ய நான் முன்மொழிகின்றேன். போஷாக்கு விருத்திக்காக வீட்டுத் தோட்ட மரக்கறிகள், பால் மற்றும் முட்டை என்பவற்றின் நுகர்வினை அதிகரிப்பதற்கு திவிநெகும- சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்பாடு செய்கின்றன. இந்நடவடிக்கைகள் மூலம் தாய் பாலூட்டலினை ஊக்குவிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

லங்கா சதொச விற்பனை நிலையங்களின் மூலம் சிறுவர் பாலுணவுப் பொருட்களை சலுகை விலைகளில் வழங்குவதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

குழந்தை பாலுணவுப் பொருட்கள் முழுமையாக வரி விலக்களிக்கப்பட்டுள்ளன என்ற வகையில், சிறுவர் பாலுணவின் விலைகளை குறைக்குமாறு சுப்பர் மார்க்கெட்டுகள் மற்றும் வியாபாரிகளினை வேண்டிக் கொள்கிறேன்.

**ரட்டவிரு வலுவூட்டல்**

கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது சனத்தொகையில் ஏறக்குறைய 2 மில்லியன் பேர் உயர் வருமானம் தருகின்ற திறன் தொழில்களில் பல்வேறுபட்ட வெளிநாடுகளில் தொழில புரிந்து வருகின்றனர்.

எனவே, வெளிநாட்டு வேலை வாய்ப்பினை நாடுகின்ற எமது மக்களின திறன் விருத்தியினை அதிகரிப்பதற்காக பதுளை, குருநாகல், ஹம்பாந்தோட்டை, வவுனியா மற்றும் அம்பாறை மாவட்டங்களில் விசேட தொழில் பயிற்சி பாடசாலைகள் 5 இனை உருவாக்குவதற்கு ரூபா 500 மில்லியனை மேலும் ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

அடுத்த வருடத்திலிருந்து விவசாயிகளின் ஓய்வூதியத் திட்டத்தினை ஒத்ததாக வெளிநாட்டு ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

வதிவிட வசாவினை கொண்டில்லாத வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கையர்கள் எமது தாய் நாட்டிற்கு சேவை செய்வதற்கு இயலுமான வகையில் இரட்டை பிரஜாவுரிமையினை அல்லது 5 வருட தொழில வீசாவினை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

வெளிநாடுகளில் பணியாற்றுகின்ற உயர் வருமானம் பெறும் இலங்கையர்கள் மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அதன் பெறுமதியில் 60 சதவீத வெளிநாட்டு செலாவணியை இலங்கை வங்கிகளில் வைப்பிலிடுவதன் மூலம் அரசாங்க ஊழியர்களைப் போன்று சலுகை தீர்வு அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**பெண் தொழில் முயற்சியாளரகள**

இவ்வருடத்தில் சிறுவர் அபிவிருததி, மகளிர் விவகார அமைச்சின் ஒருங்கிணைப்பின் கீழ் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலும் 25 மகளிர் தொழில் முயற்சியாளர்களுக்கு எவ்வித பிணைப் பொறுப்புமின்றி ரூபா 250,000 வரை மூலதன கடன்களாக வழங்குவதற்கு பெண் தொழில் முயற்சி அபிவிருத்தியில் ஈடுபடுகின்ற பிராந்திய வங்கியின் மூலம் மகளிர் தொழில் முயற்சி கடன் திட்டமொன்று செயற்படுத்தப்பட்டுள்ளது.

திவிநெகும முன்னெடுப்புகளின் மூலம் தமது வியாபாரத்தினை வெற்றிகரமாக அபிவிருத்தி செய்யும் மகளிர் தொழில் முயற்சிகள் அல்லது இத்திட்டத்தின் கீழ் தமது சொந்த முயற்சியினால் ஈடுபடுபவர்கள் உதவியளிக்கப்பட்டு 2015- 17 காலப்பகுதியில் ஒவ்வொரு வருடமும் 25 மகளிர் தொழில் முயற்சிகளுக்கு மேலும் வசதியளிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

அவர்களது அபிவிருத்திக்காக தொழில்நுட்ப மற்றும் சந்தைப்படுத்தல் உதவிகளை கைத்தொழில் அபிவிருத்தி சபையும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையும் வழங்கும்.

**சிறியளவு துறைகளுக்கான காணி உடமை**

கௌரவ சபாநாயகர் அவர்களே, அரச காணிகளில் குறுகிய காலத்திற்கு வதிபவர்கள் மாதம் ரூபா 25,000 அல்லது வருடத்திற்கு ரூபா 300,000 இற்கு குறைவான வருமானம் பெறுவார்களாயின் காலத்திற்குக் காலம் நகரப் பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்படும் இடங்களில் நிவாரணம் வழங்குவதற்காக காணி குத்தகை வரியிலிருந்து விலக்களிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

ஒவ்வொரு 300,000 ரூபாவினை விஞ்சிய 100,000 ரூபா வருமானத்திற்கும் 0.5 சதவீதத்திலிருந்து 4 சதவீதம் வரையான மட்டத்தில் ஏனையவர்களுக்கு குத்தகை வரி விதிக்கப்படும்.

4 சதவீத கட்டமைப்பு வருடமொன்றிற்கு 600,000 ரூபாவிற்கு அதிக வருமானம் பெறுநர்களுக்கு விதிக்கப்படும்.

அரச காணிகள் கட்டளைச் சட்டத்திற்கமைவாக பராதீனப்படுத்தப்பட்ட அத்தகைய காணிகளின் ஆதனப் பெறுமதி பராதீனப்படுத்தப்பட்ட திகதியில் உள்ளவாறு அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

எவ்வித நிலுவைக் கட்டணமும் விதிக்கப்படாததுடன் வதிவிட பயன்பாடு தவிர்ந்த சிறியளவிலான வியாபார செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படும் காணிகளுக்கு இந்த குத்தகை கட்டண ஒழுங்கு பிரயோகிக்கப்படும்.

இது அரச காணிகளின் உரித்துரிமை தொடர்பாக தீர்க்கப்படாதிருக்கும் 100,000 இற்கும் அதிகமான வழக்குகளுக்கான நிவாரணமாக அமையும். மேற்குறித்த முன்னெடுப்புகளை செயற்படுத்துவதனை துரிதப்படுத்துவதற்கும் உரித்துரிமையினை உறுதிப்படுத்தும் வகையில் முறையான உரித்துப் பதிவினை மேற்கொள்வதற்காக காணி நில அளவையினை மேற்கொள்வதற்காகவும் காணி, காணி அபிவிருத்தி அமைச்சிற்காக ரூபா 500 மில்லியன் நிதி ஒதுக்கீட்டினை அதிகரிப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன்.



**சிறு வியாபாரங்கள்**

கௌரவ சபாநாயகர் அவர்களே, சிறிய சிற்றுண்டிச்சாலைகள், கடைகள், தையற் கடைகள், சிகை அலங்கார நிலையங்கள், மளிகைக் கடைகள், பாதை வியாபாரிகள், வாராந்த சந்தைகள் என்பன ஆகக் குறைந்த செலவினத்தில் எமது பொருளாதாரத்தில் பெருமளவிலான சுய வேலைவாய்ப்பினை வழங்குகின்றன. இந்த அதிகளவான சேவை வழங்குனர்களிடமிருந்து பெரும் எண்ணிக்கையிலான் நுகர்வோர் நன்மையடைகின்றனர்.

50,000 ரூபாவிற்கு குறைந்த மாதாந்த புரள்வினைக் கொண்ட சிறு வியாபாரிகள் அனைவருக்கும் உள்ளூராட்சி மன்றங்களினால் விதிக்கப்படும் அனைத்துவிதமான வரிகளிலிருந்தும் நான் விலக்களிப்பதற்கு முன்மொழிகின்றேன்.

அவர்களுக்கு வரிகள் மற்றும் தீர்வைகளிலிருந்து விலக்களிக்கப்பட்ட சூழலொன்று ஏற்படுத்திக் கொடுக்கப்படும். மாநகரப் பிரதேசங்களில் புதிய பாதைகளிலும் வாராந்த சந்தைகளிலும் நடமாடும் வியாபாரங்களில் ஈடுபடுகின்ற பாதையோர வியாபாரிகள் மற்றும் சிறு வியாபாரிகளுக்கு பொருத்தமான இட வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சிறிய தையற் கடைகள் மற்றும் சிகையலங்கார நிலையங்களுக்கு தமது சேவைகளை நவீனமயப்படுத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் மற்றும் சிகையலங்கார உபகரணங்களின் மூலம் அறிமுகம் செய்வதற்கு 6 சதவீத வட்டியில் ரூபா 50,000 வரை கடன் வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

புறக்கோட்டையிலுள்ள மிதக்கும் படகு நகரமானது 85 சிறிய நடைபாதை வியாபாரிகளுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. சிறிய வியாபாரிகளின் வாழ்வாதார மற்றும் வியாபார சூழ்நிலையினை மேம்படுத்துவதற்காக அடுத்த வருடத்தில் கொழும்பு கோட்டையிலுள்ள ஏறக்குறைய 1,500 சிறிய வியாபாரிகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக புறக்கோட்டையிலுள்ள ஷாமர்ஸ் கனரி 9 ஏக்கர் காணியில் தரிப்பிட மற்றும் ஏனைய சமுதாய வசதிகளையும் கொண்ட மிகப் பெரும் சந்தைத் தொகுதியொன்றினை நிர்மாணிப்பதற்கு ரூபா 1,200 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**மரத் தளபாடங்கள் மற்றும் வீட்டு அலங்காரம்**




மரத்தளபாட கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள குறிப்பாக மொறட்டுவை போன்ற மிகவும் பிரசித்தி பெற்ற இடங்களிலுள்ள எமது மக்களின் கைவினைத்திறனை கருத்திற் கொண்டு ஏற்றுமதிகளுக்கான பாரம பரிய தளபாட தயாரிப்புக் கைத்தொழிலினை அபிவிருத்தி செய்வதில் இலங்கை முக்கிய வாய்ப்புக்களைக் கொண்டுள்ளது.

ஏற்றுமதிகளுக்காக இக்கைத் தொழிலுக்கு உதவும் வகையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்தியாளர்களுக்கு வெளியார் சேவைகளை பெற்றுக் கொள்வதுடன் தேசிய மரக்கூட்டுத்தாபனத்திடமிருந்தும் பிரபலமான உற்பத்தியாளர்களிடமிருந்தும் பெருமளவிலான வளங்கல்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

ஏற்றுமதிகளுக்கான உற்பத்திகளுக்கு வசதியளிக்கும் வகையில் பலகை, உயர் தொழில்நுட்ப இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் இறக்குமதி மேற்கொள்ளப்படும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான அமரர் நடராஜா ரவிராஜின் 8 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு சாவகச்சேரி மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் விளக்கேற்றுவதையும் அமரர் ரவிராஜின் உருவப்படத்திற்கு வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் மலரஞ்சலி செலுத்துவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர் களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-உ.சாளின்)



தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினரால் மேற்கொள்ளப்பட்ட கடந்த 2013 ஆம் ஆண்டின் பொது நூலகங்களின் பேணல் நடவடிக்கை தொடர்பாக மாகாணமட்டத்தில் பிரதேச சபை ரீதியாக சிறந்த நூலகத்தை தெரிவு செய்தல் நடவடிக்கையின் கீழ் வடக்கு மாகாணத்தில் முதலாவது இடத்தை ஊர்காவற்றுறைபிரதேசசபையின் அனலைதீவு பொது நூலகமானது பெற்றுக் கொண்டுள்ளது. கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா பவுண்டேசன் நிறுவன மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற தேசிய வாசிப்பு மாத தேசிய விழாவில் அனலைதீவு பொது நூலகத்திற்கு விருது வழங்கப்பட்டுள்ளது.



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு சங்கத்தின் 3 ஆவது மாபெரும் இரத்ததான முகாம் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது 50 இற்கும் மேற்பட்ட குருதிக் கொடையாளிகள் இரத்ததானம் செய்தனர்.

(படம்:-பனிக்கன் குளம் செய்தியாளர்)






யாழ். வேலணை மத்திய கல்லூரியின்70 ஆவது ஆண்டு நிறைவும் நிறுவுநர் தினமும் பரிசில் தின நிகழ்வும் அண்மையில் கல்லூரி அதிபர் சி.கிருபாகரன் தலைமையில் நடைபெற்ற போது...




நிகழ்வின் நிழல்கள்

யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் புதிதாக கட்டப்பட்ட நீர்த்தாங்கி கையளிப்பு நிகழ்வும் நிறுவுநர் சிலை திறப்பு விழாவும் அண்மையில் இடம்பெற்ற போது...


யாழ்.கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இதன்போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் எம்.சின்னத்தம்பி மாணவரொருவருக்கு பரிசில் வழங்குவதையும் அருகில் கல்லூரி அதிபர் எம்.கனகலிங்கம் நிற்பதையும் கல்லூரி மாணவிகளினது நடன நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-தும்பளை செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐ டிசம்பர் ரிலீஸ்?

சங்கர் இயக்கத்தில் விக்ரம், எமி ஜாக்சன் நடித்து மிக பிரம்மாண்டமாக உருவாகி இருக்கும் படம் 'ஐ'. இப்படத்தின் ஓடியோ வெளியீட்டு விழாவில் ஹொலிவுட் நடிகர் அர்னால்டு கலந்து கொண்டு சிறப்பித்தது நாம் அறிந்ததே.

ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் உருவாகி இருக்கும் 'ஐ' தீபாவளி வெளியீடாக வெளியாகும் என எதிர்பார்த்த நிலையில் சில தொழில்நுட்ப வேலைகள் இன்னும் இருப்பதால் படத்தின் ரிலீஸ் தள்ளிப் போனது.

தற்போது படத்தின் ரிலீஸ் ரஜினி பிறந்தநாளான டிசெம்பர் 12ஆம் திகதி இருக்கலாம் என தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதே நாளில் ரஜினியில் 'லிங்கா' படமும் வெளியாகும் என அறிவிப்புகள் வந்த நிலையில் ஒருவேளை இவ்விரு படங்களும் ஒரே நாளில் வெளியானால் ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் டபுள் ட்ரீட்டாக அமைய வாய்ப்புள்ளது. எனினும், இது குறித்த அதிகாரபூர்வ தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை.

# உயிருக்கு உயிராய் காதலித்த சிம்பு

நயன்தாராவையும், ஹன்சிகாவையும் தான் உயிருக்கு உயிராக காதலித்ததாகவும் அவர்கள் தன்னை புரிந்து கொள்ளவில்லை என்றும் சிம்பு தெரிவித்துள்ளார்.

சிம்பு, நயன்தாராவை காதலித்தார், முத்தமிட்டார், போட்டோ எடுத்தார்கள், இணையத்தளத்தில் வெளியானது, பெரும் பரபரப்பு ஏற்பட்டது. சிம்பு, நயன்தாரா காதல் முறிந்து போனது. அதன் பிறகு சிம்பு ஹன்சிகாவை காதலித்தார், பிரிந்தார். இது அனைத்தும் தெரிந்ததுதான். நான் நயன்தாராவையும், ஹன்சிகாவையும் உயிருக்கு உயிராக காதலித்தேன். அவர்கள் தான் மதம் மாறுவது போன்று எளிதில் மாறி மனதை மாற்றிக் கொண்டார்கள்.



நயன்தாரா, ஹன்சிகா இருவருமே நான் அவர்கள் மீது வைத்திருந்த உண்மை காதலை புரிந்து கொள்ளவில்லை. நானும், நயன்தாரவும் இது நம்ம ஆளு படத்தில் நடித்தாலும் பழைய நட்பு இல்லை.

காதல் முறிவுக்கு பிறகு நயன்தாரா மற்றும் ஹன்சிகாவை பார்த்தால் ஒரு ஹலோ சொல்வதோடு சரி பேசுவது இல்லை. அதற்கு காரணம் அவர்கள் என்னை புரிந்து கொள்ளவில்லை.

சினிமா துறையில் என் நெருங்கிய தோழி என்றால் அது த்ரிஷா தான். அவருடன் தான் பல ஆண்டுகளாக நல்ல நட்பு உள்ளது. நாங்கள் அவ்வப்போது சந்தித்து பேசுவோம் என்றார் சிம்பு.





ஐயையோ சானியமிர்ஸாவுடன் சிம்பு

அனுஷ்கா சர்மா விராட் ஹோலி

# தனுசுக்கு ஜோடியாகிறார் திரிஷா

'வேலையில்லா பட்டதாரி' சமீபத்தில் நூறாவது நாளை எட்டியது. தனுஷ், அமலா பால் நடிப்பில் ஒளிப்பதிவாளர் வேல்ராஜ் இயக்கிய இப்படம் அனைத்து மக்களிடமும் நல்ல வரவேற்பைப் பெற்றது.

இப்படத்தை தொடர்ந்து தனுஷ் கே.வி.ஆனந்த் இயக்கத்தில் 'அனேகன் மற்றும் இந்தியில் பால்கி இயக்கத்தில் 'ஷமிதாப்'



ஆகிய படங்களில் நடித்து வருகிறார். இவ்விரு படங்களின் படப்பிடிப்புகளும் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன.

இதனையடுத்து மீண்டும் வேல்ராஜ் இயக்கத்தில் தனுஷ் நடிக்க உள்ளதாக சொல்லப்படுகிறது. இதில் ஹீரோயினாக த்ரிஷா நடிக்க இருக்கிறாராம்.

விரைவில் இது குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

# கொம்பனைப் பிடிக்கும் நயன் !



கேரளத்து சேச்சியான டயானா மரியம் குரியனை அதாங்க நயன்தாராவை கோலிவூட்டுக்கு அழைத்து வந்தவர் ஹரி. சரத்குமார் ஜோடியாக ஐயா திரைப்படத்தில் நடிக்க வைக்க தான் நயன்தாராவை தமிழகத்துக்கு அழைத்து வந்தார் ஹரி.

முதல் படத்தில் சுப்ரீம் ஸ்டார், அடுத்த படமான சந்திரமுகியில் சுப்பர் ஸ்டார் என நயன்தாராவின் கெரியர் ஆரம்பத்திலேயே பிக்கப்பாகிவிட்டது. நயன்தாரா காதல் வலைகளில் விழுந்தது, நடிப்புக்கு முழுக்கு போட்டது, மீண்டும் நடிக்க வந்தது பற்றி தெரிந்த விடயமே. இரண்டாம் இன்னிங்ஸில் நயனின் கெரியர் படு சுப்பர் என்றே கூற வேண்டும்.

இந்த கோலிவூட் இளம் ஹீரோக்கள் எல்லோரும், நயனுடன் ஜோடி போட அடிபோடுவதால் அவரின் மார்க்கெட் உச்சத்தில் உள்ளது. ஈ திரைப்படத்தை அடுத்து நயன்தாரா மீண்டும் ஜீவாவுடன் ஜோடி சேர்ந்து நடிக்க உள்ளார். விஜயை இயக்கும் அட்லீ, இந்த திரைப்படத்திலும் தளபதிக்கு ஜோடியாக நயன்தாராவையே தெரிவு செய்துள்ளார் என்று கூறப்படுகிறது.

ஹரி, கார்த்தியை வைத்து எடுக்கும் திரைப்படம் கொம்பன். அதில் அவருக்கு யாரை ஜோடியாக்கலாம் என்று ரூம் போட்டு யோசித்ததில், நயன்தாராவை நடிக்க வைக்க முடிவு செய்துள்ளனராம் படக்குழுவினரிடம். ஹரியின் இயக்கத்தில் மீண்டும் நடிக்க நயன்தாராவும் ஒப்புக்கொண்டுள்ளாராம். நயன்தாரா தற்போது கார்த்தியின் அண்ணன் சூர்யாவுடன் சேர்ந்து மாஸ் திரைப்படத்தில் நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



மோனல் கஜ்ஜார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## மீண்டும் எழுவோம்

என்றைக்குமே உன்
வாழ்வாதாரத்திற்குள்
ஒன்றிப்போன
எம் மலையகத்தாயே...
அன்றைக்கு மட்டும் ஏனோ?
நீ அப்படியில்லையே...
வக்கற்றுப்போன எம்வாழ்வு
வழிதெரியாமல்
திக்கற்றுப்போனது உன் வரவால்...
வாழத்துடித்த ஜீவன்களை
வதைவதையாய்
கொன்றொழித்தாயே
ஒரு நொடி கழியும் முன்னே...
உன் அனர்த்தங்களால் அள்ளப்பட்டு
காவு கொள்ளப்பட்ட உயிர்களதான்
எத்தனை எத்தனை?
கொழுந்து கிள்ளி ஜீவிக்கும்
எம் உறவுகளை கிள்ளியெறிய
எப்படி உனக்கு மனம் வந்தது?
வளங்கள் சூழ்ந்த
லயன்கள் வாழ்வையிழந்த
உயிர்வாழினங்கள்
வகைதொகையில்லா
வாழ்வாதாரங்கள்
உருக்குலைந்து போயின
உன் சல்லாபப்பிடியில் இருந்தும்
உன்கோரச் சுவடுகளில்
நாம் மீண்டும்
பயணிக்கின்றோம்
தொலைந்து போன எம்
வாழ்வாதாரத்தை தேடியே

**க.நாகேஸ்வரா**
**சண்டிலிப்பாய்**

## தொலைந்து போனவள்

தொலைந்து போதல்
அத்தனை சிறப்பானதல்ல
பதற்றம் கொண்டு வரும்
தருணங்கள் அவை
வேண்டுதல்களும் கடவுளரும்
மனதோடு வந்தோடும்
நிமிடங்கள் அவை...
தேடி எடுக்கும் வரையான
கொடுங்கோல் கணங்கள்
யாரும் விரும்புவதில்லை
விதி விலக்காய்
உன்னோடு தொலைந்த இதயத்தை
விரும்பியே இழந்தேன்

**நிக்கஞ்சிகா**
**அரியாலை**

## இயற்கையே உனக்குக்கூட

மண்சரிந்து
புதையுண்டு போன
எம் மலையக
உறவுகளின்
கண்ணீர்க்கதைகளால்
நிரம்பியுள்ள
நாட்களிதில்
ஒரு
சக தமிழனாய்
மனிதனாய்
உள்ளுக்குள்
அழுகிறது இதயம்
அழிவது
தமிழனின்
தொடர்கதையா
தலைவிதியா
இயற்கையே
உனக்குக்கூட
எம்மில்
விருப்பமில்லாமல்
போனதுதான்
ஏனோ...

**புலோலியூர்**
**வேல்நந்தன்**

## இமயம் தொட...

உன்னை நீயே
சமப்படுத்து
உன் தன்மை எதுவோ
அதை திடப்படுத்து
மண்ணை நம்பி வாழ்பவர்
வயிற்றில் அடித்து
அரசியல்மயத்தை- அதில்
புகுத்திடாதே!
உன்தேசம் எதுவோ அதுவே
உன் பிறந்த வீடு!

மாவை. நா.கஜேந்திரன்



## மண்சாய்ந்து போனால்

பெய்யாமல் கெடுப்பது வானம்
பெய்து கெடுப்பதும் அதுவே
பொய்யாமொழியின் பிறளாமொழி
பெய்தே கெடுத்து விட்டதால்
மண்மேடானது குடியிருப்புக்கள்
தலையிலே மண்ணிறைக்கும் யானைபோல்
சூழலை ஆக்கிரமித்தவனுக்கு
இயற்கை சொன்ன இன்னொரு பாடம்...
ஊவாவிலும் அரங்கேறியது
ஊழிக்கூத்து

**சு.சிவராசா**
**நாவற்குழி**

# மௌனத்தின் தேடல்- 228



### ஈருடல் ஓருயிர்

பிள்ளைகளோடு வாதாடி
வாழ்வோடு போராடி
வெறுத்துவிட்ட உலகம் இது
கைபிடித்த நாளிலிருந்து
கைவிடவில்லை இருவரும்
ஈருடல் ஓருயிராய் வீதியில்
யார் இவர்கள்...???
நன்றியற்ற உலகில்
நாளை நானும் நீங்களும்

*சு.அஜித் சுலக்ஷன்*
*மண்டைதீவு*

### ஊன்றுகோலாகிடும் உண்மை அன்பு

உடலிலே ஊனம் தாங்கி
ஊராரின் வார்த்தையால் ஏங்கி
உலகமே ஊமையாய்த் தூங்கிட
உயிரில் பாதி கலந்த மனைவி
துன்பத்திலும் ஊன்றுகோலாகி
உண்மை அன்பாய் தாங்கினாள்

*வன்னியூர் ராம்கி*
*ஜெயந்திபுரம்*

### நிலைமைக்கேற்ற வாழ்வு

உடல் ஊனம் பெரிதல்ல
பிறர்க்கு கேடு நினையா
நல் மனமே பெரிது
வல்லவனுடன் சரி நிகர்
அற்ற நிலையெனினும்
உடற்குறை இயலாமை
மனத்தகற்றி
இல்லறத்துணையோடு
இனிது வாழ்க்கை

*ம.திருவரசுராசா*
*வவுனியா*

### பதிவிரதை

கணவனைக் காத்திடும்
கண்ணான பணியினை
சிரம்மேல் கொண்டு
நிறைவேற்றும் பெண்ணே
நீயே பெண்குலத்தின் முன்னோடி
நீயே பெண் இனத்தின் விடிவெள்ளி

*என்.நிறோச்*
*விசுவமடு*

### எதிர்காலத்தை நோக்கி...

நம்மைப் பெற்றவர்கள்
போய்ச்சேர்ந்துவிட
நாம் பெற்றவர்களோ
வெளிநாடு சென்றுவிட
நாம் இருவர் இங்கே
நடுத்தெருவில் நிர்க்கதியாய்
இருந்தும் நம் வாழ்க்கை வண்டி
மெல்லப் பயணிக்கிறது
நாளைய எதிர்காலத்தை
நோக்கி நம்பிக்கையோடு

*யோ.காண்டீபன்*
*மானிப்பாய்*

### அபயக்கரம்

வாழ்வென்னும் நதியினிலே
வாலிப வசந்தங்கள்
வீசிய திசையினில் இசைந்து
பயணித்த உறவுகள்
சந்தித்த வயோதிபச் சுழியால்
அவயம் பாதித்த ஜோடிக்கு
அபயம் அளிக்கின்ற
பெண்ணின் விழியில் ஒளிர்வது
மனிதநேயம் மட்டுமா! இந்த
மண்ணின் பண்பாடுமல்லவா

*அராலியூர்*
*சோ.சிவகுமாரன்*

### இளைஞர்களே

இதயத்திலே பரிசுத்தமாய்
தோளிலே சுவாமியை
சுமப்பது போல்
உலகையே அன்பால்
சுமக்கவேண்டும்
விசுவாசமான சேவையே
விமோசனம் தரும் என
இந்தப் பெண்ணின்
சுயநலம் கருதாத
உன்னத சேவைபோல்
ஆற்றினால் ஏழை
இதயங்களுக்கு ஆயுள்
கொடுக்க முடியும்

*க.அபர்ணா*
*வட்டுக்கோட்டை*

### விதிவிலக்கு

பொழுதை விழுங்கும்
போக்குவரத்தில்
சமாந்திரமென்றும்
சமமானவையல்ல
சுதந்திரம் சமத்துவம்
சகோதரத்துவமென்று
புரட்சிகள் கூறிய
கருத்துக்கள் யாவும்
புனிதம் கருதி புத்தகங்களின்
பக்கங்களில் மாத்திரம்
பாதுகாக்கப்படுகின்றன
தள்ளாடினாலும் புள்ளடி போடும்
தினம் மாத்திரமே
இதற்கு விதிவிலக்கு

*க.நாகராசா*
*நுணாவில்*

### உயர்ந்த உள்ளம்

குணத்தா லுயர்ந்தவனின்
குறையுணர்ந்து கொண்டவள்- சேவை
மனத்தாலுயர்ந் தொன்றுபட்டு
நேசமுற வாழ வழிவகுத்தால்
தேடலின் பயணமிது
நெடுந்தூரமில்லையே...!

*வீ.வினிஸ்*
*பண்டத்தரிப்பு*

### இல்லறம்

உற்ற துணை யிவர்தானென்று
உற்றவர்கள் கூடிநின்று
இணைத்த கரம் பற்றி
இன்பம் துன்பம் பகிர்வோமென்ற
இதய ஒலிக்கு நீதான் உருவம்
மனையாள் கடந்து; அன்னை
தந்தை, நட்பாய் நிற்கும்
அன்னை யுந்தன் பாதம் பணிவேன்

*து.கருணாகரன்*
*கிளிநொச்சி*

# மௌனத்தின் தேடல் -229



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 12.11.2014 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்சரிவில் உயிர் நீத்த மக்களுக்கு பிரார்த்தனை



பதுளை கொஸ்லாந்தையில் மண் சரிவினால் உயிரிழந்த மக்களுக்கான ஆத்ம சாந்தி வேண்டி பிரார்த்தனை நிகழ்வு வவுனியா பூந்தோட்டம் நரசிங்கர் ஆலய கலாசார மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் நகரசபை செயலாளர் சத்தியசீலன், முன்னாள் நகர பிதா எஸ்.நாதன் ஆலய பரிபாலன சபையினர் மற்றும் பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டதைப் படத்தில் காணலாம்.

(படம்:-பூந்தோட்டம் செய்தியாளர்)

## விவாதப் போட்டியில் முதலாமிடம்




இலங்கைசமூக பாதுகாப்பு சபையின் செயற்பாடுகளை சமூகமயப்படுத்தும் வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் பாடசாலை மட்டத்தில நடத்தப்பட்ட விவாதப் போட்டியில் கிளி/மத்திய மகா வித்தியாலயம் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டது. இரண்டாமிடத்தை கிளி/முருகானந்தாக் கல்லூரியும் மூன்றாமிடத்தை சென்.திரேசா மகளிர் கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம் மாகாண மட்டப் போட்டிகளுக்கு செல்லவுள்ளதுடன் மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றமைக்காக கொழும்பில் வைத்து ஜனாதிபதியிடம் 25 ஆயிரம் ரூபா பணப் பரிசிலைப் பெறவுள்ளனர்.

முதலாமிடத்தை பெற்ற கிளி/ மத்திய மகாவித்தியாலய மாணவர்கள் பொறுப்பாசிரியருடன் இருப்பதைப் படத்தில் காணலாம். (அ-2-254)


## சமுர்த்தி அலுவலகத்தின் மீது தீ வைப்பு; ஜன்னலும் உடைப்பு



வவுனியா சின்னப்புதுக்குளத்தில் அமைந்துள்ள சமுர்த்தி அலுவலகத்திற்கு நேற்று அதிகாலை இனந் தெரியாத நபர்களினால் தீ வைக்கப்பட்டுள்ளது.இது பற்றி மேலும் தெரிய வருவதாவது. நேற்று காலை சிரமதான பணியில் ஈடுபட்டவர்கள் சமுர்த்தி அலுவலகத் திலிருந்து புகை வருவதை அவதானித்துள்ளனர்.

பின்னர் அக்கிராம மக்கள் பொலிசாருக்கு தொலைபேசிமூலம் தகவலை தெரியப்படுத்தினர்.சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதே நேரம் ஜன்னல்கள் உடைக்கப்பட்டு அங்கு காணப்பட்ட சமுர்த்தி ஆவணங்கள் எரியூட்டப்பட்டுள்ளதாக பொலிசார் நடத்திய முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. (அ-2-250)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(கண்டாவளை)

பெரியகுளம் பரந்தனில் வசிக்கும் யோகராசா கோபிநாத் என்பவர் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட சமாதான நீதவானாக கடந்த 4 ஆம்திகதி கிளிநொச்சி மாவட்ட நீதவானால் எம்.ஐ. வஹாப்டீன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலக வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமை புரியும் இவர் கிளி/தர்மபுரம் மத்திய கல்லூரியின் பழைய மாணவனாவார். (அ-2-263)

# முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள குளங்களைப்புனரமையுங்கள்

(முல்லைத்தீவு) **பிரேரணை சமர்ப்பிப்பார் ரவிகரன்**

**முல்லைத்தீவு மாவட்டத்தில் திருத்தியமைக்கப்பட வேண்டிய அல்லது அழிந்து போயுள்ள நிலையில் 115 வரையான குளங்கள் காணப்படுகின்றன. இக்குளங்களை திருத்தி பாவனைக்கு வழங்கும் போது இம்மாவட்டத்தின் நீர்ப்பாசன தேவையின் ஒரு பகுதியை பூர்த்தி செய்து கொள்ள முடியுமென்ற பிரேரணையை வடமாகாண சபை ஆளும் கட்சி உறுப்பினர் து.ரவிகரன் முன்மொழிந்துள்ளார்.**

வடமாகாண சபையின் 19 ஆவது அமர்வு எதிர்வரும் 19 ஆம் திகதி கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. இதன்போதே மேற்படி பிரேரணையை சமர்ப்பித்து அவர் கருத்துக்களை முன்வைக்கவுள்ளார்.

அப்பிரேரணை விபரம் வருமாறு,

முல்லைத்தீவு மாவட்டத்தில் திருத்தி அமைக்கப்படாத நிலையில் 115 வரையிலான குளங்கள் காணப்படுகின்றன. இவற்றின்நீர்கொள்திறன் குறைவாகக் காணப்பட்டு வருகிறது.

இக்குளங்களை திருத்தி பாவனைக்கு வழங்கும் போது இம்மாவட்டத்தின் நீர்ப்பாசன தேவையின் ஒரு பகுதியை பூர்த்தி செய்ய முடியும்.

பருவமழையிலிருந்தே இம்மாவட்டத்தின் நீர்த்தேக்கங்களான குளங்கள் நீரைப் பெறுகின்றன.

எனவே குளங்களை ஆழமாக்கி அகலமாக்கி திருத்தி அமைப்பதன் மூலம் அவற்றின் நீர் கொள்திறனை அதிகரித்து கொள்ளமுடியும்.

இதனால் கால போக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள்தமக்கானவயல்நிலங்களுக்கு தேவையான நீரை பெற்றுக் கொள்ள முடியும்.

அத்துடன் கால்நடைகளும் குளங்களில் இரந்து நீரை பெற்று தாகத்தை தீர்க்கும்.

ஆகவே நீண்ட கால அடிப்படையில் பயன்பெறக்கூடிய வகையில் அழிந்து போயுள்ள குளங்களை புனரமைப்பு செய்ய வேண்டுமென வடமாகாண விவசாய அமைச்சரை கோரும் பிரேரணை ஒன்றை அவர் கொண்டு வரவுள்ளார்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் மேய்ச்சல் தரைக்கான நிலங்கள் போதுமான அளவில் இல்லாததன் காரணத்தால் கால்நடைகள் பாதிக்கப்பட்டு வருகின்றன.

எனவே மேய்ச்சல் தரைகளை நிர்ணயித்து கால்நடைகளை காப்பாற்ற வேண்டுமென்ற இன்னொரு பிரேரணையையும் அவர் கொண்டு வரவுள்ளார். (அ-2)





## தண்டப்பணம் செலுத்தினார்

(முள்ளியவளை)

ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலியாக கால்நடைகளை உலாவவிட்ட கால்நடைகளின் உரிமையாளர்கள் ஐவருக்கு முல்லை.மாவட்ட நீதிமன்றம் தண்டப்பணம் அறவிட்டுள்ளது.

குறித்த ஐவரையும் நேற்று முன்தினம் ஒட்டுசுட்டான் பொலிஸார் முல்லைத்தீவு நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தண்டப் பணத்தைச் செலுத்துமாறு உத்தரவிட்டார். அத்தோடு குறித்த கால்நடைகளை ஏற்ற முறையில் பராமரிக்குமாறு அவர் உரிமையாளர்களிடம் பணித்தார். (அ-2-300)

## மைதான சீரமைப்புக்கு இரண்டு இலட்சம் ரூபா

### ஒதுக்கினார் வை.தவநாதன்



(பூநகரி)

வட மாகாண சபை உறுப்பினர்களுக்கு இவ்வாண்டு ஒதுக்கப்பட்ட, பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் தனக்கு ஒதுக்கப்பட்டதிலிருந்து பூநகரி மத்திய கல்லூரியின் மைதானம் சீரமைப்பதற்கு வடமாகாண சபை உறுப்பினர் வை. தவநாதன் இரண்டு இலட்சம் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளதாக தெரிவித்தார்.

பூநகரி மத்திய கல்லூரியின் மைதானம் சீரமைப்பு தொடர்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் பாடசாலை சமூகத்துடன் அண்மையில் கலந்துரையாடியுள்ளார்.

இதன் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தற்போது மைதானம் மிகவும் மோசமான நிலையில் மாணவர்களின் எந்தவொரு தேவைக்கும் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகிறது. எனவே அதனை மண் நிரப்பி சீர்படுத்த வேணடும். அதற்காக பாடசாலை சமூகத்தின் கோரிக்கைக்கு அமைவாக மாகாண சபை உறுப்பினர் நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளார்.

பாடசாலை அதிபர் இ.பாலச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் குகேந்திரன், பிரதேச சபை உறுப்பினர் இராசலிங்கம கொல்லக் குறிச்சி கமக்கார அமைப்பின்தலைவர் சண்முகலிங்கம், வலயக் கல்வி திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர் முருகேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-2)

## வவுனிக்குள புனரமைப்பையடுத்து நெற்பயிர்ச் செய்கை அதிகரிப்பு

(வவுனியா)

முல்லைத்தீவு வவுனிக்குளம் புனரமைக்கப்பட்டமையால்இம்முறை கால போகத்தில் அதன் கீழ் 6 ஆயிரத்து 60 ஏக்கரில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வவுனிக்குளம் நீர்ப்பாசன பொறியியலாளர் தெரிவித்தார்.

வவுனிக்குளம் புனரமைக்கப்படாமல் இருந்தமையால் குளத்தின் நீர்ப்பாசன வாய்க்கால்களும் சேதமடைந்து காணப்பட்டன. இதனால், 4 ஆயிரம் ஏக்கரில், மாத்திரம் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது. நெற் செய்கை மேற்கொள்ளக் கூடிய 2 ஆயிரம் ஏக்கர் வரை நெறசெய்கை மேற்கொள்ளப் படாமல் இருந்தது.

இந்நிலையில், முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 600 மில்லியன் ரூபாய் நிதியுதவியில் 2013 ஆம் ஆண்டு வவுனிக்குளம் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

முன்னர் 24 அடி கொள்ளளவை கொண்டதாக இருந்த வவுனிக்குளம், தற்போது 25 அடி நீரை கொள்ளக்கூடியதாக புனரமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குளத்தின் வாய்க்கால்களும் சீரான முறையில் புனரமைக்கப்பட்டுள்ளன.

இதன் பின்னர், தற்போது மேலதிகமாக 2060 ஏக்கரில் கூடுதலான நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. (அ-2)

## திருடிய சிறுவர்கள் சிறுவர் காப்பகத்தில் நீதிமன்றம் உத்தரவு

(முள்ளியவளை)

மல்லாவி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்த சோலர் (சூரிய மின்கலம்) திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 9 மற்றும் 11 வயதுடைய இரண்டு சிறுவர்களை முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா, முத்தையன்கட்டு புனிதபூமி சிறுவர் காப்பகத்தில் இணைக்குமாறு உத்தரவிட்டார்.

குறித்த இரு சிறுவர்களும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் நேற்று முன்தினம் மல்லாவி பொலிஸாரினால் ஆஜர் படுத்தப்பட்டனர். இதன் போதே சிறுவர்களின் நலன்கருதி மேற்படி தீர்ப்பினை அவர் வழங்கினார். (அ-2-300)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



# திருமதி சரஸ்வதி மார்க்கண்டு

யாழ். இணுவில் மேற்கு கந்தசுவாமி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட *திருமதி சரஸ்வதி மார்க்கண்டு* கடந்த 05.11.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் மார்க்கண்டு அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கதிரிதம்பி- இராசம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான சுப்பர்- வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மருமகளும்,நடராசா (இணுவில்), செல்லம்மா (கனடா), அன்னம்மா (கனடா), காலஞ்சென்ற இந்திராணி மற்றும் வன்னியசிங்கம் (பிரான்ஸ்), கமலாதேவி (மன்னார்) ஆகியோரின் அன்பு சகோதரியும் சிவஞானம் (வீதி அபிவிருத்தி திணைக்களம்), சிவசூரியன் (கனடா), சிவப்பிரமம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), சிவதாசன் (பிரான்ஸ்), சிவானந்தன் (பிரான்ஸ்), சிவமலர் (கனடா), சிவனேஸ்வரி (கனடா), சிவசரணம் (பிரான்ஸ்), சிவசோதி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இந்திராணி, வசந்தினி (கனடா), தவராணி (ஆசிரியை, சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்), உதயகுமாரி (பிரான்ஸ்), யசோதா (பிரான்ஸ்), புஸ்பலிங்கம் (கனடா), கிருபானந்தசிவம் (கனடா), சுதாயினி (பிரான்ஸ்), பரங்கிரிநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவரான வேலுப்பிள்ளை சுவாமியார், பூமாலட்சுமி (கனடா), காலஞ்சென்றவரான மகாலிங்கம், கந்தையா, இராசநாயகலிங்கம், ஜெயக்கிளி (பிரான்ஸ்), தனபாலசிங்கம் (மன்னார்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் வாகினி, விக்னேஸ்வரன் (தேசிய சேமிப்பு வங்கி), கரிகாலன், கரிகரன், பிரணவன், பவித்திரா, சஜீபன், சஜித்தா, கீர்த்திகா, சிந்துஷா, சாருசன், சாரங்கன், சகானா, தவநீதன், ஆரணி, கஜன், கிரிதரன், கஜீபன், கீர்த்தீபன், சாருஜி, சஜீன், சாருஸ், ஜெனிசா, பிரஷா, ஜெனீசியன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் கம்சரூபன், கரிகேசன், அபிசன் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.


*அன்னாரின் பூதவுடல் 09.11.2014 இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.*

இணுவில் மேற்கு,
இணுவில்.
021 300 6737

தகவல்:-
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோண்டாவில்-ஈழத்து சபரிமலை அருள்மிகு ஸ்ரீ சபரீச ஐயப்பசுவாமி தேவஸ்தான மஹா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்திப் பெருவிழா- 2014



## பிரதிஷ்டா பிரதம குரு ஆசியுரை

ஈழத்துச் சபரிமலையாம் கோண்டாவில் ஸ்ரீசபரீச ஐயப்ப சுவாமி தேவஸ்தான சப்ததச (17) குண்ட கும்பாபிஷேக பெருஞ்சாந்திப் பெருவிழா சிறப்பாக நடைபெற கலியுகவரதன் கண்கண்ட தெய்வமாய் வந்து உதித்த மாமலைவாசன் மணிகண்ட தேவன் சபரிமலைவாசன் ஐயப்பசுவாமி திருவருள் பாலித்துள்ள இவ்வேளையில் இந்த கும்பாபிஷேகத்தை அடியேன் தலைமை தாங்கி நடத்த பூர்வ ஜன்ம புண்ணியம் செய்துள்ளேன். இம்முறை 18ஆம் மலை செல்லவுள்ளேன். இந்த 18ஆம் மலையை தாண்டுவதற்கு பெரிய பாக்கியம் பெறவேண்டும். சபரிமலை சென்ற ஒரு குருவினால் தான் சபரிமலை ஐயப்பனுக்கு கும்பாபிஷேகம் செய்வது சிறப்பாகும், உத்தமமாகும்.

அந்த வகையில் ஸ்ரீசபரீசஐயப்ப சுவாமி தேவஸ்தானதர்மகர்த்தா குருஸ்சுவாமி பிரம்மஸ்ரீ கி.அரிகரசுதசர்மா சோபனா தம்பதிகள் மிகவும் புண்ணியம் செய்தவர்கள். பாக்கிய சாலிகள். ஒரு கோயிலைக்கட்டி கும்பாபிஷேகம் காண்பது என்பது முடியாத ஒரு காரியமாகும். இவர்கள் 17 குண்டங்கள் அமைத்து பல தலைசிறந்த சிவாச்சாரியார்களை அழைத்தது மாத்திரமல்லாது இலங்கையில் முதல்முதலாக சபரிமலை சென்ற அந்தண சிரேஷ்ட குருஸ்வாமி ஐயப்பதாச சாம்பசிவ சிவாச்சரியாரை அழைத்து கும்பாபிஷேகத்தை நடத்தியிருப்பது மிகச் சிறப்பானதாகும். சிறப்பானதான, உத்தமமானதான இந்தக் கும்பாபிஷேகத்தை பார்ப்பவர்கள் , தரிசிப்பவர்கள் எத்தனையோ புண்ணியப்பேறு பெற்றவராகிறார்கள். ஆலய தர்மகர்த்தா சிவாச்சாரியார்கள், அடியார்கள், சுவாமிமார்கள் எல்லோருக்கும் ஐயப்பனுடைய பரிபூரண திருவருள் கிடைப்பதற்காக ஆசிர்வதிக்கிறேன்.

சர்வேஜனகா சுகினோ பவந்து

அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ ஜெகதீஸ்வர சிவாச்சாரியார் (ஜே.பி), (அதிபர், சர்வதேச ஸ்ரீதேவி குருகுல சபரி பீட வேதாகம கலாசாலை)



## ஓம் சாமியே சரணம் ஐயப்பா!

### அருளாசிச் செய்தி

ஓம் சாமியே சரணம் ஐயப்பா
லோகவீரம் மஹா பூஜ்யம்
ஸர்வரக்ஷாகரம் விபும்
பார்வதி ஹிருதயானந்தம் ஸாஸ்தாரம்பிரணமாம்யகம்
ஓம் கன்னி மூலகணபதி பகவானே சரணம் ஐயப்பா!

என வடமாகாணம் யாழ்ப்பாணம் ஈழத்துச் சபரிமலை என எல்லோராலும் வாயார, மனமார போற்றி சரணகோசம் போட்டு ஐயன் ஐயப்பனை அழைத்து இன்னருள் பெறும் ஆலயமாகத் திகழ்கின்றதுகோண்டாவில் சபரீச ஐயப்பன் தேவஸ்தானம். அடியார் துயர் துடைப்பவனாக ஐயப்பன் இப்பதியில் கோயில் கொண்டு இரண்டாவது கும்பாபிஷேகப் பெருவிழாவை 9.11.2014 இன்று நிறைவாக்குவது ஐயப்பன் அருட்கடாட்சமேயாகும்.

சபரிமலை ஐயப்பன் ஆலய அமைப்பை ஓரளவு ஒத்த வடிவில் அமைத்து கோயில் கொண்டு அருள்புரிய ஐயன் எண்ணியுள்ளான். அதன்படியேதான் அவன் ஆலயம் அமைந்தது. மாணிக்கவாசக சுவாமிகள் அவனருளாலே அவன்தாள் வணங்கி என்று அருளிய சிவபுராண அடிகள் வழி இப்பெரிய திருப்பணி நிறைவாகி கும்பாபிஷேகப் பெருவிழா நிறைவாகின்றது. இக்கும்பாபிஷேகம் அனைத்து மக்களுக்கும் ஐயப்பனடியார்கள், ஐயப்ப சாமிமார்கள், குருஸ்வாமிமார்கள் அனைவ ருக்கும் ஐயப்பனருள் கிடைக்கும் வண்ணம் அமையவேண்டும் என ஐயப்பனைப் பிரார்த்தித்து ஆசி கூறுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.

சாஸ்தாதாசன், தர்மகர்த்தா குருஸ்வாமி சிவ ஞானகலாமணி, சிவஸ்ரீ.கி. ஹரிஹரசுத சிவாச்சாரியார், ஆலய அறங்காவலர், கோண்டாவில்





## அரிகர புத்திரனே சரணம் சரணம்

உலகத்தின் கர்த்தா சிவபெருமான். சிவனின் காத்தல் சக்தியாக விளங்குபவர் மகாவிஷ்ணு. சிவனும் மகாவிஷ்ணும் சேர்ந்து அளப்பெரிய சக்தி வாய்ந்த அரிகரபுத்திரனைத் தோற்றுவித்து கொடிய மகிஷியை வதம் செய்வித்ததும் தம் அடியார்களுக்கு வாழ்வு கொடு த்தார். இந்த ஐயப்பன் வழிபாடு உலகமெல்லாம் மிக வேகமாக வளர்ந்து வருகின்றது. பஞ்சமா பாதங்களைத் தவிர்த்து இரண்டு மாதங்கள் மாலை அணிந்து விரதமிருந்து இருமுடி கட்டி யாத்திரை செய்து வழிபடுபவர்களுக்கு எல்லா நலன்களும் கிடைக்கின்றது. இதனை கோண்டாவிலூர் ஐயப்பன் தேவஸ்தானமும் நிகழ்த்தி வருவதில் மகிழ்ந்து கொள்கிறேன்.

ஆசிரியர் ஆலோசகர் வலிகாமம் கல்வி வலயம்
சைவப்புலவர் சைவசித்தாந்த கலாநிதி செ. கந்தசத்தியதாசன் (J.P,M.A)



## அகத்தும் புறத்தும் தூய்மை பெறுவோம்

கிராமிய வழிபாட்டில் சிறப்பிடம் பெறும் ஐயப்பன் வழிபாடு இன்று பிரபல்யம் பெற்று விளங்குகின்றது. கார்த்திகை மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஒரு மண்டலம் விரதமிருந்து கோடிக்கணக்கான பக்தர்கள் சுவாமிகள், குருசுவாமிகள் ஐந்து மலை கடந்து பதினெட்டுப்படியேறி இருமுடி நெய் அபிஷேகம் செய்து ஐயன் ஐயப்பனைத் தரிசனம் செய்கின்றார்கள். இன்றைய கும்பாபிஷேக நாளில் சபரீச ஐயப்பனுக்கு நடைபெறும் பெரும் சாந்தி விழாவில் அத்தகைய சிறப்பான வழிபாடுகள் நடைபெற உள்ளன. இவ்விழாவில் அனைவரும் கலந்து சபரி மலையில் நடைபெறும் சிறப்பு வழிபாடாக கண்டு கும்ப நீரின் மகிமையால் அகத்தும் புறத்தும் தூய்மை பெறுவோமாக.

அன்பன்

வித்தியாரெத்தினம், சைவசிரோமணி கு.சரவணபவானந்தன் செயலாளர், உலக சைவத்திருச்சபை, யாழ். மாவட்டம்



## அருள் பெறுவீர் ஐயப்பனிடம்

பூசை, வழிபாடு, தியானம், பஜனை அனைத்திலுமே கோண்டாவில் சபரீச ஐயப்ப சுவாமி ஆலயத்திற்கு சிறப்பிடம் உண்டு. பல சுவாமிகளுக்கு வழிகாட்டியாக குரு சுவாமியாக இருந்து ஆலயத்தை வழிநடாத்திச் செல்லும் சிறப்பை தரிசனத்தின் போது கண்டு ஆனந்தமடைந்தேன். ஒருபடி மேலே சென்று ஆலயத்தில் புனராவர்த்தன மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவது எமக்கெல்லாம் மகிழ்ச்சியளிக்கின்றது. சுற்றி வரவுள்ளதோ புலம். மக்களின் உள்ளத்திலோ ஐயப்பனுக்கு இடம். அடியார்களின் ஒழுக்க முறையான தியானம், பஜனை ஆலயத்தை புதுமெருகூட்டச் செய்து கும்பாபிஷேகம் காண வைத்துள்ளது. காணற்கரிய அற்புதமான ஐயப்ப தரிசனத்தை அந்த ஜோதியை கோண்டாவிலில் கண்டு ஆனந்தமடைவோம். கும்பாபிஷேகம் காணாத கண் ணென்ன கண்ணோ.

யாழ்.காரையம்பதி,சற்பிரசங்க சைவ மணி செல்வசண்முகரெத்தினம், வவுனியா



## ஈழத்து சபரிமலையானின் குடநீராட்டு காண வாரீர்

கலியுக காவலனாக அவதரித்து உலகமெல்லாம் அருள்பாலித்துக்கொண்டிருக்கும் கருணை மூர்த்தியான ஸ்ரீ ஐயப்ப வழிபாடு செய்யும் அடியார்கள் தொகை வளர்ந்து கொண்டே போகின்றது. சபரிமலையில் பதினெட்டுச் சித்திகளையும் வழங்கிக் கொண்டிருக்கும் தர்மசாஸ்தாவான ஸ்ரீஐயப்ப சுவாமியின் திருவருளை வேண்டி ஆண்டுதோறும் மாலை அணிந்து யாத்திரை செய்து ஐயப்ப சுவாமியை பிரார்த்தனை செய்து வருகிறார்கள். இத்தகு மகத்துவமான சிறப்புக்களை ஆண்டுதோறும் கோண்டாவில் ஈழத்துச் சபரிமலை ஸ்ரீசபரீச ஐயப்ப சுவாமி தேவஸ்தானத்தில் காணலாம். சரித்திர சிறப்புக்களோடு வீற்றிருக்கும் சபரிமலையானுக்கு ஓம் சாமியே சரணம் ஐயப்பா என்ற சரண கோஷம் ஒலிக்க குடநீராட்டு விழா இன்று (09.11.2014) நடைபெறுகின்றது. எல்லோரும் வாரீர் ஈழத்து சபரி மலையில் கும்பாபிஷேகம் கண்டு வாழ்வாங்கு வாழ்வோமாக.

சைவசிரோன்மணி, வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை.எம்.பி அருளானந்தன் (ஜே.பி), பணிப்பாளர், சைவத் தமிழ் பண்பாட்டுக் கழகம், சைவநெறித்துறைத் தலைவர், உலக சைவத்திருச்சபை, யாழ். மாவட்டம்.



## ஆசிச் செய்தி

ஓம் சாமியே சரணம் ஐயப்பா ஓம்ஸ்ரீ வெள்ளிப்பள்ளத்து வீரகத்திப்பிள்ளையாரே சரணம் ஐயப்பா ஓம்ஸ்ரீ பூர்ணா புஸ்கலா சமேத துத்தியில் ஐயனாரே சரணம் ஐயப்பா

ஆசிச் செய்தி தக்ஷிணாமூர்த்தி
ஆனந்த சாகரம் தண்மதி தரித்தார்
அங்கத்தே நீறணிந்து உள்ளம் கவர்வார்
தானே உலகமாயை ஆக்கிடவல்ல
தக்ஷிணா மூர்த்தியின் தாள் பணிவோமே
ஐயப்பன்
கோண்டாவிற் பதியுறையும் சபரிமலை தர்மசாஸ்தா
திருக்குட முழுக்காடும் ஈழத்துச் சபரிமலை தர்மசாஸ்தா
சரணம் சரணம், சரணம் சரணம், சரணம் ஐயப்பா!
சபரிமலையில்

பொற்கோயில் கொண்டெழுந்தருளி அருள்பாலிக்கும் சபரிமலை தர்மசாஸ்தாவிற்கு கோண்டாவில் பதியில் பொற்கோயில் அமைத்துக் கும்பாபிஷேகம் செய்வது அறிந்து அகமகிழ்வடைகின்றேன். சிறுதுளி பெருவெள்ளம் என பெருநிதி, இருநிதி சேகரிக்கும் வல்லமை குருஸ்வாமி கி.ஹரிஹரசுதகுருஸ்வாமி அவர்களுக்கு ஐயப்பன் கொடுத்த கொடை "குருவின் குருவே சரணம் ஐயப்பா" என்ற சரண கோசம் குருவழிபாட்டின் மகத்துவத்தை உணர்த்துகின்றது. கல்லாலின் கீழ் அமர்ந்து அறமுரைத்தவன் தட்சிணாமூர்த்தி. சின்முத்திரை காட்டி அறமுரைத்தவன் ஐயப்பன். குருவழிபாடு இன்றைய இளைய சந்ததியினர்க்கு மிகமிக அவசியமாகின்றது. எனவே ஐயப்ப வழிபாடு அனைத்து இளஞ்சந்ததியினரும் நல்வாழ்வு வாழ வழிகாட்டும் என்பதனை உணர்ந்து இக்கைங்கரியம் சிறப்புற அமைய குருவடி பணிந்து நல்லாசிகள் கிடைக்கப் பிரார்த்திப்பதும் ஐயன் திருவருளேயாம்.

வேரவில் அருள்மிகு பூர்ணா,புஸ்கலா சமேத துத்தியிப் ஐயனார் ஆலய தர்மகர்த்தா ,ஈழவூர் சைவப்புலவர் சைவ சித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ.குமாரசாமி சமுகலிங்கம் ஐயா (M.A., J.P.)

## கும்பாபிஷேக வர்ணனை

சபரிமலை சபரீச ஐயப்ப சுவாமியின் ஆலயத்தில் இன்று நடை பெறும் மஹாகும்பா பிஷேக நிகழ்வுகள் வானொலி, தொலைக்காட்சி நேர்முக வர்ணனையாளர் வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் தலைமையில் வர்ணனைக் குழுவினரால் வானொலி, தொலைக் காட்சியினூடாக நேர்முக வர்ணனை செய்யப்படவுள்ளது.

## மஹா கும்பாபிஷேக பெருவிழா சிறக்க வாழ்த்துவோர்


ஓம் சாமியே சரணம் ஐயப்பா
சிறி நதியா நகைமாளிகை
இல. 01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
நடராசா - பரமேஸ்வரி மணிமண்டபம்,
இல. 56, நல்லூர்.
சிறி நதியா கலர்லாப்
108A, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

ஓம் சாமியே சரணம் ஐயப்பா
சாரங்கா நகைமாடம்
இல. 157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(வெளிநாட்டு நாணய மற்றும் சேவையை வழங்குபவர்கள்)

ஓம் சாமியே சரணம் ஐயப்பா
M.K.T.TRADERS
அபிஷேகப் பொருட்கள்
தர்ப்பை தொடர்பான சகல பொருட்களும் விற்பனையாளர்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
புதுவீதி, ஆறுகால்மடம்.
தொ.பே.இ. 077 3357857.

ஓம் சாமியே சரணம் ஐயப்பா
SWISSO
Building Design
Vaastu Astrologer
Building Design & Architectural
44/1, Srampiyady, Yarl Road, Jaffna.
T.P-021 2228524, 0777917579.
E.mail: tkirushnamurthy-gmail.com
swisso-sltnet.lk
web:-www.swisso.weebly.com

ஓம் சாமியே சரணம் ஐயப்பா
ஐயப்பா நகைமாடம்
இல. 205/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஓம் சாமியே சரணம் ஐயப்பா
அழகு சாதன அலங்கார கலையகம்
யாழ்ப்பாணம்.
ஆடவர், மகளிர் இருபாலாரும் அணியத்தக்க அணிகலன்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் அனைத்தையும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய கலையகம்

ஓம் சாமியே சரணம் ஐயப்பா
மேனகா தச்சுத் தொழிற்சாலை
மில் ஒழுங்கை, மல்லாகம்.

ஓம் சாமியே சரணம் ஐயப்பா
ராஜன் ரயர்கடை
இருபாலை றோட், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
(ஈழத்து சபரி மலைக்கு அருகாமையில் அமைந்துள்ள ரயர்கடை)

ஓம் சாமியே சரணம் ஐயப்பா
நியூ ராஜ்குமார் ரேடர்ஸ்
NEW RAJKUMAR TRADERS
சகல விதமான கட்டடப் பொருட்களும் இங்கே பெற்றுக் கொள்ளலாம்.
இல. 45, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
T.P:0773086759
021 2212150




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவன் மனது ஒன்பதடா
அதில் ஒளிந்து கிடப்பது எண்பதடா
- கவிஞர் கண்ணதாசன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இடிபோல துன்பம் வந்தால் தமிழர் வாழ்வு என்னாவது?

மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் மற்றும் வடக்கு மாகாண கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் டெனிஸ்வரன் ஆகியோர் அண்மையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

பாதுகாப்பு செயலாளருடனான சந்திப்புக் குறித்து வடக்கு மாகாண அமைச்சர் டெனிஸ்வரன் மிகவும் புகழாரமான கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

இந்தச் செய்திகளை வாசித்துக்கொண்டிருந்த போது வானொலியில் பின்வரும் சினிமாப் பாடல் ஒலி பரப்பாகிக் கொண்டிருந்தது.

1974 களில் வெளிவந்த தங்கப்பதக்கம் என்ற திரைப்படத்தில் இடம்பெற்ற இந்தப்பாடல் எங்கள் தமிழினத்திற்கு எத்துணை பொருத்தம்.

ஆகையால் மேற்குறித்த செய்தியோடு இந்தப்பாடலையும் சேர்த்துக்கொள்வோம். பாடலின் பொருள் மன்னார் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப்பிற்கு நிச்சயம் தெரியும் என்று நம்புகின்றோம்.

இதோ அந்தப் பாடல்.

சோதனைமேல் சோதனை போதுமடா சாமி
வேதனைதான் வாழ்க்கையென்றால்
தாங்காது பூமி
(சோதனைமேல்)

சொந்தம் ஒரு கைவிலங்கு நீ போட்டது - அதில்
பந்தம் ஒரு கால் விலங்கு நான் போட்டது
(சோதனைமேல்)

ஆதாரம் இல்லையம்மா ஆறுதல் சொல்ல - நான்
அவதாரமில்லையம்மா தத்துவம் சொல்ல
பரிகாரம் தேட நான் எவ்விடம் செல்ல -
எனக்கு
அதிகாரமில்லையம்மா வானகம் செல்ல
ஒரு நாளும் நான் இதுபோல் அழுதவனல்ல -
அந்தத்
திருநாளை (பரிசுத்த) மகன் கொடுத்தான்
யாரிடம் சொல்ல!
(சோதனைமேல்)

மாமா, காஞ்சுபோன பூமியெல்லாம்
வத்தாத நதியைப் பார்த்து ஆறுதல் அடையும்
அந்த நதியே காஞ்சி போயிட்டா....
துன்பப் படுறவங்க எல்லாம்
அவங்க கவலையை தெய்வத்துக்கிட்ட
முறையிடுவாங்க, ஆனா, தெய்வமே
கலங்கிநின்னா - அந்த தெய்வத்துக்கு
யாராலே ஆறுதல் சொல்ல முடியும்?

தானாடவில்லையம்மா சதையாடுது - அது
தந்தை என்றும் பிள்ளை என்றும் விளையாடுது
பூவாக வைத்திருந்தேன் மனமென்பது -அதில
பூநாகம் புகுந்து கொண்டு உறவென்றது
அடிதாங்கும் உள்ளமிது இடி தாங்குமா?
இடி போல (அரசியலில்) பிள்ளை வந்தால்
மடி தாங்குமா?

சோதனைமேல் சோதனை போதுமடா சாமி
வேதனைதான் வாழ்க்கையென்றால்
தாங்காது பூமி

.....................

**குறிப்பு : இப்பாடலில் பரிசுத்த, அரசியலில்** என்ற இரு சொற்பதங்களும் எங்கள் இனத்தின் தேவை கருதி இவ்விடத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

# கிழக்கு பல்கலைக்கழகத்தின் தாயான அமரர் பேராசிரியர் மனோ சபாரத்தினம்



அமரரான கிழக்குப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் விஞ்ஞான பீடாதிபதியும் விலங்கியல் துறைப் பேராசிரியரும் சமூக சேவகியுமான பேராசிரியர் மனோ சபாரத்தினம் அவர்கள் 80களில் மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரியின் முதல் பேராசிரியராகவும் பீடாதிபதியாகவும் பொறுப்பேற்ற பேராசிரியர் மனோ சபாரத்தினத்தின் அர்ப்பணிப்பான பணிகளை வார்த்தைகளுக்குள் அடக்கிவிடமுடியாது.

**அமரரான பேராசிரியர் மனோ சபாரத்தினம் அவர்களின் 31ஆவது நாள் ஆராதனை கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லத்தில் இன்று 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இடம்பெறவுள்ளது.**

அன்றைய காலச்சூழலில் எதிர்கொண்ட பல்வேறு பிரச்சினைகளையும் துணிச்சலுடன் எதிர்கொண்டு பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்காக அவர் பெரிதும் பாடுபட்டார்.

மாணவர் நலனிலும் சமூக நலனிலும் அவர் கொண்ட அக்கறை உயர்வானது. நெருக்கடியான காலகட்டங்களில் தாயாக மக்களோடு மக்களாக நின்று அவராற்றிய பணிகள் இன்று வரை பெருமதிப்புடன் நினைவுகூரப்படுகின்றன.

இந்தவகையில் 90 களில் பிடித்துச் செல்லப்பட்ட பல்கலைக்கழகத்தில் அகதிகளான 47 மாணவர்களை , ஊழியர்களை காப்பதற்காக மதிலேறி குதித்து தன்னுடைய மும்மொழிப் புலமையுடன் அவர்களுடன் வாதாடி அந்தப் பிள்ளைகளை மீட்ட நிகழ்வை பிரதேச மக்கள் என்றென்றும் மனதில் இருத்திப் போற்றுகின்றார்கள்.

அவரோடு இணைந்து பல்கலைக் கழகத்தில் 40 ஆயிரத்திற்கும் அதிகமான அகதிகளாக இருந்த மக்களுக்கு சேவை செய்யக் கிடைத்த சந்தர்ப்பத்தை இவ்வேளை நினைவுகூராது இருக்கமுடியாது.

பதவிகளுக்காக அலைகின்றவர்கள் மத்தியில் தனக்கான உயர்வுகள் அநீதியான முறையில் மறுக்கப்பட்ட போதிலும்கூட தொடர்ந்தும் கிழக்கு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பல ஆண்டுகள் விஞ்ஞான பீடாதிபதியாக கடமையாற்றினார்.

ஓய்வுபெற்ற பின்னரும்கூட கிழக்குப் பிரதேசத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான நிகழ்ச்சித் திட்டங்களில் அர்ப்பணிப்போடு செயற்பட்டார். இன்று கரையோர பிரதேசம் எங்கும் நிமிர்ந்து நிற்கின்ற கண்ணாமரங்களும் சவுக்கு மரங்களும் அவர் அழியா நினைவுகளை பேசிக்கொண்டிருக்கின்றன.

**கலாநிதி த.ஜெயசிங்கம்**

# இலவச கண் சிகிச்சை முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண லயன்ஸ் கழகமும் முல்லைத்தீவு லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்தும் இலவச கண்சிகிச்சை முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை மூங்கிலாறு பிரதேச வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெறும்.


இதன்போது இலவசமாக கண் பரிசோதனை செய்யப்பட்டு மூக்குக் கண்ணாடி வழங்கப்படும். எனவே கண் பார்வை குறைவுடையோர் தவறாது கலந்து கொண்டு பயன்பெறுமாறு யாழ்ப்பாண லயன்ஸ் கழகத்தினர் கேட்டுள்ளனர். (2)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2014

''எவரொருவர் ஒரு மரத்தை நாட்டுகின்றாரோ அவர் நம்பிக்கையை நாட்டுபவர் ஆவார்''

*-லியூசி லர்கோம் (அமெரிக்க கலைஞர்)*

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை



**நல்லூரான் திருவடி**

நல்லூரான் திருவடியை
நான்நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி - கிளியே!
இரவுபகல் காணேனடி
ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான்மறந்து போவேனோடி- கிளியே!
நல்லூரான் தஞ்சமெடி

# தமிழ் மக்கள் தமது உரிமைக்காக போராடியவர்களை மறக்கக்கூடாது

## விநாயகமூர்த்தி எம்.பி.தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் உரிமைக்காகவும் நலன்களுக்காகவும் இறுதி மூச்சுவரை அரசியல் ரீதியாக போராடி அமரத்துவம் எய்திய வீரத் தமிழனுக்கு நன்றி செலுத்த தமிழ்ச் சமூகம் கடமைப்பட்டுள்ளது என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

மாமேதை சட்டத்தரணி ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 113ஆவது ஜனனதின நிகழ்வு நேற்றையதினம் குருநகரில் அமைந்துள்ள அவரது உருவச்சிலைக்கு அருகாமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்களுக்கெனத் தனியான ஓர் அரசியல் கட்சி இல்லாத நேரத்தில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் 1944 ஆம் ஆண்டு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியை ஸ்தாபித்தார்.

சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம் முதலிய தலைவர்களின் பின் இருந்த வெற்றிடத்தை நிரப்பியவர் அதாவது தமிழர்களுக்கு ஓர் தன்னிகரில்லாத் தலைவனாகத் திகழ்ந்தவர் அமரர் ஜீ.ஜீ.அவர்கள் என எஸ்.ஜே.வி செல்வநாயத்தின் மருமகனான பேராசிரியர் வில்சன் எழுதிய நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அமரர் ஜீ.ஜீ அவர்கள் 1939 இல் அரச சபையில் சமநிலைப் பிரதிநிதித்துவம் பற்றிய தமது மரதன் உரையில் கூறியதாவது, தமிழ்ச் சமூகத்தின் நிலைப்பாடு என்ன? இந்நாட்டின் பூர்வீகக் குடிகளாக நாம் இங்கு வாழ்ந்து வந்திருக்கின்றோம். தமிழ்ச் சமூகத்தின் ஒரு கிளையினர் சிங்களவர்களை விட நீண்டகாலம் இங்கு வாழ்ந்து இருக்கின்றனர். இதுவே எமது தாயகம். அரசியல் ரீதியாகவும் வேறு வகையிலும் நிரந்தர உரித்துக்களை கோருவதற்கு சிங்கள மக்களுக்கு உள்ள அதே உரிமை எமக்கும் உண்டு.

நாம் வேண்டப்பாடாத அந்நியர்களாக நடத்தப்படுவதை ஏற்றுகொள்ள முடியாது. நாம் மத்திய ஐரோப்பாவின் நாசிச நாடுகளில் யூதர்களைப் போன்று கெட்டோக்கலில் பிரித்து நடத்தப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அமரர் ஜீ.ஜீ. அவர்களின் கருத்து ஒரு பெரும்பான் மையினம் சிறுபான்மையினம் மீது ஆதிக்கம் செலுத்தக்கூடாது என்பதாகும். சேர் வில்லியம் மனிங் அரசியல் சீர்திருத்தத்திற்கு அமையவே ஜீ.ஜீ. பொன்னம்பலம் சம பிரதிநிதித்துவக் கோட்பாட்டை முன்வைத்தார். சோல்பரி கமிஷன் சம பிரதிநிதித்தவக் கோட்பாட்டை ஏற்காவிடினும் ஜீ.ஜீ.யின் வாதத்தால் பிரிவு 29 போன்ற சில பாதுகாப்புக்களை சிறுபான்மையினரின் நன்மை கருதி அரசியல் சாசனத்தில் உட்புகுத்த வேண்டுமென சிபாரிசு செய்தது எனவும் தெரிவித்தார்.

மேலும் தமிழ் மக்களின் உரிமைக்காகவும் நலன்களுக்காகவும் தனது இறுதி மூச்சுவரை அரசியல் ரீதியாகப் போராடி 1977 ஆம் ஆண்டு மாசி மாதம் 9 ஆம் நாள் அமரத்துவம் எய்திய வீரத்தமிழனுக்கு நன்றி செலுத்த தமிழ்ச் சமூகம் உண்மையிலேயே கடமைப்பட்டுள்ளது என தெரிவித்தார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயதாகி விட்டதா மிஸ்பாவிற்கு...





தனது சுய நலத்துக்காக விளையாடாமல் அணியின் நன்மை கருதி தாமாகவே முன்வந்து அணியை விட்டு வெளியேறிய ஓர் அற்புதமான வீரர்...

வயது என்பது ஓர் இலக்கமாகும். ஒருவன் சாதிப்பதற்கும் அவனது வயதிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. ஒரு சாதனையாளர் தனது சாதனையை பதிவு செய்வதற்கு அவனது விடாமுயற்சியே காரணமாகின்றது. சாதிப்பதற்கு வயது ஓர் தடையல்ல என்பதை நிரூபித்து காட்டியுள்ளார் பாகிஸ்தான் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டி அணித்தலைவர் மிஸ்பா உல்ஹக்.

**ஒருவர் சாதிப்பதற்கு வயது தடையல்ல என்பதனை நிரூபித்துக் காட்டியவர் மிஸ்பா**

அவுஸ்திரேலிய அணிக்கெதிராக இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் போதே மேற்படி இச்சாதனையை மிஸ்பா நிலைநாட்டியுள்ளார்.

கடந்த வாரம் அவுஸ்திரேலியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையே ஆன இரு டெஸ்ட் போட்டிகளிலும் பாகிஸ்தான் அணி அபார வெற்றி பெற்று 20 வருட கால தனது கனவை நிறைவேற்றி வரலாற்று சாதனையை பதிவு செய்தது.

இதற்கு முன்னர் நடந்த ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தான் 3-0 என்ற ரீதியில் அவுஸ்திரேலியாவிடம் தொடரை இழந்திருந்தது. முதல் இரு போட்டிகளிலும் பாகிஸ்தான் தோல்வி அடைந்து தொடரை இழந்திருந்த நிலையில் பாகிஸ்தான் அணித்தலைவர் மிஸ்பா உல்ஹக் தாமாகவே முன்வந்து தமது ஆட்டத்திறன் அணிக்கு போதுமான ஒத்துழைப்பை தரவில்லை என தெரிவித்து மூன்றாவது ஒரு நாள் போர்ட்டியில் தாமாகவே விலகிக் கொண்டார்.தனது அணித்தலைவர் பதவியையும் சயிட் அப்ரிடிக்கும் விட்டுக்கொடுத்தார். இவ்வாறு தனக்கென சுயநலமாக விளையாடாது அணியின் நன்மை கருதி விளையாடும் ஓர் சிறந்த உத்தமமான கிரிக்கெட் வீரர் மிஸ்பா உல்ஹக் ஆவார். ஒரு நாள் போட்டியில் சிறப்பாக செயற்படாத மிஸ்பா டெஸ்ட் அணியினை சிறப்பாக வழிநடத்தியதோடு சாதனையையும் நிலை நாட்டினார்.

40 வயதான மிஸ்பா டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் வேகமான அரைச்சதம் மற்றும் சதம் ஆகிய இரண்டையும் தன் வசப்படுத்தினார்.இவர் 21 பந்தில் 4 நான்கு ஓட்டமும் 4 ஆறு ஓட்டமும் அடித்து அரைச்சதத்தினைப் பெற்றார். இதன் மூலம் 24 பந்தில் அதிவேகமாக அரைச்சதம் அடித்து சாதனை படைத்த தென்னாபிரிக்க வீரர் கலிஸின் சாதனையை முறியடித்தார் மிஸ்பா. இந்நிலையில் 56 பந்தில் சதம் பெற்ற மிஸ்பா மேற்கிந்திய வீரர் விவியன் ரிச்சர்ட் ஸின்க் சாதனையை சமன் செய்தார். அத்துடன் 23 நிமிடங்களில் அரைச்சதத்தை கடந்ததுடன் 74நிமிடங்களில் சதத்தையும் கடந்தார். அண்மைக் காலத்தில் வயது கூடிய ஒருவர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அடித்த சதம் இதுவென குறிப்பிடலாம். இவ்வருடம் மேற்கிந்திய தீவுகளின் சந்திரப்போல் 40 வயது பூர்த்தியாகிய நிலையில் சதம் அடித்துள்ளார். இதற்கு முன்னர் க்ரஹாம்பூச் 1991 ஆம் ஆண்டு 40 வயது பூர்த்தியான நிலையில் சதம் அடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மிஸ்பா வின் இவ்வாறான அதிரடியான ஆட்டம் மூலம் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி பாகிஸ்தான் அபார வெற்றி பெற்றதோடு தனது 20 வருட கனவையும் நிலை நாட்டியது.

மிஸ்பாவின் கள நிலைமைக்கேற்ப சிறந்த துடுப்பாட்டம் தான் அவர் ஒரு சிறந்த வீரர் என்பதோடு தன்னால் ஒரு அணியை சிறந்த முறையில் வழி நடத்த முடியும் என்பதனையும் நிரூபித்து காட்டியுள்ளார்.

க.மதீசன்

# ஆரம்பமாகியது மைலோ கிண்ண காற்பந்து போட்டி

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில் மைலோ கிண்ண காற்பந்தாட்டப் போட்டிகள் இவ் வருடமும் இடம்பெறவுள்ளன.

இவ் வருடம் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள பருவகாலம் 2இற்கான மைலோ கிண்ண காற்பந்தாட்டப் போட்டிகளின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

4 லீக் அடிப்படையில் போட்டிகள் இடம்பெற்று ஒவ்வொரு லீக்கிலிருந்து 2 அணிகள் வீதம் தெரிவு செய்யப்பட்டு மாவட்ட மட்டத்தில் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இவற்றில் தீவக லீக்கிற்கான போட்டிகள் நேற்று நாராந்தனை அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

போட்டிகள் இன்றும் நடைபெறவுள்ளன.யாழ்ப்பாண லீக்கிற்கான போட்டிகள் 11 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்.

இப் போட்டிகள் 11, 12 ஆம் திகதிகளில் இடம்பெறும். வலிகாமம் லீக்கிற்கான போட்டிகள் 15ஆம் திகதி காலை 8.30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்.

இப் போட்டிகள் 15, 16ஆம் திகதிகளில் இடம்பெறும். [illegible] லீக்கிற்கான போட்டிகள் 18ஆம் திகதி காலை 8.30 மணிக்கு இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்.

இப் போட்டிகள் 18,19ஆம் திகதிகளில் இடம்பெறும். யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி எம்.ஆர்.மோகன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் நெஸ்லே லங்கா நிறுவனத்தின் சஞ்சீவ விக்ரமசிங்க, வடக்கு மாகாண சபையின் விளையாட்டுத்துறை இணைப்பாளரும் மாகாணசபை உறுப்பினருமான இ.ஆர்னல்ட், யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியாட்சகர் மொகான் டயஸ், உதைபந்தாட்ட லீக்குகளின் தலைவர்கள், போட்டிகளில்பங்குகொள்ளும் அணிகளின் தலைவர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் பருவகாலம் 2இற்கான மைலோ கிண்ண காற்பந்தாட்டப் போட்டியின் வெற்றிக் கிண்ணம் அறிமுகம் செய்து வைககப்பட்டதோடு நெஸ்லே லங்கா நிறுவனத்தின் சஞ்சீவ விக்ரமசிங்கவினால் வடக்கு மாகாண சபையின் விளையாட் டுத்துறை இணைப்பாளரும் மாகா ணசபை உறுப்பினருமான இ.ஆர் னல்ட் மற்றும் யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி எம்.ஆர்.மோகன் ஆகியோரிடம் வெற்றிக்கிண்ணம்உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.(க-23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்கள் உயிர் காக்க உடனே தீர்மானம் நிறைவேற்றுக

## மு.க.ஸ்டாலின் கோரிக்கை

(சென்னை)

தமிழக சட்டப் பேரவையினைக் கூட்டி, தமிழக மீனவர்களின் உயிர்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற தீர்மானத்தை உடனடியாக நிறைவேற்றிட வேண்டும் என திமுக பொருளாளர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழகத்தில் அன்றாடம் அடுக்கடுக்கான பிரச்சினைகள் எழுகின்றன. மாநிலத்திற்கு புதிய முதலமைச்சர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். பொதுவாக ஆண்டு தோறும் ஒக்டோபர் திங்களில் கூட்டப்படும் குளிர்காலத் தொடரும இந்த ஆண்டு நடைபெறவில்லை.

தமிழக மீனவர்கள் ஐந்து பேருக்கு பொய் காரணம் கூறி இலங்கை அரசு தூக்குத் தண்டனை விதித்துள்ளது, அதனைக் கண்டித்து தமிழக அரசு சார்பிலும், அனைத்து கட்சிகள் சார்பிலும் மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசும் அந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்வதாக அறிவித்துள்ளது.

இந்தத் தண்டனையைக் கண்டித்து தமிழகத்திலே உள்ள 13 மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள்.

எனவே இந்த நிலையில் தமிழக சட்டப் பேரவையினை கூட்டி, தமிழக மீனவர்களின உயிர்களை பாதுகாக்க வேண்டுமென்ற தீர்மானத்தினை உடனடியாக நிறைவேற்றிட வேண்டும்.

இதுதவிர தமிழக மக்களின் அன்றாடப் பிரச்சினைகளான பால் விலை உயர்வு, மின் கட்டண உயர்வு போன்றவைகளைப்பற்றியும் பேரவையில் விவாதிக்க வேண்டியியுள்ளது.

எனவே, தமிழக சட்டப் பேரவையினை கூட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில், சட்டமன்றக் கட்சித் தலைவர் என்ற முறையில் தமிழக முதலமைச்சரை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன் என மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார். (செ-11)

# அவமதிக்கி...

த்தை ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் சையித் அல் ஹுசைனுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இக்கடிதத்தில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் சையித் அல் ஹுசைனின் இத்தகைய செயற்பாடுகள் ஐ.நாவுடனான ஆக்கபூர்வமான பேச்சுக்களை பாதிக்கும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த விசாரணைகள் நேர்த்தியற்றது என்றும், பாரபட்சமானது என்றும் இலங்கை அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழு நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# இன்றைய போட்டி

இலங்கை கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகள் இடையேயான 5 ஒருநாள் போட்டி தொடரில் முதல் 2 ஆட்டத்தில் இந்தியா வெற்றி பெற்று 2-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இந்தியா-இலங்கை அணிகள் மோதும் 3-வது ஒருநாள் போட்டி ஐதராபாத்தில் இன்று நடைபெறவுள்ளது.

இதில் இந்தியா 'ஹட்ரிக்' வெற்றி பெற்று தொடரை வெல்லுமா? என்று ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

தொடரை இழக்காமல் இருக்க இலங்கை அணி இந்தியாவுக்கு பதிலடி கொடுக்கும் ஆர்வத்துடன் இருக்கிறது. இன்றைய ஆட்டம் பிற்பகல் 1.30 மணிக்கு தொடங்குகிறது.

# பொது வேட்...

த்து எதிர்க்கட்சிகளின் காத்திரத்தை பெற்றிருக்க வேண்டும். அத்துடன் எதிர்க்கட்சி வாக்காளர்கள் மத்தியிலும் மதிப்பை கொண்டிருக்க வேண்டும்.

அதேநேரம், குறித்த பொதுவேட்பாளர் ஏற்கெனவே பெருமளவு வாக்கு வங்கியை கொண்டிருக்க வேண்டும்.

இந்தநிலையில் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் 40வீத வாக்கு வங்கியை கொண்டுள்ள ஐக்கிய தேசியக்கட்சியே பொது வேட்பாளர் நிலைக்கு பொருத்தமான வேட்பாளரை கொண்டிருக்கிறது என்பது யதார்த்தம்.

எனவே பொதுவேட்பாளருக்கு, ஜே.வி.பியினர், ஜாதிக ஹெல உறுமயவினர், சந்திரிகா குமாரதுங்க மற்றும் மாதுலவேவ சோபித ஆகியோரின் முழுமை ஆதரவு கிடைக்க வேண்டும் என்றும் தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார். (செ-11)

# வத்திக்கான்...

வத்திக்கான் புலனாய்வுப் பிரிவினர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இந்த மாத இறுதியில் வத்திக்கான் புலனாய்வுப் பிரிவினர் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

பாப்பரசர் பிரான்ஸிஸ் ஆண்டகை இலங்கையில் விஜயம் செய்யவுள்ள மருதமடு தேவாலயம் மற்றும் கொழும்பின் முக்கிய பகுதிகள் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் கண்காணிக்கவுள்ளனர்..

உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவா? பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் காணப்படுகின்றனவா? என்பது குறித்து ஆராயப்படவுள்ளது.

இதேவேளை, அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த வத்திக்கான் தேவாலய பிரதிநிதிகள் இலங்கை ஓர் அமைதியான நாடு என தெரிவித்துள்ளனர். (செ-11)

# ஐஸ்கிறீம்...

தக சங்கத் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் - யாழ். மாவட்டத்தில் சிறு கைத்தொழில முயற்சியாளர்களினால் நடத்தப்படுகின்ற ஐஸ்கிறீம், யூஸ் மற்றும் உப உணவு உற்பத்தி நிலையங்களில் 59 நிலையங்களுக்கு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் தற்காலிக தடை விதிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து வர்த்தகர்கள் வணிகர் கழகத்திடம் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து கடந்த 27ஆம் திகதி மேற்படி வர்த்தகர்களை அழைத்துப் பேசியிருந்தோம். தொடர்ந்து கடந்த 30 ஆம் திகதி மாகாண சுகாதார அமைச்சர் மற்றும் பணிப்பாளர் ஆகியோருடனும் கலந்துரையாடியிருந்தோம்.

இதனைத் தொடர்ந்து அக் கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. இதற்கமைவாக சுகாதார சேவைகள் திணைக்களம் பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு இதன் முதற்கட்டமாக 29 ஐஸ்கிறீம் மற்றும் யூஸ் உற்பத்தி விற்பனையாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது.

இதேபோன்று, தடை விதிக்கப்பட்ட ஏனைய நிலையங்களும் அடிப்படைச் சுகாதார வசதிகளை எதிர்வரும் இரு வாரத்திற்குள் ஏற்படுத்திக் கொண்டால் அவற்றையும் மீள இயங்க மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் அறிவித்துள்ளார் என யாழ் வர்த்தக சங்கத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உற்பத்தி மற்றும் விற்பனை செய்யப்படுகின்ற உணவுகளைப் பரிசோதிப்பதற்கான ஆய்வு கூடங்களை அமைக்க வேண்டுமென யாழ்ப்பாண வர்த்தக சங்கம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை தமது சங்கத்துக்குட்பட்ட 29 பேருக்கு அனுமதி வழங்கப்படவில்லை எனவும் குறிப்பிட்ட சிலருக்கே வழங்கப்பட்டுள்ளதாகவும் உபஉணவு உற்பத்தியாளர் சங்கத் தலைவர் எம்.உதயசிறி வலம்புரிக்குத் தெரிவித்தார். (செ-4)

# 3ஆவது தட...

புறந்தள்ளி ஒதுக்கி வைத்து விட்டு சாஸ்திரம் சொல்லுவதற்கு செல்வதே பொருத்தம் என்றும் அக்கட்சி கிண்டல் செய்தது.

பாராளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட விவாதத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே அக்கட்சியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

அண்மைய தினங்களாக நாடு முழுவதும இந்நாட்டின் அரசியல் கள நிலைவரம் தொடர்பில் அதிகளவாக பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றது. தற்போது பதவியிலுள்ள ஜனாதிபதியானவர் மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான இயலுமை இருக்கின்றதா என்பதே அந்த பேச்சுக்களாகும்.

தற்போது பதவியிலிருக்கும் ஜனாதிபதியானவர் மூன்றாவது தடவையாகவும் போட்டியிட முடியாது என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் மாறாததும் நிலையானதுமான நிலைப்பாடாகும். இதனைத் தான் நாம் நேற்றும் கூறினோம்,

இன்றும் கூறுகிறோம். மாறாக வேறு காரணங்களையும் கூறமாட்டோம். அவ்வாறு கூறுவதற்கு ஏற்ற காரணமும் கிடையாது என்றார். (செ-11)

# சீன நீர்மூழ்கி...

செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இந்திய மற்றும் அமெரிக்க அதிகாரிகள் விரிவாக கலந்துரையாடியுள்ளதாக நம்பகமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. வாசிங்டனில் இடம்பெற்ற பாதுகாப்பு கொள்கைக் குழுக் கூட்டத்திலும் இது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, இவ்விரு நாட்டுக் கடற்படைகளும் கூட்டாக மேற்கொள்ளும் மலபார் போர்ப்பயிற்சியில் அணுசக்தி நீர்மூழ்கிகள் மற்றும் விமானம் தாங்கிப் போர்க்கப்பல்களையும் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இந்தப் போர்ப்பயிற்சியில்

# தமிழ்ப் பெண்...

பணியில் ஈடுபடுவதற்காக வந்த இந்திய அமைதிப் படையினர், ஈழத் தமிழ் பெண்களை பாலியல் வன்முறைக்கு ஆளாக்கியதாக குற்றஞ்சாட்டியிருந்தார்.

1987-ம் ஆண்டு முதல் 1990-ம் ஆண்டு வரை இலங்கையில் இருந்த இந்திய அமைதிப் படையினர், அந்தக் காலகட்டங்களில், ஏராளமான ஈழத் தமிழ்ப் பெண்களை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியதற்கு ஆதாரம் உள்ளதாகவும் அமைச்சர் கருணா தெரிவித்திருந்தார்

இந்திய வெளியுறவு துறை அமைச்சகத்தின் செய்தியாளர் சந்திப்பின்போது, இலங்கை அமைச்சரின் இந்த குற்றச்சாட்டு தொடர்பில் இந்தியாவின் நடவடிக்கை என்னவென்று செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் சையத் அக்பருத்தின், இலங்கை அரசாங்கம இது போன்ற பிரச்சினைகளை எழுப்பவில்லை என்று தெரிவித்தார்.

எங்களைப் பொறுத்தவரை இவை சம்மந்தமில்லாதவர்களின் குரல்கள். இது போன்ற சம்மந்தமில்லாதவர்களின் குரல்களுக்கு நாங்கள் பதிலளிக்க மாட்டோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் இந்த பிரச்சினையை எழுப்பினால் மட்டுமே இந்திய அரசாங்கம் அதற்குப் பதிலளிக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (செ-11)

# ஜனாதிபதி...

ருக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

பொது வேட்பாளர் தொடர்பில் இன்னும் இறுதி தீர்மானம் எட்டவில்லை என்று ஜனாதிபதியிடம் தெரிவித்த கரு ஜயசூரிய, இன்னும பல நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என்றும் இதன்போது தெரிவித்துள்ளார். (செ-11)

மேலும் பல நாடுகளையும் இணைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை துறைமுகத்தில் சீன நீர்மூழ்கி தரித்து நிற்பதற்கு அனுமதி வழங்கியமைக்கு இந்தியா இரண்டு முறை இலங்கையிடம் கடும் அதிருப்தி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# கொஸ்லந்தை...

பெரேரா.

**இரு தினங்களில் தொடர்ந்து தேடுவதா என்று முடிவு செய்வோம்.**

அவர்களுடைய கருத்தை நாங்கள் கவனத்திற் கொண்டிருக்கின்றோம். மீட்புப் பணிகள் இன்னும் கடினமானதாகவே இருக்கின்றது. கனரக வாகனங்களை முழு அளவில் பயன்படுத்த முடியவில்லை. இடிபாடுகளும் காணாமல் போயிருப்பவர்களும் புதையுண்டிருக்கலாம் என்று நாங்கள் கருதும் இடத்தையும் நாங்கள் இன்னும் சென்றடையவில்லை. இன்னும் இரண்டொரு தினங்கள் தேடுதல் நடத்திய பின்னர் தொடர்ந்து தேடுதல் நடத்துவதா இல்லையா என்பதை முடிவு செய்வோம் என்றார் மேஜர் ஜெனரல் மனோ பெரேரா.

**மக்கள் சடலங்களை தேடத் தயாராகவே இருக்கிறார்கள்.**

அதேவேளை, பொதுமக்கள் தேடுதல் நடவடிக்கைகளில் இராணுவத்திற்கு உதவி செய்வதற்கும், அவர்களுடன் ஒத்துழைப்பதற்கும் தயாராக இருக்கின்ற போதிலும் இராணுவம் சரியான முறையில் பொதுமக்களின் உதவியை நாடவில்லை என்று கொஸ்லந்தையைச் சேர்ந்த சமூக சேவையாளரும், ஹல்துமுல்ல பிரதேச சபை உறுப்பினருமாகிய செல்வரட்ணம் சிறிகாந்தன் கூறுகின்றார்.

நிலச்சரிவு ஏற்பட்ட இடத்தில் எங்கு வீடுகள் இருந்தன, எங்கு கோவில் இருந்தது, எங்கு மக்கள் அதிகமாக வசித்தார்கள். இடிபாடுகளும் வந்தடைந்திருக்கக் கூடிய இடம் எது என்பதை அந்தப் பகுதியில் வசித்தவர்களே நன்கறிவார்கள். இடைத்தங்கல் முகாமில் இளைஞர்கள் காலையில் இருந்து வேலையற்றவர்களாகவே இருக்கின்றார்கள்.

காணாமல் போயிருப்பவர்கள் 38 பேரில் இதுவரையில் 11 சடலங்களையே கண்டுபிடித்திருக்கின்றார்கள். இவற்றில் 7 சடலங்கள் பொதுமக்களின் உதவியுடனேயே கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. காணாமல் போயிருப்பவர்களின் சடலங்களைக் கண்டுபிடித்து இறுதிக் கிரியைகளைச் செய்ய வேண்டும். எதிர்கால நன்மைகளுக்காகவும் நட்டஈடு உட்பட்ட கொடுப்பனவுகளுக்காக அவர்களுடைய மரணங்கள் சட்டரீதியாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதைப் பொதுமக்கள் எதிர்பார்த்திருக்கின்றார்கள் என்றார் ஹல்துமுல்லை பிரதேச சபை உறுப்பினரும் சமூக சேவையாளருமாகிய செல்வரட்ணம் சிறிகாந்தன். (செ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Hey Kids! It's time for Visalam Cup Competitions!

Come on! Take part and prove your talents!
You could walk away with Cups, Certificates, Courses upto 100% off & CASH prizes of 1st - Rs. 4000/=, 2nd - Rs. 2500/=, 3rd Rs.1500/=

**ART**
Theme: Care for our world
Drawings should be on an A4 size paper using your own materials

**English**
Written: Vocabulary, Grammar, Essay, & Comprehension
Spoken: Poem, Vocabulary, Commands, Sentence Making & Conversation

**QUIZ**
Math, Science, English, Tamil, History, Geography, ICT, Current affairs - Sri Lanka & World

**ICT**
Paint, Typing, MS Office & MCQs

**CHESS**

**Here's how to enter:**
Minimumin age for entry is 5 years; can enter for any No. of competitions
Will be held in 3 levels - Under 7, Under 11 & Under 13 (and in rounds if needed)
All entries must be submitted on an A4 paper with the following details on or before 30th November 2014:
Name, Age, Date of Birth, Address, Contact Number, Parent's Name
Entry Fee: Rs. 500/= (for each competition)

Visalam — Locally, widening to beyond
127/1 Temple Road, Jaffna, Srilanka
Phone: 021 221 9695 Mobile: 075 979 9695
Email: admin@visalamholdings.com
web: www.visalamholdings.com (C-9003)



யாழ் பல்கலைக்கழகத்தின் 30வது பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெறும் 1,644 பேரையும்
**சிகரம் வாழ்த்துகின்றது!**

உங்கள் பட்ட மேற்படிப்பை (PGD/Masters/PhD)
**பிரித்தானிய, அவுஸ்ரேலிய, நியூசிலாந்து, கனடா, மலேசியா**
உள்ளிட்ட எந்தவொரு நாட்டின் முன்னணி பல்கலைக்கழகத்திலும் தொடர்ந்து, விரும்பிய நாட்டில் தொழில்வாய்ப்புடன் குடியுரிமை பெற்றுக்கொள்ள

அந்தந்த நாடுகளின் பல்கலைக்கழகங்கள், அரச அங்கீகாரம் பெற்ற குடிவரவு & விசா முகவர்களை நேரடியாகப் பிரதிநிதித்துவப்படுத்தும்

**உங்கள் நம்பிக்கையின் சிகரம்**

SIKARAM — Education Abroad, Work & Visa Solutions
Sikaram (Pvt) Ltd.,
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி,
யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0773616798 / 021 222 00 11

எமது சேவைகள் பற்றி முழுமையான விபரங்களை
www.sikaram.lk இணையத்தில் பார்வையிடுங்கள் (சி-9009)



## 2013/2014 A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே!!!

World Education Consultancy
**இலவச கல்விச்சுற்றுலா**

NORTHSHORE CAMPUS-COLOMBO



தலைநகர் கொழும்பை மையமாக கொண்டு இயங்கிக்கொண்டிருக்கும் NORTHSHORE UNIVERSITY ஐ பார்வையிடுவதற்குரிய அறிய சந்தர்ப்பம்

மாணவர்கள் 14ம் திகதி பி.ப 5.00 க்கு முன்னதாக உங்கள் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.
(பெண்பிள்ளைகள் உங்கள் பெற்றோர்களின் உதவியுடன் வரமுடியும்)

மேலதிக விபரங்களுக்கு:
WORLD EDUCATION CONSULTANCY
(சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு அருகே)
0779265447 0217200989 (சி-8987)


## 7 தமிழ்...

அகதிகளுக்கான ஐ.நா உயர் ஆணையம் அகதிகளாக அங்கீகரித்து வேறு நாடுகளில் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இதற்கமைய, அமெரிக்கா, பின்லாந்து மற்றும் சுவீடன் ஆகிய நாடுகள்ஏனைய அகதிகளை ஏற்றுக் கொண்ட நிலையில், நான்கு ஆண்கள், இரண்டு பெணகள் மற்றும் ஒரு குழந்தை உள்ளிட்ட ஏழு பேர் மட்டும் எஞ்சியிருந்தனர்.

ஐக்கிய அரபு குடியரசின் ஜெபல் அலி துறைமுகத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக தங்கியிருந்த இவர்களை ஏற்றுக்கொள்ள தற்போது பிரேசில் முன்வந்துள்ளது.

இதையடுத்து, இந்த ஏழு பேரும் நாளைதிங்கட்கிழமை இரவு டுபாய் விமான நிலையத்தில் இருந்து பிரேசிலின்சாவோ போலோ விமான நிலையத்துகுப் புறப்பட்டுச் செல்லவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)


வெளிவாரிப்பட்டப் படிப்புகளுக்கு பதிவுசெய்து கொள்வதற்கான ஓர் சந்தர்ப்பம்

**External Degree**
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின்

**BBA, B.Com BA**
அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது
க்கான விண்ணப்பம் கோரப்படும்
க்கான முற்பதிவும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது

★விரிவுரைகள் தமிழ் மொழி மூலம் பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் வாரஇறுதி தினத்தில் ஒரு நாள் மட்டும் (சனி அல்லது ஞாயிறு) நடைபெறும்.
கற்கை நெறியின் காலம் 3 வருடங்கள்

● பதிவு செய்வதற்கான தகைமை :
க.பொ.த உயர் தரத்தில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி
கீழ்வரும் கற்கை நிலையங்களில் பாடநெறியைத் தொடரலாம்

KANDY | KURUNEGALA | COLOMBO
BERUWELA | THIHARIYA | AVISSAWELLA
MAWANELLA | HATTON | NUWARA ELIYA
BANDARAWELA | POLONNARUWA | PUTTALAM
BATTICALOA | KALMUNAI | VAVUNIYA
MANNAR | KILINOCHCHI | JAFFNA | TRINCO

குறிப்பு : ஒரு நிலையத்திற்கு போதிய அளவு மாணவர்கள் இல்லாதவிடத்து அண்மையில் உள்ள கற்கை நிலையத்துடன் இனைக்கப்படுவர்

விண்ணப்பப் படிவத்துக்கும் பதிவுகளுக்கும் தொடர்பு கொள்ளவும்
0777 71 71 29
0718 57 07 09

EXTERNAL DEGREE DIVISION (சி-9001)
**GOLDEN COLLEGE** CITY CAMPUS
548 | PERADENIYA ROAD | KANDY | 081 2205544
14, 7th Lane, Vairavarkovil Rd, Vairabapuliyankulam
Vavuniya. Tel : 0777 222 527



## வரவேற்பாளர் தேவை

யாழ்.நகரிலுள்ள தனியார் வைத்தியசாலைக்கு 18 வயதிற்கு மேற்பட்ட பெண் வரவேற்பாளர்கள் தேவை. விரும்புபவர்கள் 12.11.2014 புதன்கிழமை 514/18 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு சுயவிபரக் கோவையுடன் காலை 09.00 மணிக்கு வருகை தரவும்.
-பணிப்பாளர் (8238)



கோபுர தரிசனம் கோடி புண்ணியம்
**தென்னிந்திய தெய்வ தரிசனம்**
(கோயில்கள் சுற்றுலாத்தலங்கள் உள்ளடக்கம்)

ஐம்பூதஸ்தலங்கள், ஆறுபடைவீடு, நவக்கிரக கோயில்கள் சிதம்பரம், சீர்காழி, மதுரைமீனாட்சி, உச்சிப்பிள்ளையார், ஸ்ரீரங்கம், திருப்பதி, உட்பட 40 இற்கும் மேற்பட்ட கோயில்களையும் மற்றும் சுற்றுலாத்தலங்களையும் இந்த பயணத்தின் போது பார்வையிடலாம்.



**தரிசனம் : 15 நாட்கள் புறப்படும் திகதி : 14.12.2014**

இரு வழி விமான கட்டணம் (Return Air Ticket all Taxes) உயர்தரத்திலான மூன்று நேர சைவ உணவு, காலை, மாலை தேநீர் மற்றும் குளிர்பானம், சுத்தமான குடிநீர், குளியலறை இணைந்த தங்குமிட வசதி (Attched Bathroom) முழுசுற்றுலாவுக்கும் குளிரூட்டப்பட்ட வாகனம், திருப்பதியில் VIP வரிசையில் சென்று சுவாமி தரிசனம் செய்ய ஏற்பாடு செய்யப்படும். இரு வழி விமான நிலையத்திற்கான கட்டணம். Airport Transport up & Down

சென்னையில் பொருட்கள் கொள்வனவு செய்ய ஒரு நாள் ஒதுக்கப்படும்

ik tourism T.P: 077 10 10 104
கருணாகரப்பிள்ளையார் கோயில் வீதி, (இளந்தாரி கோயிலடி) இணுவில் கிழக்கு இணுவில் (சி-9002)



THE FIRST TIME யாழ்ப்பாணத்தில் முதல் முதலாக
2880 DPI



Gongzheng Thunderjet Digital Printer
(World Color Digital Technology)

NEW Photo Quality Printing

Jana Digital 0770731654

Photo Quality 40/=
Normal Quality 35/=

- பந்தல் பிறிண்டிங்
- பனர் பிறிண்டிங்
- விளம்பரப் பதாகைகள்
- ஸ்ரிக்கர்கள்
- லைட் பதாகைகள்

Light Board - 1Side - 450/= 2 Side - 500/=
Name Board - 1Side - 160/= 2Side - 230/= 1Side - 210/= 2Side - 320/=
3 வருட உத்தரவாதம்

Sticker Print 70/=
Backlit Print 70/=

ஜனா டிஜிற்றல் பிறிண்டிங் (7849)
மானிப்பாய் வீதி, ஆறுகால் மடம்.
021 221 3233, 077 073 1654


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.